முச்சந்தி முரளி



"அப்ப இண்டையோட வீடு ரண்டாப் போகப்போறது உறுதியாகிட்டு கண்டியளோ"

Registered as a Newspaper
பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 56

ஞாயிற்றுக்கிழமை
21 ஜனவரி 2024

தை 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



அடுத்த மாதத்தில்

# அமைச்சரவை மாற்றம்!

கொழும்பு, ஜனவரி 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை அடுத்த மாதம் மறுசீரமைக்கப்படவுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

15



## தமிழரசுக் கட்சியின் தலைமை யாருக்கு?

## காசோலை மோசடி: 6 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன. 21

மாணிக்கக் கற்களைக் கொள்வனவு செய்துவிட்டு அதற்குரிய பணத்தை வழங்காமல் மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் உள்ளிட்ட ஆறு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

15

## அத்துமீறி மீன்பிடித்த 40 இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 21

வடமாகாணக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தமைக்காக கைதுசெய்யப்பட்டுள்ள 40 இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

15

## கால்வாய்க்குள்ளிருந்து ஆணின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஜன. 21

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரடிப்போக்கு, பன்னங்கண்டி பகுதியில் வீதிக்கு அருகே உள்ள கால்வாயில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
ஜெயராம் டினோசன் (வயது - 34) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

15

## தமிழர்கள் அபிலாஷைகளை வென்றெடுக்கப் பொறிமுறை!

### தலைமைத் தேர்தலை முன்னிட்டு சிவஞானம் சிறீதரன் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 21

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தல் இன்று இடம்பெறவுள்ள நிலையில், இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றால் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை

15

## தமிழ்த் தேசியத்தை இறைமையாக வெல்வேன்!

### சுமந்திரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 21

தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், தமிழ்த் தேசியத்தை பேச்சளவில் அல்லாமல் இறைமையாக வெல்வேன் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத் தேர்தலுக்கான வேட்பாளர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

15

## சிறீதரன் - சுமந்திரன் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 21

இலங்கை தமிழரசுக் கட்சிக்கு புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று இடம்பெறவுள்ளது.
தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா செயற்பட்டு வந்தார். இந்த நிலையில் கட்சிக்குப் புதிய தலைவரொருவர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த நிலைப்பாடு எட்டப்பட்ட நிலையில் இன்று தேர்தல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

15



## நயினை அம்மனுக்கு கும்பநீர் வந்தது!

யாழ்ப்பாணம், ஜன. 21

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகத்துக்கு நேற்று கும்பநீர் எடுத்துவரப்பட்டது.
கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை காலை 9.38 மணி முதல் முற்பகல் 11.20 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

15

## மின்சாரம் தாக்கி இளைஞர் இறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். தாவடி, இயற்றாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

15

## 'ட்ரோன்' கமரா மூலம் டெங்குக் கண்காணிப்பு

### கொக்குவிலில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 21

'ட்ரோன்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டெங்கு நுளம்பு பரவும் இடங்களைக் கண்காணிக்கும் செயற்பாடு கொக்குவில் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
உயரமான கட்டடங்கள், வீடுகளின் கூரைப் பகுதிகளில் நீர் தேங்கும் இடங்கள் என்பன இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தின் இதர பகுதிகளிலும் இந்தத் தொழில்நுட்பம் விரைவில் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(அ-ம-66)

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதீட்சை வழங்கல்

கொடிகாமம், ஜன.21
யாழ்ப்பாணம், கொடிகாமப் பகுதியில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சிவதீட்சை வழங்கும்நிகழ்வு வடமராட்சி வியாபாரி மூலை இன்பர்சிட்டி திருவருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சைவப்புலவர் சி.க.கமலநாதன் தலைமையில் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.10-10.30 மணிவரை இடம்பெறவுள்ளது.
சிவதீட்சை பெற விரும்பும் அனைவரும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து உரிய வேளையில் வந்து பார்வதி பரமேஸ்வரனுடைய திருவருளைப் பெற்று சைவ அனுஷ்டானங்களையும் நெறிமுறைகளையும் பின்பற்றி சிவதீட்சையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-159)

## முல்லைத்தீவு நகரிலிருந்து

# பஸ் சேவை இன்மையால் கரையோர மக்கள் சிரமம்

**முல்லைத்தீவு, ஜன.21**
**முல்லைத்தீவு நகரத்திலிருந்து கடற்கரையோர கிராமங்களுக்கு உள்ளூர் போக்குவரத்துச்சேவை இடம் பெறவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

முல்லைத்தீவு நகரிலிருந்து கள்ளப்பாடு, தீர்த்தக்கரை, தியோகுநகர், சிலாவத்தை ஆகிய கிராமங்களில் ஆயிரத்து 300 குடும்பங்கள் வாழ்கின்றன. இந்தக் கிராமங்களில் வாழும் மக்கள் 2 கிலோ மீற்றருக்கு அதிகமான தூரம் பயணம் செய்தே பேருந்துகளில் பயணிக்க வேண்டிய நெருக்கடி நிலைமை தற்போதும் காணப்படுகின்றது.
கடந்த காலங்களில் மாவட்டச் செயலகம், கரைதுறைபற்று பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் இந்தக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ப-13)

# கரையோர பாதையமைக்க மீனவர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.21
முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் நலன் கருதி முல்லைத்தீவு சாலை தொடக்கம் அளம்பில் வரை கரையோரப் பாதை அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.
2010 ஆம் ஆண்டிலிருந்து இக்கோரிக்கைக்கான தீர்வு கிடைக்காமையால் பெருமளவு கடலுணவுகள் சிரமங்களுக்கு மத்தியிலேயே ஏற்றுமதி செய்யப்படுகின்றன எனவும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நடவடிக்கையில் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர். (ப-13)

# கலந்துரையாடல்

மன்னார் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இலங்கையின் 76 ஆவது சுதந்திரதின நிகழ்வு தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுக் காலை மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.
எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கையின் 76ஆவது சுதந்திரதினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட செயலர், திணைக்களத் தலைவர்கள், முப்படை அதிகாரிகள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-56)



# டெங்கு ஒழிப்பு செயற்பாடு யாழ்ப்பாணத்தில் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.21
யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டது.
நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட நோயாளர்கள் அதிகரித்த ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலுமுள்ள பொதுமக்கள் வீடுகளுக்கு சுகாதார அதிகாரிகள், நல்லூர் பிரதேசசெயலக உத்தியோத்தர்கள் , சமூக அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸார் விஜயம் மேற்கொண்டு நுளம்பு உற்பத்தியாவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வீட்டின் சுற்றுப்புறங்களைப் பார்வையிட்டு நுளம்பு உற்பத்தியாவதற்கு ஏதுவாக தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய பொருள்களை இனங்கண்டு வீட்டு உரிமையாளர்கள் உதவியுடன் அகற்றினர். டெங்கு நோய் பரவல் தொடர்பாக சுகாதாரத்துறையினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தலும் வழங்கினர். (ப)

# விளையாட்டரங்கு திறப்பு விழா

யாழ்ப்பாணம், இளவாலைப் பகுதியில் மக்கள் ஒன்றியப் பிரதான நிதிப்பங்களிப்புடன், மருத்துவர் மோகனின் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நிதிப்பங்களிப்புடன் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவர் மோகன் ஞாபகார்த்த உள்ளக விளையாட்டரங்கு சம்பிரதாயபூர்வத் திறப்பு விழா இளவாலை மெய்கண்டான் பாடசாலைக்கு அருகில் நேற்று சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெற்றது. (ப-66)


# வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்

யாழ். சௌக்கிய சேவை
கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன்
நிவர்த்திச் சங்கத்தின்
62 ஆவது
வருடாந்த பொதுக் கூட்டம்
21.01.2024 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை
தாதியர் பயிற்சிக் கல்லூரி
யாழ். போதனா வைத்தியசாலையில்
காலை 9.30 மணிக்கு நடைபெறும்
என்பதனையும் சகல அங்கத்தவர்
களையும் கலந்து சிறப்பிக்குமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.

பஞ்சாட்சரம் அரிகரன்
செயலாளர்


## ஹெரோய்ன் வழக்கு

# ஆயுட்காலச் சிறை விதித்தது நீதிமன்று

கொழும்பு, ஜன.21
ஹெரோய்ன் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வழக்கில் ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி மேல் நீதிமன்றம்.
இந்த வழக்கில் அரசு சார்பில் அரச சட்டத்தரணி நிஷாத் நாகரத்தினம் முன்னிலையாகி சாட்சியத்தை நெறிப்படுத்தியிருந்தார்.
முதலாம் எதிரி சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர.டி.சில்வாவும், இரண்டாம் எதிரி சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவும் வழக்கு விசாரணையில் முன்னிலையாகியிருந்தனர்.
கடந்த வியாழக்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது முதலாம் எதிரியின் சட்டத்தரணி சமூகமளிக்க முடியாமையால், அவருக்குப் பதிலாக சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா மன்றில் முன்னிலையாகி தண்டனை விதிப்பு தொடர்பில் சமர்ப்பணங்களை முன்வைத்தார்.
மரண தண்டனைக்குப் பதிலாக ஆயுட்கால சிறைத் தண்டனை விதிப்பதற்குப் போதியகாரணங்கள்உள்ளனஎன்றுஅவர் தனது சமர்பணங்களில் தெரிவித்தார்.
சமர்பணங்களின் பின்னர் முதலாம் எதிரிக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்த நீதிமன்றம், இரண்டாம் எதிரியை விடுதலை செய்தது. (எ-இ)


# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நன்றி நவிலலும்

கடந்த (23.12.2023) சனிக்கிழமை அன்று Cambridge -UK இல்
இறைபதம் எய்தியஎமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா பரமேஸ்வரன்

(S.L.A.S)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 20.01.2024 சனிக்கிழமை Cambridge -UK இல் இடம்பெற்றது. அதனைத்தொடரந்து வீட்டுக் கிருத்திய கிருயைகள் 22.01.2024 திங்கட்கிழமை அதே இடத்திலும் நடைபெறும்.
அவரின் ஆன்மா சாந்திக்காக இலங்கையில் **(கந்தர் மடம் மற்றும் உரும்பிராயில்)** நேரடியாக வும் தொலைபேசி மூலமும் அனுதபாம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அடியவர்கள் அனைவருக்கும் இத்தால் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிறப்பு 08.10.1942 இறப்பு 23.12.2023

பலாலி வீதி,
உரும்பிராய் மேற்கு.
077 634 1541

சகோதரர்கள்,
குடும்பத்தினர்.
S.K.Sivananthan
Regd.Licensad Surveyon


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி இடைநிறுத்தப்படும் மின்சாரசபை ஊழியர்கள்

## போராட்டங்களை அடக்குவதற்கு அரசாங்கம் புதிய வியூகம்

**கொழும்பு, ஜன.21**

**மின்சாரசபையை மறுசீரமைக்கும் சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட ஊழியர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.**

ஏற்கனவே 15 ஊழியர்கள் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த நிலையில், மேலும் 51 ஊழியர்கள் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று மின்சாரசபை தெரிவித்துள்ளது.

உத்தேச மின்சாரசபை சட்ட வரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார சபையின் ஊழியர்கள் கடந்த 3 ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் பகல் உணவுவேளையின்போது கொழும்பில் உள்ள மின்சாரசபையின் தலைமை காரியாலயத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 2 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின்சார சபையின் பதில் பொதுமுகாமையாளர் மின்சாரசபை சேவையாளர்களின் சகல விடுமுறைகளையும் இரத்துச் செய்யும் வகையில் விசேட சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தார். ஆயினும் சுற்றறிக்கையை பொருட்படுத்தாமல் மின்சார சேவையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிறுவன மட்டத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு எதிராகவும் பொது மக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையிலும் போராட்டத்தில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக நிறுவன மட்டத்தில் நடவடிக்கை எடுக்குமாறு மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர மின்சாரசபைக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து 66 ஊழியர்கள் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று மின்சாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## கொழும்பில் சேதமடைந்த மக்களின் குடியிருப்புகள்!

கொழும்பு, ஜன.21

கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் பொது மக்கள் வசிக்கும் சில குடியிருப்புகள் சேதமடைந்துள்ளதால், அவை இடித்து அகற்றப்பட்டு, குடியிருப்பாளர்களுக்கு மாற்று இடங்கள் வழங்கப்படும் என்று கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

கொழும்பு 13 இல் உள்ள 36/53 அடுக்குமாடிக் குடியிருப்பும் நாரஹேன்பிட்டிப் பகுதியில் உள்ள அபயராம அடுக்குமாடிக் குடியிருப்பும் இடிந்து விழும் அபாயத்தில் உள்ளன.

அந்தக் குடியிருப்பாளர்களுக்குப் புதிதாக ஒதுக்கப்பட்ட வீடுகளுக்குச் சிலர் செல்ல விரும்பவில்லை என்றும் அது தொடர்பில் எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் தற்போதுள்ள நிலைமையை விளக்கி, அவர்களை புதிய வீடுகளுக்கு அழைத்துச் செல்லும் பணி மேற்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## முதலாம் திகதிமுதல் மீண்டும் போராட்டம்

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கக் கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்களால் எதிர்வரும் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் பிரதிநிதிகளுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கையை ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார். (எ-இ)

## நிஷாந்தவை திருப்பி அனுப்பிய மக்கள்!

கொழும்பு, ஜன.21

புத்தளம், தளுவ பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றுக்காகச் சென்ற நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, பிரதேச மக்கள் வெளியிட்ட கடும் எதிர்ப்புக் காரணமாக அங்கிருந்து வெளியேறியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் தளுவ சந்தியில் இருந்த போது அங்கு சென்ற பிரதேசவாசிகள் அவரை தமது கிராமத்துக்குள் வரவேண்டாம் என எதிர்ப்பு வெளியிட்டனர். தங்கள் கிராமத்தில் எந்த அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என்றும், வெள்ளத்தில் பயிர்கள் அழிந்தபோது எவரும் வரவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

எந்த அரசியல்வாதியும் கிராமத்துக்குள் வர இனிமேல் இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். கிராம மக்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக இராஜாங்க அமைச்சர் திரும்பிச் சென்றுள்ளார். (எ-இ)



## கடலில் சிக்கிய படகுகளில் பெருந்தொகை ஹெரோய்ன்

கொழும்பு, ஜன.21

ஹெரோய்ன் என்று சந்தேகிக்கப்படும் பெரும்தொகைப் போதைப்பொருளுடன் இரு படகுகள் தெங்வேந்திரமுனைக் கடற்பரப்பில் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையிலேயே போதைப்பொருளுடன் படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தப் படகுகள் காலித்துறைமுகத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன என்றும், அதன்பின்னர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

### மனிதக்கடத்தல்

## இந்தியர்கள் மீது குற்றப்பத்திரிகை

கொழும்பு, ஜன.21

இலங்கையர்களை மனிதக் கடத்தலுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின்கீழ் 4 இந்தியர்களுக்கு எதிராக அந்த நாட்டுத் தேசிய புலனாய்வுச் சேவை பெங்களூர் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

2021ஆம் ஆண்டு 39 இலங்கையர்களைக் கனடாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி இந்தியாவுக்கு மனிதக் கடத்தல் மேற்கொண்டனர் என்று அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

## நாட்டில் மூடப்பட்ட 14,000 பண்ணைகள்

கொழும்பு, ஜன.21

இலங்கையில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பண்ணைகள் மூடப்பட்டுள்ளன என்று 'கோபா' எனப்படும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு தெரிவித்துள்ளது.

மாகாணங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் 'கோபா' குழுவில் தெரிவித்துள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளின் முன்னேற்றம் தொடர்பாக அண்மையில் 'கோபா' குழு கூடியது.

மூடப்பட்ட பண்ணைகளில் பெரும்பாலானவை சிறிய அளவிலான பண்ணைகள் என்றும், பெரும்பாலான பண்ணைகள் கால்நடைத் திருட்டுக் காரணமாக மூடப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் அதில் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

## பொலிஸாரின் தவறால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஜன.21

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாரம்மல பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த பட்டாரக லொறியொன்றை நிறுத்துமாறு பொலிஸ் அதிகாரிகள் இருவர் சைகைகாட்டினர்.

லொறி நிறுத்தப்படாமல் பயணித்த நிலையில் லொறியைத் துரத்திச் சென்ற பொலிஸார் அதனை மறித்து சாரதியின் தலைப்பகுதியில் துப்பாக்கியை வைத்துள்ளனர்.

இதன்போது துப்பாக்கி தவறுதலாக இயங்கியதால் துப்பாக்கிச் சூட்டில் சாரதி பலியானார்.

இந்தநிலையில் பொலிஸ் தரப்பில் தவறு நடந்துள்ளமை விசாரணையில் தெரியவந்ததையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதான உபபொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட இருவரும் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-44)

## நாடு முழுவதும் தட்டம்மைக்கு தடுப்பூசி

கொழும்பு, ஜன.21

நாடு முழுவதும் தட்டம்மை தடுப்பூசித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றும், இன்றும் 9 மாதக் குழந்தை முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு தட்டம்மை தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

தட்டம்மை தடுப்பூசி பெறாதகுழந்தைகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தடுப்பூசி மையங்களுக்குச்சென்று தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முடியும் என்று அமைச்சு கூறியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகம் பார்த்த சிறார்களுக்கு 12 ஆண்டுகள் சிறை!

## வடகொரியாவில் கொடூரம்

பியாங்யாங், ஜன.21

தென்கொரிய நாடகத் தொடரைப் பார்த்தமைக்காக இரண்டு சிறுவர்களுக்கு வடகொரியா பகிரங்கரமாக 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

சர்வதேச ஊடகமான பி.பி.சி. இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. வடகொரியாவில் தொலைக்காட்சி உள்ளிட்ட தென்கொரிய பொழுதுபோக்குகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# இஸ்ரேல் கப்பல்களே செங்கடலில் இலக்கு!

## சமாளிக்கின்றது ஹவுத்தி குழு



லண்டன், ஜன.21

**செங்கடலில் வர்த்தகக் கப்பல்கள் மீதான தாக்குதல்களின் தீவிரத்தை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என்று யேமனின் ஹவுத்தி கிளர்ச்சிக் குழு தெரிவித்துள்ளது. இஸ்ரேலுடன் தொடர்புடைய கப்பல்கள் மட்டுமே இலக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.**

அதேவேளை அமெரிக்காவும், பிரித்தானியாவும் தமது இலக்குகள் மீது நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்றும் அந்தக் குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

எங்களது அழுத்தம் இஸ்ரேல் மீது மட்டுமே உள்ளது. வேறு எந்த நாட்டுக்கும் அழுத்தம் கொடுப்பது எங்கள் நோக்கம் அல்ல என்று அமைப்பின் செய்தித் தொடர்பாளர் மொஹமத் அப்துல் சலாம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல், காஸா மீது போரை ஆரம்பித்த பின்னர் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகச் செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேலுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகக் கப்பல்கள் மீது ஹவுத்தி போராளிகள் அமைப்பு ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்தி தாக்குதல்களை நடத்தியது. அதையடுத்து யேமனில் உள்ள ஹவுத்தி முகாம்கள் மீது அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் கூட்டாக வான்வழித் தாக்குதல்களை நடத்தின. இந்தப் பின்னணியிலேயே ஹவுத்தி அமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (எ-இ)



# சாதனை படைத்தது ஆர்னோல்ட் கடிகாரம்

லண்டன், ஜன.21

ஹொலிவூட்டின் பிரபல நடிகரும் அமெரிக்கா கலிப்போர்னியா மாநிலத்தின் முன்னாள் ஆளுநருமான ஆர்னோல்ட் சுவாஸ்னேக்கரின் கைக்கடிகாரம் ஏலத்தில் சுமார் 2 லட்சத்து 93 ஆயிரம் யூரோவுக்கு விற்பனைசெய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

பருவநிலை மாற்றம் தொடர்பான தனது அறக்கட்டளைக்காக இந்தக் கைக்கடிகாரத்தை அவர் ஏலத்தில் விற்பனை செய்யவிருந்தார். ஏலத்தின் ஆரம்பத் தொகை 50 ஆயிரம் யூரோ என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஒஸ்திரியாவில் நடந்த ஏல விற்பனையில் அந்தக் கைக்கடிகாரம் 2 லட்சத்து 93 ஆயிரம் யூரோவுக்கு ஏலம் போயுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கடிகாரம் ஆர்னோல்ட் சுவாஸ்னேக்கருக்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கைக்கடிகாரமாகும். (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனக்கசப்புகள் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். நண்பர்கள் வகையில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. விநாயகரை வழிபடுவது நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அனுகூலம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும் நாள். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்:** திய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். யோகா தியானத்தில் மனம் லயிக்கும். புதிய பாதை தெரியும் நாள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். இலாபம் அடைவீர்கள். வாகனங்களை சரி செய்வீர்கள். ஒழைப்பால் உயரும் நாள். வழிபட தடைகள் விலகும். இழப்புகளை சரி செய்வீர்கள். நிம்மதி உண்டாகும். உற்சாகமான நாள்.

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் இலாபம் சம்பாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**விருச்சிகம் :** மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

**தனுசு:** சோர்வு களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனசு காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மகரம்:** எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களால் பிரச்சினைகள் வந்து செல்லும். அதிகம் உழைக்க வேண்டிய நாள். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கும்பம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்னுரிமை கிடைக்கும். மரியாதை கூடும் நாள்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றிபெறும்.

# அணு ஆயுத சக்தி கொண்ட வடகொரியாவின் ட்ரோன்!

## கூட்டு இராணுவப் பயிற்சிக்குப் பதிலடி

பியாங்யாங், ஜன.21

அணு ஆயுத சக்தி கொண்ட ஆளில்லா விமானம் வடகொரியாவால் சோதனை செய்யப்பட்டுள்ளது. மேற்குக் கடற்பகுதியில் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆளில்லா விமானம் துறைமுகங்கள் மற்றும் போர்க்கப்பல்களை அழிக்கும் திறன் கொண்டது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# மன்னரை விமர்சித்ததால் 50 ஆண்டுகள் சிறை

பாங்கொக், ஜன.21

தாய்லாந்து மன்னராட்சியை அவமதித்து விமர்சித்த நபருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் 50 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. கடுமையான சட்டங்கள் நடைமுறையில் இருக்கும் தாய்லாந்தில் இவ்வாறான கடுமையான தண்டனை விதிக்கப்படுவது இதுவே முதல்முறை என மனித உரிமைக்குழுக்கள் தெரிவித்துள்ளன. அரசியல் உரிமை ஆர்வலரான 30 வயதான மோங்கோல் திரகோட் என்பவருக்கே இந்தச் சிறைத்தண்டனையளிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MOBILE

SOCIAL lite



NONSTOP DATA
ரூ. 221/- ரீலோட் செய்யுங்கள்
30 நாட்கள் முழுவதும்
செயற்படுத்துவதற்கு #170# அழையுங்கள்
Mobitel Selfcare App
SLTMOBITEL

metro Voyage

# JOB VACANCIES

## TRAVEL ASSISTANT

**Responsibilities**
- Best customer services
- Handle visa requirements when required
- Coordinating with airlines & other authorities
- Reporting & record keeping

**Requirements**
- Relevant qualification to the field
- 3 Passes in G.C.E Advance Level
- Fluency in all two languages (English & Tamil)
- Age should be below 28

## TICKETING EXECUTIVE

**Responsibilities**
- Handling air ticket issuance
- Coordinating with customers & sub-agents
- Use your own previous experience to execute best customer service

**Requirements**
- Relevant qualification to the field
- Fluency in all two Languages (English & Tamil)
- Excellent destination knowledge
- At least with 2 years of experience
- Age should be below 28 years

## ACCOUNTS EXECUTIVE

**Responsibilities**
- Monthly accounts oversight & preparation
- Accounts preparation, analysis, & reconciliation
- Liaising with banks, auditors and IRD
- Supervising finance department's operations

**Requirements**
- Minimum qualification of diploma, added advantage
- 1+ Year experience, incl. Audit, in similar role
- Strong tech accounting skills & computer literacy

## DRIVER - HEAVY VEHICLE

**Requirements**
- A valid driving license & heavy vehicle license
- Minimum 2 years of experience in heavy vehicle

A Step Ahead

hire@lk.metro.voyage / (011) 255 3441 / 565, Hospital Road, JAFFNA

max adz




# திறப்பு விழா அழைப்பு



நிகழும் சுப மங்களகரமான சோபகிருது வருடம்
**தை மாதம் 7ஆம் நாள் (21.01.2024)**
**ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.35 மணிமுதல்**
**12.40 மணியவரையுள்ள** ஏகாதசி திதியும்
ரோகினி நட்சத்திரமும் சித்த யோகமும்,
மேட லக்கின சுபயோக
சுபமுகூர்த்த வேளையில்

**25 வருட சேவையுடன்**
வாடிக்கையாளர்கள்
மனம் கவர்ந்த

## மகா சில்க்ஸ் ஸ்தாபனம்

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராயயில் உதயமாகின்றது.

அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்
பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
தொ.பே.இல. 021 222 7359

# இலங்கையில் மாண்டொழின் வாத்தியத்தை அரகேற்றி அறிமுகப்படுத்திய முதல் நாள்





இலங்கையில் கர்நாடக சங்கீதத்தை மாண்டொழின் வாத்தியக் கருவியில்
**விஸ்வநாதக் குருக்கள் சிவகுமார் சர்மா** அவர்களிற்கு
**திருமதி கோகிலத்வனி விஜயராகவன்** அவர்களின் முயற்சியினால்
மாண்டொழின் வாத்தியத்தைக் கற்பித்து
**அரங்கேற்றி அறிமுகப்படுத்தி இலங்கைக்கு பெருமை**
**தேடிக்கொடுத்த முதல் நாள் 1999.01.24**

இவ் நிகழ்விற்கு **கலாசார அமைச்சின் முன்னைநாள் மேலதிக செயலாளர்**
**திருமதி R.கைலாசநாதன்** அவர்கள் தலைமை தாங்கினார்.

**திருமதி கோகிலத்வனி விஜயராகவன்** அவர்களின் தனிப்பட்ட முயற்சியையும் பல
வாத்தியக் கருவிகளை கையாளும் திறமையையும் உற்றுக் கவனித்த முன்னைநாள் மேலதிக
செயலாளர் **திருமதி R.கைலாசநாதன்** அவர்களால்
**திருமதி கோகிலத்வனி விஜயராகவன்** அவர்களிற்கு **"வாத்தியவாணி"**
எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இவரது சங்கீத ஞானத்தையும் இசைச் செயற்பாடுகளையும் கௌவிக்கும்
முகமாக கடந்த **18.02.2023** சிவராத்திரி தினத்தன்று
**"வாத்தியவாணி" கோகிலத்வனி விஜயராகவன்** அவர்களுக்கு **"கலாசூரி"**
என்ற பட்டத்தினை **கீரிமலை தேவஸ்தான ஆதின கர்த்தா**
**ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்**
அவர்களின் ஆசியுடன் **சிவாகமபானு சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள்**
அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து **"கலாசூரி" கோகிலத்வனி விஜயராகவன்** அவர்களிற்கு
கொழும்பு தமிழ்ச்சங்கத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வில் **(2023.03.26)**
அவரது மேலாண்மையைப் பாராட்டி **"மகளிர்தினம்"** நினைவுச் சின்னம் வழங்கி
கௌரவிக்கப்பட்டது.

**தகவல்: "ப்ருந்த கான லய" அங்கத்தவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எம்.ஜி.ஆர். பிறந்ததினம் யாழில் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 21
தென்னிந்தியத் திரைப்பட நடிகரும், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான மறைந்த எம்.ஜி.ஆரின் 107ஆவது பிறந்ததினம் யாழ்ப்பாணம், பாஷையூர் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.
நிகழ்வில் எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதுடன் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகளும், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ரி-20)

# அனர்த்தப் பாதுகாப்புக்கான உபகரணங்கள் கையளிப்பு!!

மன்னார், ஜன. 21
மன்னார் மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையில் அவசர அனர்த்தப் பாதுகாப்பு உபகரணங்களை மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன் இராணுவ மற்றும் கடற்படைக் கட்டளைத் தளபதிகளிடம் கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்குக் கையளித்தார். இந்தநிகழ்வில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவ, கடற்படை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ப-213)





# தைப்பொங்கல் நிகழ்வு

வடக்கு மாகாண சுகாதார அமைச்சும், மாகாண சுகாதாரத் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த தமிழர் திருநாளான தைப்பொங்கல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சின் வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ப-66)



பருத்தித்துறை பிரதேசசபையின் திட்டமிடல் பிரிவின் ஏற்பாட்டில் தலைமைக் காரியாலயத்தில் ஐந்து குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாகத் தையல் இயந்திரங்கள் மற்றும் துவிச்சக்கரவண்டி என்பவற்றை பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் அ.விநோராஜ் கடந்த புதன்கிழமை வழங்கி வைத்தார். (ப-100)

இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பொங்கல் விழா தூதரகத்தின் துணைத் தூதுவர் இரத்தினசிங்கம் கோகுலரங்கன் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது. (ச)







# உலருணவுப் பொதிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 21
சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் உரும்பிராயில் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்ற 100 குடும்பங்களுக்கு 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்ற திட்டத்தின் மூலம் உலருணவுப் பொதிகளை தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வழங்கியது.
அமரர் பொ.குமாரசாமி நினைவாக அவரது குடும்பத்தினரின் நிதி அனுசரணையோடு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன் இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார். (ப-27)



# காணி உறுதிகள் கையளிப்பு

சுன்னாகம், ஜன. 21
சுன்னாகம் மற்றும் இணுவில் சமுர்த்தி வங்கிகளுக்கான காணி உறுதிப் பத்திரங்களை உடுவில் பிரதேச செயலாளர் த.முகுந்தன் மாவட்டச் சமுர்த்திப் பணிப்பாளர் எவ்.சி.சத்தியசோதியிடம் உடுவில் பிரதேச செயலகத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமை கையளித்தார். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரணில் எந்தப்பக்கம்?

'கிழக்கு ஜெருசலேம், காஸா, மேற்குக்கரை இவற்றை உள்ளடக்கியதாக பலஸ்தீனத் தனி நாட்டை அங்கீகரிக்கவேண்டும். அதுவே இஸ்ரேல் - ஹமாஸ் - பலஸ்தீனம் இடையே இடம்பெற்றுவரும் பல தசாப்தகால மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஒரே தீர்வு' என்று வலியுறுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. உகண்டாவின் தலைநகர் கம்பலாவில் இடம்பெற்றுவரும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, 'மாநாட்டின் கருத்தியலுக்கும் தனது அரசியலுக்கும் இடையில் இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட' இந்தக் கருத்தைக் காத்திரமாக முன்வைத்திருக்கின்றார் அவர். 'அங்கீகரித்தல்', 'ஏற்றுக்கொள்ளல்', 'பொறுப்புக்கூறல்' இவை தொடர்பில் கதைப்பதற்கும், கருத்துத் தெரிவிப்பதற்கும், மா நாடுகளில் பங்கெடுப்பதற்கும் ஜனாதிபதி ரணிலுக்கு மட்டுமல்ல, கொழும்புத் தலைவர்கள் எவருக்குமே அருகதையில்லை தான். ஆனால், நாணயங்களால் பின்னப்பட்ட நவீன வர்த்தக உலகை - சர்வ வல்லமையும் பொருந் திய நாடுகளை, உச்சக்கட்ட இராஜதந்திரத்துடன் அணுகும் கைங்கரியத்தையே ஜனாதிபதி ரணில் மிகக் காத்திரமாகவும் நேர்த்தியாகவும் மிகக்குறுகியகால இடைவெளியில் வெளிப்படுத்தியுள்ளார். அரசியல் விமர்ச னங்களை ஓர் ஓரமாக வைத்துவிட்டு, ரணிலின் சர்வதேச நகர் வுகளை ஏற்கவும் ரசிக்கவும் வேண்டியிருக்கின்றது. கொழும்பின் ஏனைய தலைவர்களை விட ரணில் தனித்து நிற்கும் இடமும் இதுவே.

இன்றைய திகதியில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் சர்வதேச வர்த்தகத்துக்கும் - சர்வதேசக் கடற்பரப்பில் பயணிகளுக்கும் பாதகத்தனங்களை செய்வதை நோக்காகக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிவித்து, கடந்த 24 மணி நேரத்துக்கு முன்பதாக அவர்களை சர்வதேசப் பயங்கரவாதிகளாக அறிவித்தது அமெரிக்கா. இந்த அறிவிப்பு வெளிவருவதற்கு சில நாள்களுக்கு முன்னர் ஹவுத்திகளிடமிருந்து கப்பல்களைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் தன் கடற்படையை இணைத்தார் ரணில். இதற்கு இலங்கைக்குள் இருந்து கண்ட னங்கள் குவிந்தன. ஆனால் தன் நிலைப்பாட்டில் ரணில் உறுதியாகவிருந்தார். இதனால், அமெரிக்காவின் பார்வையில் 'ஹவுத்திகளை எதிர்க்கின்ற ஒரு நியாயவாதி'தான் ரணில்.

ஆனால், இதே ரணில்தான் தற்போது, 'கிழக்கு ஜெருசலேம், காஸா, மேற்குக்கரை இவற்றை உள்ளடக்கியதாக பலஸ்தீனத் தனிநாட்டை அங்கீகரிக்கவேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார். பலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரிக்க வேண்டும் என்பது ஹவுத்திகள் காலாகாலமாக முன்வைத்துவரும் கோரிக்கை. தலைநகர் சனாவில் கொடியேற்றவேண்டும் என்பதும், அங்கீகரிக்கப்பட்ட பலஸ்தீனம் என்பதும் ஹவுத்திகளின் இரு கண்கள். செங்கடலில் பயணித்த கப்பல்களை ஹவுத்திகள் தாக்கியமைக்குக் காரணம்கூட, பலஸ்தீனத்தின் மீதான இஸ் ரேலின் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும் என்பதற் காகத்தான். ஆக, ரணில் இப்போது 'எந்தப் பக்கம்?'. ரணில் பலஸ்தீனத்துக்கானவர் என்றால், 'ஹவுத்திகளுக்கு எதிராகக் கடற்படையை அனுப்பினாரே' என்ற விவா தப்புள்ளியும், ரணில் இஸ்ரேலுக்கானவர் என்றால், 'பலஸ்தீனத்தை அங்கீகரிக்குமாறு வலியுறுத்துகின்றாரே' என்ற விவாதப்புள்ளியும் அவர் மீதான விமர்சனங்களைத் துடைத்தெறிகின்றன.

இந்த நூற்றாண்டுக்கான உலகம் வர்த்தக உலகம் மட்டுமல்ல, இராஜதந்திரத்துக்கும் உரித்தான ஒன்றும்கூட. விசுவாசம் காட்டுவதெல்லாம் இங்கு வேற்று மொழிச்சொல். 'தக்கன பிழைக்கும்' என்பதே மெய். இவ்வாறான இராஜதந்திர உலகில், 'நான் சக்கரவர்த்தியடா...!' என்று ரணில் தைரியமாகப் பாடலாம். தீர்வு... தீர்வு... என மாற்றுச் சிந்தனையின்றி இந்தியாவுக்கு விசுவாசம் காட்டிக்கொண்டிருக்கும் 'பழுத்த தமிழ்த் தலைவர்களுக்கு' ரணில் ஒரு முன்மாதிரிகை. இராஜதந்திரம் என்றால் என்ன? சர்வதேச வல்லாதிக்கச் சக்திகளை எம்மை நாடிவரும் அளவுக்கு வியூகங்களை வகுப்பது எப்படி? இவற்றையெல்லாம் எம் தமிழ்த் தலைவர்கள் ஒரு பாடப் புத்தகத்துடன் சென்று ரணிலிடம் கற்றுக் கொண்டாலும் அதில் தவறில்லை.



# இலங்கைச் சட்டங்கள் சர்வதேச தரத்திலாம்!

## ஐ.நா. அதிகாரிக்கு விஜயதாஸ விளக்கம்

**கொழும்பு, ஜன.21**

**இலங்கையில் நீதியை நிலைநாட்டும் நடவடிக்கையை உறுதிப்படுத்துவதற்காக கொண்டுவரப்படும் புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் சர்வதேச தரத்துக்கு உட்படும் வகையில் வெளிப்படைத் தன்மையைப் பாதுகாக்கும் வகையில் அமையவுள்ளன என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அன்றூ பிரேன்ச் மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஆகியோருக்கிடையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதியை நிலைநாட்டும் நடவடிக்கையை மிகவும் உறுதிமிக்கதாக முன்னெடுத்துச் செல்வதற்காக கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட புதிய சட்டங்கள் அனைத்தும் ஜனநாயக முறையில் அனைவரின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு அந்த சட்டங்கள் அமைக்கப்பட்ட முறை தொடர்பாகவும் நீதியமைச்சர் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்குத் தெளிவுபடுத்தினார் என்று நீதியமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# விரைவில் இலத்திரனியல் கடவுச்சீட்டு

கொழும்பு, ஜன.21

இலங்கையில் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத்திணைக்களத்தின் பணிப்பாளர் ஐ.எஸ்.எச். ஜே. இலுக்பிட்டிய இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டுவிநியோகத்துக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# 986 பேர் கைது

நாட்டில் நேற்று நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 986 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (எ-இ)

# தென்னக்கோனுக்கு எதிராக மன்றில் மனு



கொழும்பு, ஜன.21

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதை தடுத்து நிறுத்தும் உத்தரவை பிறப்பிக்கக் கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில், சட்டமா அதிபர், அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டமை, கொழும்புப் போராட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதலைத் தடுக்கத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

# 7 ஆயிரத்தை நெருங்கும் டெங்குத் தொற்றாளர்கள்

கொழும்பு, ஜன.21

நடப்பாண்டின் முதல் 19 நாள்களில் நாடு முழுவதிலும் மொத்தமாக 6 ஆயிரத்து 998 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இரண்டு வாரத்துக்குள் 62 சுகாதார மருத்து அதிகாரிகள் பிரிவுகள் அதிக அச்சுறுத்தல் நிறைந்த பிரிவுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் ஆயிரத்து 440 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நாளை

22.01.2024

**திங்கட்கிழமை**

**தை 08**

சுபநேரம் : 12.35 - 02.05


ராகுகாலம் : 08.05 - 09.35

## நாளொரு நல்வார்த்தை

**உண்மையிலேயே சிறந்தவராக வேண்டுமெனில், ஒருவர் மக்களுடன் மக்களாக நிற்க வேண்டும், அவர்களுக்கு மேலே அல்ல.**

**- மான்டெஸ்கியூ -**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# திஸ்ஸமகார
# கனடாவுக்கு தக
# சேவையை
# 'டிபி எடியு
# அடுத்த
## நாட்டில் எல்லா
## டிஜிட்டல் தொ

ஐக்கிய அமெரிக்காவின் வட கலிபோர்னியாவில் அமைந்துள்ள 'சிலிக்கன் வெளி" எனப்படும் சிலிக்கன் பள்ளத்தாக்கு நகரம்" உலகின் பொருளாதாரத்தை புதிய பாதைக்கு அழைத்துச் சென்றது. டிஜிட்டல் தொழினுட்ப பயன்பாட்டில் ஆரம்பித்து மூன்றாவது கைத்தொழில் புரட்சியின் விசேட அத்தியாயமாகியுள்ள தகவல் தொழினுட்ப இயக்கத்தின் "அதிகார நிறுவனங்களாகக்": கருதப்படும், கூகுள், அப்பிள் போன்று பேஸ்புக், வட்ஸ்அப் மற்றும் இன்ஸ்ட்டகிராம் என்பனவற்றின் உரிமையைக் கொண்டுள்ள 'மெட்டா" ஆகிய நிறுவனங்களுடன் உலகின் பிரபல்யம் வாய்ந்த நிறுவனங்கள் பல அமைந்துள்ள 'சிலிக்கன் பள்ளத்தாக்கு" இன்று உலகப் பொருளாதாரத்தின் பாரியளவிலான சேவைகளைப் உருவாக்கும் பிரதேசமாகக் காணப்படுகின்றது. அதி உயர் தகவல் தொழினுட்ப துறையில் மிகப் பரந்துப்பட்டளவிலான மனித வளத்திற்கு உரிமைக் கோரும் பிரதேசமாக இது விளங்குகின்றது.

தொழினுட்பம் மட்டுமன்றி பொருளாதாரத்திலும், மனித வளத்திலும் அபிவிருத்தியடைந்துள்ள அந்த சிலிக்கன் பள்ளத்தாக்கின் ஆச்சரியம் மிக்க பகுதிக்குள் எம்மக்களையும் உள்ளடக்கச் செய்யும் வேலைத்திட்டம் "டிபி சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸ்" என்ற பெயரில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. தகவல் தொழினுட்ப துறையில் பத்து லட்சம் தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் அதாவது அத்துறையில் பாரியளவிலான மனித வளத்தை இந்நாட்டில் உருவாக்கும் நோக்கினை இலக்காகக் கொண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### முத்துக்களைக் கோர்த்தது போன்ற தொரு கல்வி வேலைத்திட்டம்

இது வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல. ஒன்றுடன் ஒன்று தொடர்ச்சியாக பிணைக்கப் பட்ட மிகவும் நடைமுறை சாத்தியமான மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் விரைவாக நடைமுறைப்படுத்தப்படக்கூடிய வேலைத்திட்டமாகும். நாட்டில் 25 மாவட்டங்களிலும் 331 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதன் ஸ்தாபகராக கன்னங்கர சிந்தனையின் டிஜிட்டல் பரிவர்த்தனையான "டிபி எடியுகேஸன்" ஊடாக நாட்டின் இலவசக் கல்வியை அடுத்த தளத்திற்கு அழைத்துச்சென்ற "தம்மிக்க பிரிஸ்சில்லா பெரேரா மன்றத்தின்" ஸ்தாபகரும் தலைவருமான, இலங்கை மக்கள் வாழ்க்கையில் பொருளாதார மறுமலர்ச்சியையும் மற்றும் உளவியல் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் முகமாக மிகவும் அக்கறையுடன் செயற்படும் தம்மிக்க பெரேரா அவர்கள் திகழ்கின்றார்.

"டிபி சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸ்" என்ற முறையான வேலைத்திட்டத்தின் பலனைப் பெறும் தருணமாகும் இதுவாகும். அந்த வேலைத்திட்டத்தின் முதல் படியாக :"டிபி எடியுகேஸன்" நிகழ்ச்சியின் கீழ் உள்ள "டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலை" மற்றும் "டிபி எடியுகேஸன் ஐ.டி கெம்பஸ்" வலையமைப்பு உள்ளன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு மென் பொருள் பொறியியலாளர்கள் பத்து இலட்சம் பேரை இந்நாட்டில் உருவாக்குவதாகும். அவற்றுள் 5 லட்சம் பெண்கள் என்ற அடிப்படையில் ஆண் பெண் இருபாலாருக்கும் சம சந்தர்ப்பம் வழங்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

"டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலை" என்பது இந்த தகவல் தொழினுட்ப கல்வி களஞ்சியத்தின் முதல் நுழைவாயிலாகும். அதாவது இந்த பாரியளவிலான கல்வி மேடையின் முழுமை வாய்ந்த பலம் பெற்றதொரு அடிப்படை அம்சமாகும். "டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலை" யினூடாக கணினி மொழியைக் கற்றுக்கொண்டு துறைசார் வல்லமையையும் அடிப்படையையும் பெற்றுக்கொண்ட மாணவர்கள் "டிபி எடியுகேசன் ஐ.டி கெம்பஸ்" வலையமைப்பினூடாக நாட்டின் அரசப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து வழங்கப்படும் சிறப்பு வாய்ந்த தகவல் தொழினுட்ப பாடநெறியினூடாக தொழிற்சார் தகுதியைப் பெற்றுக்கொள்ள முடியும். "டிபி சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸ்" ஊடாக இவ்வாறு பெறப்படும் தொழிற்சார் தகுதியை நிறைவேற்றிக்கொண்டவர்களை வெளிநாட்டு உள்நாட்டு தகவல் தொழினுட்ப தொழில்களுடன் தொடர்புப்படுத்தி தமது கிராமம், நகரத்திலிருந்து அந்த தொழிலை செய்வதற்காக தேவையான பௌதிக வசதிகளையும் தொழில் இடத்தையும் உருவாக்கிக் கொடுத்தலாகும்.

### வரையறையற்ற கல்விக்கான சந்தர்ப் பத்தை வேகமாகப் பற்றிக்கொள்ளுங்கள்.

முத்துக்களைக் கோர்த்தது போன்று மிகவும் சிறப்பாக ஆரம்பம் மத்திமம் இறுதி என்பனவற்றை சரியான முறையில் தொடுக்கும் இந்த கல்விப் பயணத்தை தன்னம்பிக்கையுடன் ஆரம்பிப்பவருக்கு. வெற்றிகரமாக பயண இலக்கை அடைவதற்கு தேவையான பாதையை இது வழங்குகின்றது. இது எந்தவிதமான பணச்செலவும் இன்றி பெற்றுக்கொள்ளக் கூடிய விலை மதிப்பற்ற ஓர் வரமாகும். இதற்கு வயது பேதமில்லை. இனம், மதம், சாதி, வர்க்க பேதமில்லை. வேகமாக கிரகித்துக் கொள்ள வேண்டிய ஆற்றலும் தேவையில்லை. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இணையத்தில் உள்ள பாடநெறியை தன்னால் விளங்கிக்கொள்ளக் கூடியளவுக்கு மீண்டும் மீண்டும் கற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளபடியால், தனது கிரகிக்கும் ஆற்றல் எனப்படும் "சுய கற்றல்" (ளநடக-ியஉநன டநயசனைபெ) படி தான் விரும்பும் நேரத்தில் கற்றுக்கொள்ள முடியும்.

### 25 லட்சம் பெறுமதியான பாடநெறியை இலவசமாக வழங்கும் டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலை என்றால் என்ன?

இது தகவல் தொழினுட்ப துறையின் "தாய் மொழியான" "கோடிங்" எனப்படும் குறியீட்டு முறைக்கான கற்றலுக்கான மகத்தான சந்தர்ப்பமாகும். இது 324 செயற்றிட்டங்கள் அடங்கிய முழுமையானதொரு பாடநெறியாகும். பிள்ளைகள் முதல் வளர்ந்தோர் வரை குறியீட்டு முறையினை ஆரம்பத்திலிருந்து கற்றுக்கொண்டு தொழிற்சார் மட்டம் வரை வளர்ச்சி பெறக் கூடியவாறு இந்த பாடநெறியின் உள்ளடக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்திற்காக ஒரு மணித்தியாலத்தை மட்டுமே நீங்கள் செலவிட வேண்டும். இந்த 324 செயற்றிட்டத்தின் அதாவது 324 மணித்தியாலங்களின் பெறுமதி எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியுமா? இதனை நீங்கள் சொந்த செலவில் கற்றீர்களாயின் அந்த பாடத்திட்டத்திற்காக 25 லட்ச ரூபாய்களை நீங்கள் செலவிட நேரிடும். அதாவது இலங்கையில் உள்ள எவரும் "மூன்றாவது கைத்தொழிற்புரட்சியின்" பங்குதாரராக தொழினுட்ப தொழில் உலகின் கதவை திறந்துகொள்வதற்காக 25 லட்ச ரூபாய் பெறுமதியான பாடநெறியை இலவசமாகக் கற்றுக்கொள்வதற்காக "டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலை"யினால் சந்தர்ப்பம் உருவாக்கித் தரப்பட்டுள்ளது. கோடிங் எனப்படும் குறியீட்டு முறையை கற்றுக்கொள்வதனூடாக கிடைக்கும் "21ம் நூற்றாண்டின் ஆற்றல்" என்று அழைக்கப்படும் கணித ஆற்றல், தர்க்க ஆற்றல், தொடர்பாடல் ஆற்றல், படைப்பாற்றல் ஆகிய ஆற்றல்கள் ஏற்பட்டு சுயமாக சரியான தீர்மானத்தை எடுக்கும் ஆற்றல் ஏற்படுகின்றது. இவற்றை கருத்திற்கொள்ளும் போது இது உண்மையில் விலை மதிப்பற்ற கல்விக்கான வாய்ப்பாகவே அமைகின்றது.

### தாய்மொழியில் கற்றுக்கொள்ளுங்கள் - படிப்படியாக சான்றிதழ் பெறுங்கள்

இதனைக் கற்றுக்கொள்ள மொழி ஒரு தடையல்ல. ஏனெனில், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இந்த பாடநெறி காணப்படுகின்றது. நீங்கள் செய்ய வேண்டியது னிஉழனந.டம என்ற இணைய முகவரியில் இணைந்து மிகவும் எளிமையான முறையிலும் இனிமையான அனுபவத்துடனும் வழங்கப்படும் "காலத்திற்கு ஏற்ற தொழினுட்ப கொடையை" உரித்தாக்கிக் கொள்ள முடியும்.

நீங்கள் அங்கு முழுமைப்படுத்தும் அனைத்து 8 செயற்றிட்டங்களுக்கும் இலவசமாக சான்றிதழையும் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று இந்த செயற்றிட்டத்தை முழுமைப்படுத்தி

# 'சிலிக்கன் வெளி ஐ.டி

விட்டு முன்னோக்கி செல்லும் போது 100 செயற்றிட்டங்களும், 250 மற்றும் 324 இலக்குகளை அடையும் போது தம்மிக்க பெரேரா அவர்களின் கையொப்பம் இடப்பட்ட அச்சு சான்றிதழையும் பெற முடியும். அண்மையில் திஸ்ஸமகாராமவில் 6 நிலையங்களைச் சேர்ந்த 1800க்கும் மேற்பட்ட மாணவர்கள் திஸ்ஸமகாராம சந்தகிரி உபய ரஜமகா விகாராதிபதி கலாநிதி வணக்கத்துக்குரிய தேவாலேகம தேரர் மற்றும் இந்த மகத்தான பணியின் ஸ்தாபகர் தம்மிக்க பெரேராவின் தலைமையில் நடைபெற்ற விழாவில் இக் கற்கைக்கான சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் அதிர்ஸ்டத்தைப் பெற்றிருந்தனர்.

இந்த அதிர்ஸ்டத்தைப் பெற்றுக்கொண்ட பெரும்பாலானவர்களின் பெற்றோர்கள் விவசாயிகளாகவும், மீன்பிடி தொழிற்துறையில் ஈடுபடுபவர்களாகவும், கைத்தொழில்துறையில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளனர். அல்லது கூலித்தொழிலாளர்களாக உள்ளனர்.

தனது சந்ததியின் உரிமையான கோடாரி, அரிவாள் என்பனவற்றுக்கு பதிலாக தகவல் தொழினுட்பத்தை கரங்களில் ஏந்திய அந்த புரட்சிகர வாழ்க்கை மாற்றத்திற்கு வித்திட்டது "டிபி எடியுகேசன்" அன்றி வேறு யார்?

### அரசப் பல்கலைக்கழகங்கள் மூன்றுடன் ஒன்றிணைந்து முன்னோக்கி

டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலை பாடத்திட்டத்தை வெற்றிகரமாக கற்று முடித்தவர்களுக்கு அடுத்த வெற்றிப் படியாக நாட்டின் பெயர் பெற்ற பல்கலைக் கழகங்களுடன் இணைந்து வழங்கப்படும் சிறப்பு வாய்ந்த பாடநெறி சிலவற்றை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிட்டுகின்றது. அவையாவன மொரட்டுவ பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம் மற்றும் களனி பல்கலைக்கழகத்துடன் இணைத்து வழங்கப்படும் "டிரேனி புல்-ஸ்டெக் டிவலெப்பர்"

பாடநெறி, செயற்றிட்ட முகாமைத்துவ பாடநெறி, SAP
பாடநெறி, தரவு விஞ்ஞான பாடநெறி என்பனவாகும். இ
பாடநெறிகளும் முற்றுமுழுதாக இலவசமாக வழங்கப்படு

### டிபி எடியுகேசன் ஐ.டி கெம்பஸ் உங்கள் அருகாமை

இலங்கையில் 331 பிரதேச் செயலகப் பிரிவுக
அவை அனைத்திலும் டிபி எடியுகேசன் கெம்பஸ்
விஸ்தரிக்கப்படுகின்றது. ஒரு பிரிவில் அதிக
இருப்பர்களாயின் ஒரு பிரிவில் ஒன்றுக்கு மேற்பட்ட
நிறுவ தயார் நிலை காணப்படுகின்றது. தற்போது 116 பி
120ல் கெம்பஸ் நிறுவப்பட்டுள்ளது.

இந்த 'டிபி எடியுகேசன் ஐ.டி கெம்பஸ்" வலையமை
நோக்கம் என்னவெனில், "டிபி கோடிங் பாடசால
நிகழ்ச்சித்திட்டம் அல்லது மொரட்டுவ, ருகுணு,




டி.பி. சிலிக்கன்வெலி ஐ.டி ஒபிஸ் - உத்கந்தர, சித்துல்பவ்வ,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காராவிலிருந்து தகவல் தொழினுட்ப ...யை வழங்கும் ...புகேஸனின்' ... பாய்ச்சல்

## ...ா பிரதேசங்களிலும் ... தொழில் புரட்சி

## ... ஐ.டி ஒபிஸ்' ஆரம்பம்

...வ பாடநெறி. SAP விசேட ERP ... என்பனவாகும். இந்த அனைத்து ...வசமாக வழங்கப்படுகின்றது.

**...ங்கள் அருகாமையில்**

...செயலகப் பிரிவுகள் உள்ளன. ...கேசன் கெம்பஸ் வலையமைப்பு ... பிரிவில் அதிகளவானவர்கள் ...ற்றுக்கு மேற்பட்ட கெம்பஸ்களை ...து. தற்போது 116 பிரிவுகள் உட்பட

...பஸ்" வலையமைப்பை நிறுவும் ...கோடிங் பாடசாலை" உள்ளிட்ட ...டுவ. ருகுணு. களனி ஆகிய

பல்கலைக்கழகங்களுடன் இணைந்து வழங்கப்படும் விசேட பாடநெறிகள் என்பனவற்றின் பணிகளை மேற்கொள்ள தேவையான பௌதீக சூழலை உருவாக்கிக் கொடுத்தலாகும். ஒருவருக்கு தனது வீட்டில் கணிணி வசதி இல்லாவிடின். இணைய பிரவேசம் கடினமாக இருக்குமாயின் அல்லது அவை அனைத்தும் இருக்கும் ஒருவருக்கும் டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலையில் கதவுகள் திறந்தே உள்ளன. இந்த கல்வித்திட்டத்தினூடாக கற்கும் எந்தவொரு நபருக்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக இந்த டிபி ஐ.டி கெம்பஸ் திறந்தே உள்ளது. அதனை எளிமைப்படுத்த ஆலோசகர்களும் இங்கு உள்ளனர்.

இவ்வாறு நிறுவப்பட்டுள்ள 120க்கு அதிகமான டிபி எடியுகேசன் ஐ.டி கெம்பஸ் வலையமைப்பினுள் 80.000க்கு அதிகமான மாணவர்கள் கற்றலை மேற்கொள்கின்றனர். இதனைத் தவிர மேலும் 120.000க்கு அதிகமானவர்கள் தமது வீடுகளில் இருந்துகொண்டே இந்த பாடநெறியைக் கற்று வருகின்றனர். இதன்படி தற்போது 200.000க்கும் அதிகமானவர்கள் டிபி எடியுகேசன் ஐ.டி கெம்பஸ் ஊடாக கற்று வருகின்றனர்.



உத்கந்தர,சித்துல்பவ்வ, திஸ்ஸமகாராம



டி.பி. சிலிக்கன்வெலி ஐ.டி கெம்பஸ் - உத்கந்தர,சித்துல்பவ்வ, திஸ்ஸமகாராம





இடது பக்கத்திலிருந்து வலப்பக்கமாக டிபி எடியுகேஷன் ஸ்தாபகர் தம்மிக்க பெரேரா, டிபி எடியுகேஷன் ஐ.டி கெம்பஸ் உத்கந்தர அதிபர் - உத்கந்தர ரஜமகா விகாராதிபதி பெரலிலெ பதும தேரர் எட்வென்டா டெக்னோலஜி தனியார் நிறுவனத்தின் ஸ்தாபகர் உதார விக்ரமசிங்க

### ரோபோவை இயக்குவதில் உலக சாதனை

அதுமட்டுமன்றி தற்போது "ரிமோட் ரோபோட்டிக்" எனும் உலகில் முதலாவது முறையாக கல்வி மேடையில் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சி யொன்றும் "டிபி எடியுகேசன்" ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனூடாக தொலைவில் இருந்துகொண்டு ரோபோக்களை இயக்கும் விதம் தொடர்பில் கற்பிக்கப்படுவதுடன் தற்போது 50 ரோபோக்கள் அடங்கிய தொகுதியை தொலைவில் இருந்துகொண்டு நேரடி கெமரா காட்சியினூடாக இயக்குவதற்கு இதனைக் கற்றுக்கொள்பவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 60 பாடங்கள் அடங்கிய பாடநெறியாக உள்ளதுடன் கல்வி மேடையொன்றினூடாக இவ்வாறான தொலைவில் இருந்து இயக்கக் கூடிய ரோபோக்களை இயக்கும் பாடநெறியை இவ்வாறு கட்டணம் இன்றி இலவசமாக வழங்குவது உலகில் இதுவே முதற்தடவையாகும்.

### கிராமத்திலிருந்து கொண்டே கனடாவில் வேலை செய்தல்- "டிபி சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸ்"

டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலை. டிபி ஐ.டி கெம்பஸ் ஆகியவற்றில் இந்த பாடங்கள் பற்றிய அறிவினை தத்துவார்த்த ரீதியாகவும் பிரயோக ரீதியாகவும் வெற்றிகரமாகக் கற்றுக் கொண்டவர்களுக்கு அடுத்தபடியாக வேலை வாய்ப்புக்கான கதவு திறக்கப்படுகின்றது. "டிபி சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸ்" ஊடாக தகவல் தொழினுட்ப துறையில் வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தி தரப்படுவதுடன் அந்த ஐ.டி ஒபிஸில் உள்ள கணிணி மற்றும் இணைய வசதிகளைப் பயன்படுத்தி கண்காணிப்பின் கீழ் தமது தொழிலில் ஈடுபடுத்த இங்கு அனைத்து வசதிகளும் வழங்கப்படுகின்றது.

இந்த 'டிபி சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸை" நிறுவும் செயற்பாட்டை உத்தியோகரீதியில் ஆரம்பிக்கும் செயற்பாடு அண்மையில் திஸ்ஸமகாராம உத்தகந்தர ரஜமகா விகாரை பகுதியில் திஸ்ஸமகாராம டிபி ஐ.டி ஒபிஸ் சித்துல்பவ்வ அதிபர் விகாராதிபதி பெரலிலெ பதும தேரரின் தலைமையில் மற்றும் தம்மிக்க பெரேராவினால் மேற்கொள்ளப்பட்டது. தற்போது "டிபி சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸ்" 6 ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவற்றில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் உள்நாட்டிலும். வெளிநாட்டிலும் தொழில் புரிந்து வருகின்றனர். இதன்படி திஸ்ஸமகாராமயிலிருந்து கனடாவில் உள்ள அலுவலகத்திற்கு தமது சேவைகளை வழங்குபவர்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தற்போது உருவாகியுள்ளனர். கனடாவில் மட்டுமன்றி அவுஸ்திரேலியா மற்றும் ஐக்கிய இராச்சியம். மாலைதீவு ஆகிய வெளிநாட்டவர்களுக்கும் அவர்கள் சேவையை வழங்குகின்றனர். உள்நாட்டில் போன்று வெளிநாட்டு நிறுவனங்கள் சில தமக்கு தேவையான மனித வளங்களைப் பெற்றுக்கொள்ளவென தற்போது "டிபி எடியுகேசனுடன்" பணியாற்றுவதுடன் எதிர்வரும் காலத்தில் மேலும் பல தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்காக உலகின் பிரபலம் வாய்ந்த தகவல் தொழினுட்ப நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை இடம் பெற்று வருகின்றது. இதன்படி தாம் வாழும் பிரதேசத்தில் தமக்கு பழக்கப்பட்ட சூழலில் இருந்துகொண்டு இணையத்தினூடாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பை பெறும் வாய்ப்பு இந்த "டிபி எடியுகேஸன்" ஊடாக கல்வியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு "சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸ்" ஊடாக கிட்டுகின்றது.

### அவுஸ்திரேலியா. ஐக்கிய இராச்சியம். மாலைதீவு

ஒரு சதம் கூட இலாப நோக்கம் இன்றி வழங்கப்படும் விலை மதிப்பற்ற வரப்பிரசாதம்

இவ்வாறான தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு சர்வதேச மட்டத்திலான ஊதியத்தை நோக்கி செல்லக் கூடிய ஆற்றல் டிபி எடியுகேசன் ஊடாக வழங்கப்படும் இந்த மகத்தான கல்வியினால் கிட்டுகின்றது. டிபி எடியுகேசன் கோடிங் பாடசாலை 100 பாடநெறியை முடித்தவர்களுக்கு அந்த கல்விக்கான செலவை ஆராய்ந்து பார்த்தால் அது ரூபா 10 லட்சமாக இருப்பதுடன. 250 செயற்றிட்டங்களை முடிப்பவர்களுக்காக அந்த செயற்றிட்ட செலவு ரூபா 20 லட்சமாகும். 324 செயற்றிட்டங்களையும் கற்றால் அதன் செலவு ரூபா 25 லட்சமாகும். இதன்படி எந்தளவுக்கு பெறுமதி வாய்ந்த கல்விக்கான வாய்ப்பை டிபி எடியுகேசன் ஐ.டி கெம்பஸ் நாட்டு மக்களின் நன்மை கருதி இப்பாடநெறிகளை முற்றுமுழுதாக இலவசமாக வழங்கி வருகின்றது என்பதனை உங்களால் சிந்தித்துப் பார்க்க முடியும்.

எவ்வாறாயினும். "தம்மிக்க பிரிஸ்சில்லா பெரேரா மன்றம்" இவற்றில் எந்தவிதமான இலாபத்தையும் எதிர்பார்க்கவில்லை. யுடியுப்பில் உள்ள டிபி எடியுகேசன் பாட நெறிகளால் எந்தவிதமான பணமும் ஈட்டப்படுவதில்லை. அதற்கு பதிலாக விளம்பரங்கள் அற்ற அதாவது எந்தவிதமான சிறு இடைஞ்சலும் இன்றி இந்த பாடங்களைக் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக "தம்மிக்க பிரிஸ்சில்லா பெரேரா மன்றம்" மேற்கொள்ளும் முதலீட்டின் பலனை நாட்டு மக்களே பெற்றுக்கொள்கின்றனர். நாட்டின் பொருளாதாரமே நன்மையடைகின்றது.


### வேலைவாய்ப்பை வழங்கும் பொருளாதாரப் புரட்சிக்கு ஆதரவாக ஒன்றிணைவோம்

டிபி எடியுகேசன் ஊடாக இந்நாட்டில் இவ்வாறு தகவல் தொழினுட்ப அறிவை முன்னேற்றி. அதன் ஆற்றலுடன் கூடிய பாரியளவிலான மனித வளத்தை உருவாக்கும் நோக்கம் காணப்படுவதுடன். இன்று 3500 டொலர்களுக்கு குறைவாக இருக்கும் நாட்டின் தனி நபர் வருமானத்தை 12 ஆயிரம் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கச் செய்வதும் மற்றுமொரு இலக்காகும். அதேபோன்று இன்று நாட்டில் உள்ள 63 சதவீதமான பயிற்சிப்பெறாத உழைப்பாளர் படையை 10 சதவீதமாகக் குறைத்தலும் ஓர் இலக்காகும். விரக்தி. மனஅழுத்தம். புலம்பலுக்கு பதிலாக மகிழ்ச்சியாக வாழக்கூடிய நாடாக உருவாக்கும் இலக்கினை பிரயோக ரீதியில் முன்னோக்கி எடுத்துச்செல்லும் செயற்பாடு இவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது. கொழும்பு கறுவாத்தோட்டத்திற்கு மட்டுமன்றி வடக்கில் புதுகுடியிருப்புக்கும். கிழக்கில் பொத்துவில்லுக்கும். தெற்கில் திஸ்ஸமகாராமவுக்கும் நாட்டின் மத்தியில் நோர்வுட்டிற்கும் சம கல்வி வாய்ப்பை. உயர்ந்தளவில் வழங்கி அந்த செயலுக்கு தேவையான மனித வளம் மற்றும் பௌதிக வளத்தினையும் தடையின்றி வழங்கும் நோக்குடன் "தம்மிக்க பிரிஸ்சில்லா மன்றம்" ஊடாக மேற்கொள்ளப்படும் இந்த பணியானது ஓர் மகத்தான தேசியப் பணியாகும் அதன் நலன்களைப் பெற அனைவரும் இதில் ஒன்றிணைவது அவசியமாகும். இந்த மகத் தான பணியின் ஸ்தாபகர் தம்மிக்க பெரேரா அவர்கள் குறிப்பிடுவது போன்று ஜே.ஆர் ஜயவர்தனவின் சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் ஆர்.பிரேமதாசவின் ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பின்னர் இந்நாட்டில் அதிக வேலைவாய்ப்பை உருவாக்கும் வேலைத்திட்டமாக இந்த "டிபி எடியுகேசன்" ஊடாக வழங்கப்படும் டிபி கோடிங் பாடசாலை. டிபி எடியுகேசன் ஐ.டி கெம்பஸ். டிபி சிலிக்கன் வெளி ஐ.டி ஒபிஸ் என்பன ஒன்றிணைந்த திட்டம் உள்ளது. இது உலகப் பொருளாதாரப் போக்கினை அவதானித்து உருவாக்கப்பட்டதாகும். 2028ல் குறியீட்டாளர்கள் 80 மில்லியன் பேருக்கு உலகளாவிய மட்டத்தில் கேள்வி ஏற்படும் என்ற எதிர்வுகூறலை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டதாகும். அந்த கேள்விக்கு ஏற்றாற்போல் எமது மனித வளத்திற்கு "தொழினுட்ப தகுதியை" வழங்கும்போது கலிபோர்னியாவில் சிலிக்கன் வெளி என்றழைக்கப்படும் நகரத்தின் ஆச்சரியத்தை இலங்கையிலிருந்து அனுபவிக்கும் நாட்கள் வெறும் கனவாக மட்டும் அமையப் போவதில்லை. அந்த கனவை நனவாக்கும் அர்ப்பணிப்பு "தம்மிக்க மற்றும் பிரிஸ்சில்லா மன்றத்திற்கு" உள்ளது.

உடனடி தொடர்பிற்கு - +94 76 1333 666

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
31.10.1982

மறைவு
23.12.2023

கடந்த 23.12.2023 அன்று சிவபதமடைந்த
எமது அன்புச் செல்வம்

## அமரர் பாலசுந்தரலிங்கம் மதனகுமார்

**(உத்தியோகத்தர், இலங்கை வங்கி, ஒட்டிசுட்டான்)**

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.01.2024) திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் குரும்பைகட்டி ஞானவைரவர் ஆலய வளாகத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப. 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"கலைமகள் இல்லம்"**
**தம்பசிட்டி, பருத்தித்துறை.**

**குடும்பத்தினர்.**
**021 226 3733**

(CR 41600)A-1


தைபூசம் அன்று புதிய அனுமதிகள்

British BUSINESS COLLEGE
Where Students Come First

BBC பாலர் பாடசாலையின்
20ஆம் வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2024ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்

BBC Early Learning Schools

யாழ். குடாநாட்டில் 20 வருட ஆண்டு நிறைவை முன்னிட்டு
2024ம் ஆண்டிற்கான புதிய அனுமதிகளிற்கு கல்வி உபகரணங்கள் இலவசம்

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்



நடன வகுப்புக்கள்

- பிரபல பரதநாட்டிய ஆசிரியரினால் நடாத்தப்படும் அனைத்து மாணவர்களுக்குமான பரதநாட்டிய வகுப்புக்கள்
- எமது மல்லாகம் மற்றும் மானிப்பாய் வளாகங்கள்

2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2 + முதல் 3 வரை | 3 + முதல் 4 வரை | 4 + முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951


# மரண அறிவித்தல்

தோற்றம்
22 • 10 • 1947



மறைவு
18 • 01 • 2024

## சரோஜினிதேவி இராசதுரை

யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, Papua New Guinea மற்றும் அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சரோஜினி தேவி இராசதுரை அவர்கள் கடந்த 18.01.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (சட்டத்தரணி, புத்தூர்) புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசதுரை (Chartered Accountant, Air Ceylon, Audit Office Srilanka & Advisor to Auditor General of Papua New Guinea) அவர்களின் அன்பு மனைவியும், சர்வானந்தன், விபுலானந்தன், இந்திராதேவி, சத்தியானந்தன், சுமித்திராதேவி, காலஞ்சென்றவர்களான சதானந்தன், சுலோசனாதேவி, கிருபானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மதிசீலன் (சிட்னி), குணசீலன் (லண்டன்), குகசீலன் (சிட்னி), சிவசீலன் (சிட்னி), சிவசக்தி (சிட்னி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நித்தில அரசி, வாசுகி, காரோ, நிக்கோல், கிரிஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், தர்ஷன், பவன், கேசவன், லக்ஷ்மி, மகேஸ், கிமாயா, அஷ்வின், இழைஜா, லேலா, ரோகான், கீர்த்திக், அவந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (23.01.2024) செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மதிசீலன்.**
**+61 431 027614**

(LR 53614) S-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
15 • 12 • 1940



இறப்பு
18 • 01 • 2024

## திருமதி சரோஜினிதேவி குணசிங்கம்
(வீரபத்திரர் கோவில் தேவி)

யாழ்ப்பாணம் கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி குணசிங்கம் (வீரபத்திரர் கோவில் தேவி) கடந்த 18.01.2024, வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எழுதுமட்டுவாள் வே. சங்கரப்பிள்ளை, கரவெட்டி மத்தி செல்லாச்சி தம்பதிகளின் ஏகபுதல்வியும், காலஞ்சென்ற வே. குணசிங்கம் (ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயந்தன் (அவுஸ்திரேலியா), மிகுந்தன் (சிரேஸ்ட விவசாய உயிரியல் பேராசிரியர்), துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா), சுகந்தன் (கனடா), குமுதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ராதா, துஷ்யந்தி (விவசாய பொறியியல் பேராசிரியர்), கவிதா, மஞ்சுளா, இரகுநாதன் (யாழ். மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜா - ஷேகன், சோபனா, கிஷாந், மிதுறிகா - திவாகரன் (வைத்தியர்கள்), துமிலன் (பொறியியலாளர்) - மாதங்கி (விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக்கழகம்), வக்ஷலன் (மருத்துவபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்),விதுஷா, கீரன், வித்தகி - கௌதம், லஷானி, மிதுஷா, அகரன் ஆகியோரின் பேர்த்தியும், எல்றோய் ஷேகனின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானதிற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

**வீரபத்திரர் கோவிலடி,**
**கரவெட்டிமத்தி, கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(C53599) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்முனைவோருக்கு வாழ்வாதார உதவிகள்

கிளிநொச்சி, ஜன.21

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழில் முனைவோருக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிப் பொருள்களை மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட 3 பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பூநகரி, பல்லவராயன்கட்டு, பளை, தர்மக்கேணி, வலைப்பாடு, நாச்சிக்குடா போன்ற பகுதிகளிலுள்ள 11 பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைத்தார். (ப-113)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.21

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டு இழப்பீடு மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 'ஐ.ஓ.எம்.' நிறுவனத்தின் அனுசரணையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதில் இறங்கு துறைமுக மீள் கட்டுமானம், வீதிப்புனரமைப்பு, வீட்டுத் திட்டங்கள், உள்ளக விளையாட்டு மைதானம் அமைத்தல், போதைப் பொருள் தடுப்பு, புனர்வாழ்வு முகாம் அமைத்தல், உள்ளூர்க் கைத்தொழிலை ஊக்குவித்தல், படகுச் சேவையின் விஸ்தரிப்பு மற்றும் விவசாய நவீனமயமாக்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ப-66)



கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது அமரர்கள் கனகசபை பாக்கியவதி ஞாபகார்த்தமாக கனகசபை விஷ்ணுகாந்த னால் அமைக்கப்பட்ட முகப்பு மதில் அண்மையில் வைக்கப்பட்டது. இதன் போது கல்விக்கான தேவைகளையுடைய 25 மாணவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன. (ப-125)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 01 . 1945



மறைவு 20 . 01 . 2024

### செல்வரெத்தினம் தவராணி (தவம்)

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும். சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரெத்தினம் தவராணி அவர்கள் நேற்று (20.01.2024) சனிக்கிழமை காலமானார்

அன்னார் செல்வரெத்தினத்தின் (ஓய்வு பெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும். ஜெயக்குமார் (முகாமைத்துவ அலுவலர். வீதி அபிவிருத்தி அதிகார சபை). செல்வக்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர். வீதி அபிவிருத்தித் திணைக்களம்). சோபிகா (வைத்தியர். தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும். ஜெயந்தினி. சதீபா (ஆசிரியர். யாழ் நாவலடி இந்து தமிழ் கலவன் பாடசாலை). சிந்துவர்மன் (பிரதி முகாமையாளர். மக்கள் வங்கி) ஆகியோரினன் அன்பு மாமியாரும். லஷாந். பபிஷாந். ஷஜீந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். காலஞ்சென்ற குலோத்துங்க முதலியார் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற செல்லத்தம்பி சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற ஜெயராசா. ஜெயராணி மற்றும் குலராஜா. ஸ்கந்தராஜா. பரமராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான கனகம்மா. திலகவதி. சிவபாக்கியம். பஞ்சாட்சரம். நாகலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் பிற்பகல் 03.00 மணியளவில் மாணிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவத்தை ஒழுங்கை,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி)

தகவல்:
குடும்பத்தினர்.
077 045 6898
077 480 1265

(CS 27732) S-1

## பாதுகாவலர் தேவை (Security)

தீர்மானிக்கப்பட்ட திகதியில் அதிகூடிய சம்பளம் வழங்கும் நிறுவனத்தை தேடும் உங்களை நாம் வரவேற்கின்றோம்!

யாழ்ப்பாணம், மல்லாவி, பொத்துவில் ஆகிய இடங்களில் பணிபுரிவதற்கு 60 வயதிற்கு குறைந்தவர்கள் அழைக்கவும்.

தொடர்புகளுக்கு : 0703 678 960

## மணமக்கள் தேவை

1985 ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரம் அரசதொழில் புரியும் மணமகனுக்கும், (V) 1989 ம் ஆண்டு மகம் நட்சத்திரம் ஆசிரியையாக பணிபுரியும் விவாகரத்தான மணமகளுக்கும் (V) அரச தொழில் புரியும் மணமக்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

T.P. - 077 464 0727
whatsapp- 076 867 5016

## வாடகைக்குத் தேவை

யாழ். நகர். திருநெல்வேலி, கொக்குவில். கோண்டாவில் மற்றும் பலாலி றோட். K.K.S. ஆகிய இடங்களில் தங்குமிடத்துடன் கூடிய உணவகம் / உணவகம் அமைப்பதற்கு தேவையான கட்டடங்கள் வாடகைக்குத் தேவை.
முன்னர் உணவகமாக இருந்த கட்டடங்களும் விரும்பத்தக்கது.
வாகனம் நிறுத்தக்கூடிய இடவசதி அவசியமானது.
பாரிய அளவிலான கட்டடங்களும் அதனுடன் கூடிய சிறிய அளவிலான கட்டடங்களும் விரும்பத்தக்கது.

ந.ராஜா 077 171 5949, 075 221 1721

## தைப்பூச இசைவகுப்புக்கள்

தோன்றிற் புகழ் உடன் தோன்றுக

எனும் வாக்கியத்திற்கமைய இவ் உலக வாழ்க்கையில் மதிப்போடு வாழ்ந்து எம் வளர்ச்சிக்கு வழிகாட்டி மறைந்தாலும் இன்றும் எம் மனதில் குடி இருக்கும் எமது பேரன் ஆசியுடன் அவர் ஆற்றிய இசைப் பணி எம்மால் என்றும் இவ் உலகத்து மக்களிற்கு தொடர எம் பணி என்றும் தொடரும்.



மெண்டொழின் வாத்தியம் இலங்கையில் அரங்கேற்றி அறிமுகப்படுத்தி 25 வருட நிறைவுடன்

யாழில்:- 2024-01-25 மாலை 4 மணி முதல் 7 மணி வரை.
கொழும்பில்:- 2024-01-26 காலை 6.30 மணி முதல் 7.50 வரை
தைப்பூச நாள் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடர்பு இல:- 072 933 6581

(CS 53605) V-1

## வீடு வாடகைக்குத் தேவை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் கொடிகாமம், கைதடி பிரதேசத்தில் 3 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத்தேவை.

075 394 5993

## விற்பனைக்கு

அலுவலகத்தில் பயன்படுத்திய உபகரணங்கள், கூரைத் தகரங்கள், மரத்தடிகள், போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் அலுமிய பிற்றிங்ஸ் என்பன உடன் விற்பனைக்குண்டு.

070 316 4214

## சமையல்/பராமரிப்பு

கொழும்பில் உள்ள வீடொன்றுக்கு தங்கியிருந்து சமையல் மற்றும் சிறு பிள்ளை பராமரிப்பு செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
போதிய சம்பளம் + தங்குமிடம் + உணவு
மேலதிக தொடர்புகளுக்கு:

077 987 2016

## காணி விற்பனைக்கு

யாழ். அரியாலையை அண்டிய பகுதியில் நிலப்பரப்பு மற்றும் தென்னங்காணிகள் விற்பனைக்குண்டு.

070 316 4214

## வேலையாட்கள் தேவை

சைவ உணவகத்திற்கு சமையல் சப்ளையர், பில்மேக்கர், மேற்பார்வையாளர் மற்றும் சகல வேலைகளுக்கும் ஆள்கள் தேவை.
ஆனைக்கோட்டை - யாழ்ப்பாணம்

077 055 6949, 075 238 7405

## வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு

பயன்படுத்தப்பட்ட நல்ல நிலையில் உள்ள சோபா செற்றி (தேக்கு). 6'x3', 6'x4' அளவுகளில் உள்ள மெத்தையுடன் கட்டில் 3. பிளாஸ்ரிக் கதிரை மேசைகள். Sony Model தொலைக்காட்சி பெட்டி என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:

0777 634 869, 077 071 3048

## மணமகன் தேவை

யாழ். இந்து (கு) 1993 இல் பிறந்த அத்தம் நட்சத்திரம் செவ்வாய் 7. கி.பா-17 உடைய அரச தொழில் புரியும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

தொடர்பு: 077 944 1075

## மணமகள் தேவை

யாழ் இந்து (V) 1987ல் பிறந்த ஆடியபாதம் வீதி. திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எவ்வித தோஷமும் அற்ற 59" அங்கல உயரமுடைய மணமகனுக்கு உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றோம்.
தொழில் -AI/ML என்ஜினியர்.
கல்வித்தகைமை - B.Sc.M.Sc, MPHIL

076 841 8680

## லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை.

லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1900/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா -2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=



இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை

இந்தியா தொடர்புகளுக்கு:
00919566156719

WESTERN UNION WU moving money for better · MoneyGram · Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
0778393 974

## மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

CERTIFICATE IN HOTEL OPERATION AND MANAGEMENT

சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்
- தகைமை: G.C.E (O/L)
- சுயவிபரக் கோவை
- கடவுச்சீட்டுப் பிரதி
- அடையாள அட்டைப் பிரதி

நேர்முகத்தேர்வு : 27.01.2024
நேரம்: 10.00 a.m

074 234 9120

## ICT Classes

தரம் : 6-A/L வரையான வகுப்புக்கள் தனியாக / குழுவாக அல்லது ZOOM மூலம் பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

தொடர்பு:074 264 0468

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு பொதியிடல் வேலைக்கு ஆட்கள் தேவை பெண்கள் மட்டும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 076 096 9728

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, பள்ளமடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில், இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். இன்னொருவர் படுகாயமடைந்தார். சிறிய ரக பேருந்தும், சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கோயில்குளம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பத்தலைவரே உயிரிழந்தார். 45 வயதுடைய மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இறப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-56)

## மரண அறிவித்தல்



திருமதி
### கமலாம்பிகை இரத்தினசிங்கம்

நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாம்பிகை இரத்தினசிங்கம் அவர்கள் 18.01.2024 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம், விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகளும் திரு. கந்தையா இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் கலைவாணி (ஓய்வுபெற்ற முகாமையாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி), இரவீந்திரன், பவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரத்தினஜோதியின் அன்பு மாமியும் பார்த்திபன், கீர்த்தனன், கல்யாணி ஆகியோரின் பாசமிகு பேத்தியும் சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சுப்பிரமணியம், சிவலாம்பிகை, சிவசண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 21.01.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 02.00 மணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் குடும்பத்தினர்
Tel : 077 3157937, 075 4414926


### வீடு வாடகைக்கு

கொழும்பில், நீர் கொழும்பு- கொழும்பு பிரதான வீதிக்கு 50m தூரத்தில் மாடி வீடு வாடகைக்கு உண்டு.

T.P: 076 112 4145

### உடனடி வேலைவாய்ப்பு

வட மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கம்பனிக்கு முகாமையாளர் தேவை. மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆண்/பெண் தேவை. O/L, A/L

T.P076 1124 145

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை (வெ) சேர்ந்த, 1992 பிறந்த சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. தொடர்புக்கு:

Call/Whatsapp : 075 338 7724

### வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

070 182 0630

### வேலைவாய்ப்பு

**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் இயங்கும் சுப்பசூஸ் நிறுவனத்திற்கு விநியோக உதவியாளர் (Delivery Boy) தேவை. விண்ணப்பிக்க விரும்பியவர்கள் மேற்காணும் முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்.

### காணி விற்பனை
காங்கேசன்துறை

அபிவிருத்திசெய்துவரும் காங்கேசன்துறை முகத்திற்கு அண்மையில் K.K.S. வீதியை முகப்பாக கொண்ட 22 pearches நிலம் விற்பனைக்கு

* கடைத்தொகுதிகள்
* கொட்டல்கள்
* கிட்டங்கிகள்
* சிறந்த வீடுகள் கட்டக்கூடிய

சிறந்த சூழல்

1pearch 16,00,000 /=

(cs.27194) (N.1)

076 561 3959

### காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்க்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25840) (N.1)

077 362 8995


## மரண அறிவித்தல்

### மருதலிங்கம் அரிதாசன்

(M.A.Hari - English Teacher)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கோண்டாவில், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மருதலிங்கம் அரிதாசன் (M.A.Hari - English Teacher) கடந்த (18.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதலிங்கம் அமுதாப்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் (Retired Teacher), அவரின் அன்புக் கணவரும், பரணிதரன் (Canada), ரமணிதரன் (Building Department - யாழப்பாணம்), முரளிதரன் (Sampath Bank - சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதா (Canada), கோமதி, விஸிஷ்டா (HNB - நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிதுனாளினி, ஹரிலக்ஷன், ஹரேன், அக்ஷிகா, சாயிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவ ர்களான பத்மநாயகி, பரிமளகாந்தி மற்றும் புஸ்பகாந்தி, ஜெயரூபகாந்தி, ஜெயச்சந்திரகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சூரியகுமாரி, ஜெயக்குமார், ஆனந்தகுமார் ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2024) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 23.12.1932 — இறப்பு 18.01.2024

26/5, கலட்டி முந்தல் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(அம்மாச்சிக்கு முன் ஒழுங்கை)

தகவல்:
குடும்பத்தினர்
(ரமணிதரன் - 077 757 0141)
(முரளிதரன் - 077 780 9664)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைந்த கணிதம்

A/L :- 2024/ 2025
Persanal Class யாழ்ப்பாணத்தில்
S. Thanushan BSC (Hons) in Statishcs
Peradeniya (UOP)
தொடர்பு: 076 384 8597, 070 415 4816

## தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு

எம்மிடம் நல்லின தென்னம் நாற்றுக்களும். குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய நாற்றுக்களும் விற்பனைக்குண்டு.

077 659 2044

## மணமக்கள் தேவை

1985 ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரம் அரசதொழில் புரியும் மணமகனுக்கும். (V) 1989 ம் ஆண்டு மகம் நட்சத்திரம் ஆசிரியையாக பணிபுரியும் விவாகரத்தான மணமகளுக்கும் (V) அரச தொழில் புரியும் மணமக்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

T.P. - 077 464 0727
whatsapp- 076 867 5016

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



அகம் மகிழ மண்ணில்
23 . 02 . 1974

அகம் மகிழ விண்ணில்
30 . 01 . 2015

**அமரர் பாலசுப்பிரமணியம் தர்மசீலன்** (BSc PGDip in Edu)
பௌதீகவியல் ஆசான்
யா/அருணோதயக் கல்லூரி

ஒன்பதாண்டுகள் என்ன
பல்லாயிரம் ஆண்டுகள்
பறந்தோடிடினும் ஆறிடுமோ எம் துயரம்
பாரினிலே எமது பாசத்தையிழந்து
பாவிகளாய் பரிதவிக்கின்றோம்.

அளவெட்டி மத்தி,
டச்சு றோட்.

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு
18 . 07 . 1942



உதிர்வு
16 . 01 . 2024

### செல்லத்துரை துரைசிங்கம்

மட்டுவில்நாடு கிழக்கு பூநகரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை துரைசிங்கம் அவர்கள் கடந்த (16.01.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் (சரசு) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2024) திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் பூநகரி இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகன் - 076 419 7629
மகள் - 074 066 5657
மருமகன் - 077 6365 754

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27733) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 07 . 1940



மறைவு
20 . 01 . 2024

### அமரர் வல்லிபுரம் விசுவலிங்கம்

வாதரவத்தை, புத்தூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் விசுவலிங்கம் அவர்கள் நேற்று (20.01.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற நாகலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், பாலசிங்கம் (கனடா), அமரர் அழகதுரை, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவீனகுமாரி, சற்குணலீலா, கமலநாதன் (கனடா), வசந்தலீலா (உடையார்கட்டு), ரஞ்சிதமனோகரன் (வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்), விஜயரூபன் (நீதிமன்றம், ஊர்காவற்றுறை), சுபாஜினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரவீந்திரநாதன் (தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, ஓய்வு நிலை), உதயசந்திரிக்கா (கனடா), நாகேஸ்வரன், கலாவதி, ராஜினி (விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி), சுபாஷ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லஜிதா, உமாரதன், சோபிகா, லஜிதரன், அஸ்வின், பாலஜீவன், அபிலாஷா, ஜதுஷன், நிஷாகரன், திஷாகரன், சிந்துஜன், பிரசாந், வஜீனா, பவிதன், விவுஜன், வர்மிஜன், லதுஷிகா, கஷ்மிதன், தமிகா ஆகியோரின் அன்புப் பேரனும், கிஷாரா, ருத்விகா, ரக்ஷிகன், கிபிஷா, தருண், பவிஷ், கவிசாந், சுலக்ஷனா, ஜஸ்மிதா, அக்ஷிதா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வாதரவத்தை, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27730) A-1

## மரண அறிவித்தல்



### பழனி நடராசா

(முன்னாள் மாவட்ட நீதிமன்ற பதிவாளர், தென்மராட்சி இணக்க மன்றின் முன்னாள் தலைவர், அகில இலங்கை சமாதான நீதவான்)

சடையாளி,காரைநகரை பிறப்பிடமாகவும் கண்டுவில் ஒழுங்கை,சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் மாவட்ட நீதிமன்ற பதிவாளரும், தென்மராட்சி இணக்க மன்றின் முன்னாள் தலைவரும், அகில இலங்கை சமாதான நீதவான் பழனி நடராசா நேற்று (20.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பழனி, சிவகாமி தம்பதியினரின் அன்பு புதல்வனும், ஆண்டிஐயா, அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், கதிரவேலு, சதாசிவம் மற்றும் ராஜதுரை, நற்குணராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், முரளிதரன் (UK), சிவேந்திரா (UK), வித்தியாசங்கர் (UK), ஐங்கரன் (UK) ஆகியோரின் தந்தையும், ஆனந்தி(UK), சுகி(UK), நிந்துஷா(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிஷ், ஹரிணி, சேரன், நரேன், சிவானி, அரன், ஆரணி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியில் அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியை சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:
077 724 5886, 077 025 0022

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வளத்தைக் காக்காமல் சர்வதேசக் கடலுக்குப் பாதுகாப்பா?

## வடக்கு கடற்றொழிலாளர் இணையம் ஆதங்கம்

**மன்னார், ஜன. 21**

**குறுகிய எல்லைப் பரப்பைப் பாதுகாக்க முடியாதுள்ள இந்த அரசாங்கம் சர்வதேசக் கடல் பிரதேசத்தையும் வணிக நடவடிக்கைகளையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. உள்நாட்டு மீனவர்களையும் உள்நாட்டு வளங்களையும் பாது காக்க ஜனாதிபதி கரிசனை கொள்ளவேண்டும்.**

-இவ்வாறு மன்னாரில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் வடமா காண கடற்றொழிலாளர் இணை யத்தின் ஊடகப் பேச்சாளர் என். எம். ஆலம் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் வருகை யால் எமது கடல் வளமும் மீனவர் வாழ்வாதாரமும் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. இந்திய மீனவர்களின் அத்துமீ றிய வருகையைக் கட்டுப்படுத்த முடியாது. குறுகிய எல்லைப் பரப் பைப் பாதுகாக்க முடியாது. இந்த அரசாங்கம் சர்வதேசக் கடற்பரப் பைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தச் செயற்பாடா னது பாரபட்சமாகும் என்றும் குறிப்பிட்டார். (ச-56)

# பல்கலைகளில் பயிர்ச்செய்கை

கொழும்பு, ஜன. 21

இலங்கையிலுள்ள அனைத்து திறந்த பல்கலைக்கழ கங்களிலும் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்குமாறு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவுறுத்தி யுள்ளார்.

அத்தோடு சகல அரச திணைக்களங்களும் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் பொரு ளாதார முன்னேற்றத்துக்கும் நாட்டை கடன் சுமையி லிருந்து விடுவிப்பதற்கும் உதவமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-6)

# போன். அருணாசலம் வீதி; பெயர்மாற்ற எதிர்ப்பு!

கொழும்பு, ஜன. 21

கொழும்பு ஹோர்டன் பிளேஸ் வீதிக்கு 'பொன்னம்ப லம் அருணாசலம் மாவத்தை' என பெயர் மாற்றுவ தற்கு கொழும்பு மாநகரசபை முன்வைத்த யோச னைக்கு பிரதேச குடியிருப்பாளர்கள் எதிர்ப்பு வெளி யிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களின் அனைத்து ஆவணங்களிலும் பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்று கூறியே பிரதேச வாசிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை சேர். பொன். அருணாசலம் இலங்கை யின் சுதந்திரத்துக்காக பாடுபட்ட ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)

## பிளாஸ்ரிக்கைத் தடை செய்தல் நல்லூரில் கருத்தமர்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூன் றாம் வருட மருத்துவ பீட மாணவர் களால் நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிளாஸ்ரிக்கை முற்றாகத் தடை செய்தல் தொடர்பான கருத்தமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கருத்தமர்வில் பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத் தல், மீள்சுழற்சிசெய்தல், பிளாஸ்ரிக்கை முற்றாகத் தடைசெய்த நாடுகள் போன்ற விடயங்கள் விளக்கப்பட்டன. குறித்த கருத்தமர்வு நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் கள், பிரதேச செயலக உத்தியோகத்தர் கள் கலந்து கொண்டனர். (ப-66)

# காலபோகம் அழிவு நட்டஈடு தாருங்கள்

## முல்லை விவசாயிகள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் காலபோக நெற்செய்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதனால் அறுவடை பெருவீழ்ச்சியைச் சந்தித்துள்ளது என்று முல்லைத்தீவு விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை மற்றும் நோய்த்தாக்கங்களால் காலபோக நெற் செய்கை வீழ்ச்சியுற்றுள்ளது. அறுவடையில் மூன்று அல்லது நான்கு மூடை நெல்லே கிடைக்கப்பெறுகின்றது. அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்தால் அறுவடைக் கூலி மட்டுமே கிடைக் கப்பெறும்.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க உரிய அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-500)

## சக்கரநாற்காலி வழங்கல்

சாவகச்சேரி ஜன. 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெருமூளை பாதிக்கப் பட்ட சிறுவர்களுக்கு வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தின் 'பி.எஸ்.டி.ஜி.' திட்டத்தின் கீழ் சக் கரநாற்காலி வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர் ஆகியோர் கலந்துகொண டனர். (ப-9)



## கலைநிகழ்வும் கௌரவிப்பும்

கொடிகாமம், வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத் துக்கு முன்பாகவுள்ள கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் வர ணிக் குடும்ப இணைப்பாளர் லோ. கேதிகா தலைமையில் வர ணிக் குடும்ப முன்பள்ளிகளின் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் கலைநிகழ்வும் கௌரவிப்பும் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலு வலக 'செயற்பட்டு மகிழ்வோம்' இணைப்பாளரும், முன்பள்ளி மேற்பார்வையாளருமான திருமதி ம. இராஜலட்சுமி, சிறப்பு விருந்தி னர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வு நிலை முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு மதி அ. சரோசாதேவி, தென்ம ராட்சி கொத்தணிப் பொது முகா மையாளர் க. அருட்செல்வம், முன்னாள் பிரதேசசபை உறுப்பி னரும், வரணி மண்ணின் சமூக சேவையாளருமான சி. பிரபாகரன், கௌரவவிருந்தினர் களாக சர்வதேச லயன்ஸ் கழக பிராந்தியதென்மராட்சி முன்பள்ளி களின்வலய இணைப்பாளர்திருமதி செ. ஆனந்தி எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ப-159)

# அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம்

முல்லைத்தீவு, ஜன. 21

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட் டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையா டல், செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்ட பத்தில் மாவட்ட செயலர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலர் சி. குண பாலன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் க. லிங் கேஸ்வரன், சமுர்த்திப் பணிப்பாளர் ஆ. முபாரக், பதில் திட்டமிடல் பணிப்பாளர் க. ஜெயபவானி, பிர தேச செயலாளர்கள், கணக்காளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-13)

## மீளாய்வு ஆரம்பம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பிரதேச சமூக சேவைகள் அலகினால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பொருண்மியம் நலிவுற்றோருக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகள் பெறுவோருக் கான மீளாய்வு அந் தந்தக் கிராம அலுவலர் அலுவலகங் களில் கடந்த வியாழக்கிழமை ஆரம் பிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் பொதுசன மாதாந்த உதவிப்பணம், நோய்க்கொடுப்பனவு கள், அங்கவீனமுற்றோருக்கான கொடுப்பனவுகள் மற்றும் முதியோ ருக் கான கொடுப்பனவுகள் ஆகியவற்றின் மீளாய்வு இடம்பெற்றது. (ப-9)

# மரக்கறி விலை ஏறியது ஏன்?

தொழில்களிலே மிகவும் சிறந்த தொழில் விவசாயமே. சூரியனும் உழவர்களும் தகுந்த முறையில் செயற்படாவிட்டால் மனித வாழ்வே அஸ்தமித்துவிடும் என மன்னார் மாவட்ட செயலர் க. கனகேஸ்வரன் தெரிவித் தார். மன்னார் மாவட்ட செயலக அலுவலர் களின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயல கத்தில் இடம்பெற்ற சூரியப்பொங்கலும், உழவர் கௌரவிப்பும் நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் ஒரு விழாவாக தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது. எமக்கு உணவு வழங்குகின்ற உழவர்களுக்கும் இதற்கான நல்ல காலநிலையைத் தருகின்ற சூரியனுக் கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வாகவே இந்தத் தைப்பொங்கல் விழா திகழ்கின்றது. தொழில் களிலே மிகவும் சிறப்பானது விவசாயமே. எல்லோரும் விவசாயிகளிலேயே தங்கி வாழ் கின்றனர். விவசாயிகள் தங்கள் தொழிலைக் கைவிட்டால் நாம் எவ்வாறான பிரச்சினை களுக்குத் தள்ளப்படுகின்றோம் என்பது யாவருக்கும் தெரியும். தற்போது மரக்கறிக ளின் விலையேற்றம் உச்ச நிலையை அடைந்துள்ளது. சூரியனும் விவசாயிகளும் கைகொடுக்காமையால் இந்த நிலை உரு வாகியுள்ளது - என்றார். (ரி-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரையில் இருந்தபடி ஒருவர் பரிதாபச் சாவு

*யாழ்ப்பாணம், ஜன. 21*

கதிரையில் அமர்ந்திருந்த நபர் ஒருவர், இருந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் - பாஷையூர் பகுதியில் நேற்று இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிவலிங்கம் குகலிங்கம் (வயது - 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். நேற்றுக்காலை 9 மணியளவில் கதிரையில் அமர்ந்திருந்த அவர், தொடர்ச்சியாக அசையாதிருந்ததையடுத்து உறவினர்கள் வந்து பார்த்தபோது அவர் மூச்சிழந்த நிலையில் இருந்துள்ளார். இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினார்கள்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### அமைச்சரவை...

தேர்தலை இலக்குவைத்தே குறித்த மாற்றம் இடம்பெறவுள்ளது எனவும், பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு அந்தக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்சவால் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. பல தடவைகள் இது தொடர்பில் நினைவூட்டல்களும் இடம்பெற்றன. எனினும், ஜனாதிபதி நியமனம் எதையும் வழங்கவில்லை.

இந்த நிலையிலேயே அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறுகின்றது. அதே வேளை, சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம்கட்டக் கடன் கிடைக்கப் பெற்றதும் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

### தமிழ்த்...

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

எமது தமிழரசுக் கட்சியின் வரலாற்றிலே முதல் தடவையாக வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் கட்சித்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட இருப்பதாலும், குறித்த வாக்கெடுப்பில் மூன்று பேர் போட்டியிட இருப்பதாலும், இதன் சாதக பாதகங்கள் பற்றி பல விமர்சனங்கள் வருவது தவிர்க்க முடியாததொன்றாகும்.

தமது தலைவரை தேர்ந்தெடுக்கின்ற பெரும் பொறுப்பு, கட்சியின் சகல கிளை அங்கத்தவர்களின் பிரதிநிதிகளிடமும் வழங்கப்பட்டிருப்பதை, உட்கட்சி ஜனநாயகத்தின் மிக உயர்ந்த விழுமியமாகவே நான் பார்க்கின்றேன். இது எமது கட்சியை மேலும் பலப்படுத்துமே தவிர ஒருபோதும் பலவீனப்படுத்தாது.

கடந்த 2010ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் மூலமாக நேரடியாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதன் ஊடாக அரசியலுக்கு வருவதற்கு முன்னதாகவே பல வருடங்களாக எமது கட்சிக்காகவும், தமிழ் மக்களின் உரிமைக்காகவும் பல பணிகளை நான் பொறுப்பேற்று செய்திருக்கின்றேன். கொழும்பிலிருந்து தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர்ந்து உடனடியாகவே அந்த மோசமான செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தியமை இவற்றில் முதன்மையானதாக இருந்தது.

2004ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இரண்டு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்குமாறு என்னிடம் கோரப்பட்டது. அப்போது நான் அதற்கு உடன்படாவிட்டாலும் ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர் நிர்க்கதியாக நின்ற எம்மக்களுக்கு சர்வதேச ஆதரவுடன் அரசமைப்புச் செயன்முறை ஒன்றினூடாக தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்வதே ஒரேயொரு வழிமுறையாக எஞ்சியுள்ள நிலையில் அதில் எனது நிபுணத்துவத்தைக் கருத்திற்கொண்டு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்ற கடந்த 2010ஆம் ஆண்டில் உடன்பட்டேன்.

தமிழர்களின் பிரச்சினைகளாகட்டும், தமிழர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளாகட்டும் இவற்றில் நான் மிகுந்த அக்கறையுடன் முக்கியமான வகிபாகத்தை மேற்கொண்டு வருகின்றேன். கட்சியின் வெளி விவகார விடயங்களைக் கையாண்டு இராஜதந்திரிகளோடு பேசும் மிகவும் சிக்கலான பொறுப்பை கட்சி என்னிடம் கையளித்திருக்கின்றது. அந்த வகையில் இறுதி யுத்தத்தின்போது தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட எல்லா வகையான அநீதிகளுக்கும் எதிராக இலங்கை அரசை பொறுப்பாக்குதல் சம்பந்தமாக பலநாடுகளின் ஆதரவை எமது பக்கம் வருவித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் மற்றைய தளங்களிலும் தொடர்ச்சியான இராஜதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றேன்.

இதன் தொடர்ச்சியாக தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், தமிழ்த் தேசியத்தை பேச்சளவில் அல்லாமல் இறைமையாக வெல்வேன் - என்றுள்ளது. (அ-ம)

### தமிழர்கள்...

களையும் இலக்குகளையும் அடைவதற்கான பொது வேலைத்திட்டப் பொறிமுறையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவேன் என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான வேட்பாளருமாகிய சிவஞானம் சிறீதரன் உறுதியளித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்காக நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இந்தக் கருத்தை முன்னிறுத்தியுள்ளார்.

அவரால் முன்வைக்கப்பட்டுள்ள செயல் நோக்கு அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ்த்தேசிய இனப்பிரச்சினையென்பது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதையும், தமிழர் தேசத்தைத் தாங்கும் தூண்களாக உள்ள நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பவையும் அழிக்கப்படுவதே. இலங்கைத்தீவு சிங்கள - பௌத்தர்களுக்கு மட்டும் உரியது என சிங்கள மக்கள் கருதுவதாலேயே இந்த அழிப்பு இடம்பெறுகிறது. சிங்கள - பௌத்த சித்தாந்தமும், ஒற்றையாட்சிக் கட்டமைப்பும் அதற்கான அரச இயந்திரமும், இவ்வழிப்பு நடவடிக்கைகளில் பங்காற்றுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இந்த அழிப்பிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதாக இருக்கவேண்டும். இதற்கு கோட்பாட்டு அடிப்படையில் தேசம், இறைமை, சுயநிர்ணயம் என்பன ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

அரசமைப்பு ரீதியாக வடக்கு - கிழக்கு இணைப்பு, சுயாட்சி அதிகாரங்கள், மத்திய அரசில் ஒரு தேசமாக பங்குபற்றுவதற்கான பொறிமுறை, அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பன ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். இது தொடர்பாக சிங்கள தேசத்துக்கும் தமிழ்த் தேசத்துக்கும் இடையே சமூக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவேண்டும். அதனடிப்படையில் தேசிய அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்புதல், புவிசார் அரசியலில் பங்காளிகளாகுதல், சமூகமாற்ற அரசியலை முன்னெடுத்தல், அடிப்படைச் சக்திகள், சேமிப்புச் சக்திகள், நட்புச் சக்திகளை அணிதிரட்டுதல் இவ்வாறான இலக்குகளை நோக்கியே எனது பயணம் அமையும் - என்றுள்ளது. (அ-ம-125-26)

### 40 இந்திய...

இந்தியப் பிரதமர் மோடி தற்போது தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ளார். இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக அவர் இராமேஸ்வரத்துக்கும் செல்லவுள்ளார். இந்த நிலையில் இலங்கைக் கடற்படையால் அண்மையில் கைதுசெய்யப்பட்ட 40 இந்திய மீனவர்களையும் விடுவிக்குமாறு இந்திய மத்திய அரசால் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் - கோவளம் கடற்பரப்பில் வைத்து கடந்த 13ஆம் திகதி மூன்று படகுகளுடன் 12 மீனவர்களும், பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த 15 ஆம் திகதி அதிகாலை ஒரு படகுடன் 10 மீனவர்களும், மன்னார் - தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்பில் வைத்து கடந்த 16ஆம் திகதி இரண்டு படகுகளுடன் 18 மீனவர்களும் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மன்னார் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்படத்தக்கது. (அ-ம-100)

### காசோலை...

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 15 மாணிக்கக் கற்களைக் கொள்வனவு செய்துவிட்டு அதற்குரிய பணமாக இரண்டு கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு அவர்கள் காசோலையை வழங்கியுள்ளனர். குறிப்பிட்ட திகதியில் காசோலையை வங்கியில் வைப்பிலிட்டபோது, அந்தக் காசோலை பணமில்லாமல் திரும்பியுள்ளது.

இதுதொடர்பாக மாணிக்கக் கற்களை விற்றவர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் முறைப்பாடு வழங்கியதையடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஒருவரைக் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் உள்ளிட்ட ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட ஆறு பேரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-66)

### கால்வாய்க்குள்...

சடலமாக மீட்கப்பட்டவரின் முகப்பகுதியில் காயங்கள் காணப்படுகின்றன. ஆதலால் மேற்படி நபரின் இறப்பு எவ்வாறு சம்பவித்தது என்பது தொடர்பில் பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-113)

### சிறீதரன்...

தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபாரணம் ஆபிரகாம் சுமந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய மூவரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

சீனித்தம்பி யோகேஸ்வரன் தேர்தலில் இருந்து கிட்டத்தட்ட வெளியேறியுள்ள நிலையில், கட்சியின் அடுத்த தலைவர் யார்? என்பது தொடர்பில் சுமந்திரன் மற்றும் சிறீதரன் இடையே இருமுனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

பொதுச்சபை உறுப்பினர்களின் இரகசிய வாக்குப்பதிவுக்கு அமைய இன்று புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். (அ-ம)

### நயினை...

மகா கும்பாபிஷேகத்துக்கெனத் தங்கத்திலான திருக்குடம் ஆலயத்தில் வைத்துச் செய்யப்பட்டுள்ளது.

தங்க திருக்குடப் பவனி நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகத்துக்கான பிரதான கும்பநீரானது கங்காதரணி தீர்த்தக் கேணியிலிருந்து அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் அடியவர்கள் புடைசூழ நயினை அம்மன் ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. (அ-ம-66)

### மின்சாரம்...

அரியரத்தினம் அச்சுதன் (வயது -34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மின் இணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நீண்டநேரமாக இளைஞனைக் காணவில்லை என்று தேடியபோதே அவர் மின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100-159)

**வேலை வாய்ப்பு**

கிளிநொச்சியில் உள்ள பிரபல புடவையகத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண் பெண் இருபாலரும்.

077 452 3408, 077 563 2734

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

இணுவிலில் கே.கே.எஸ் வீதியை முகப்பாகக் கொண்ட 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077 227 6181**

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL , AL,
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A **077 766 8725**

## பெண் வேலையாள் தேவை

யாழ்ப்பாணம். இருபாலை ஆகிய கிளைகளில் இயங்கிவரும் புத்தக. போட்டோகொப்பி கடைகளுக்கு அனுபவமுள்ள /அனுபவமற்ற பெண் ஊழியர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**076 832 3682**

## மணமகள் தேவை

யாழ் இந்து சைவபோசனமுடைய, 1991 ஆம் ஆண்டு சுவாதி 4 ஆம் பாதம் (கிரகபாவம் 36) 8இல் செவ்வாயுடைய நெதர்லாந்து (Holland) நிரந்தர வதிவிட உரிமையுடைய பொறியியலாளருக்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : **077 803 8739**

## வீடு வாடகைக்கு

12 வருடங்களாக நடைபெற்று வரும் எமது நிறுவனத்திற்கு கிளைகளை விஸ்தரிப்பதற்காக கோப்பாய், திருநெல்வேலி, மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது... தொடர்புகளுக்கு

**077 337 4261**

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 3ஸ்ரீ-XXXX இலக்கமுடைய மைனர் (1000) கார் உடன் விற்பனைக்குண்டு.

**077 914 4520**

## தாதிய உதவியாளர் வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் பிரபல வைத்திய ஆலோசனை நிலையத்திற்கு பெண் தாதிய உதவியாளர்கள் தேவையாக உள்ளனர்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்

**077 476 6344**

## V7 EDUCATION

Cambridge Books are free ! ( In PDF format )



ACADEMIC & GENERAL IELTS

Sri Lanka's No.1 IELTS self-study course

25+ Courses

IELTS Practice வீடியோக்கள் உங்கள் வீட்டிற்கு 32GB USB drive ல் அனுப்பிவைக்கப்படும்.

3,500/= மட்டுமே

021 3150315
077 4581078

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

கட்டிட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு

Finex ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க இரசாயன பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

சிறிய நீர்க்கசிவானால் இரசாயனப் பொருள்களை பெற்று எமது தொழினுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்துகொள்ளலாம்.

*போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்*

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## வீடு வாடகைக்கு

இல.200 சிவன் பண்ணை வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 10 அறைகளை கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. ஹொட்டல்கள், Restaurant (உணவகம்) நடாத்துவதற்கு சிறந்த இடம்.

தொடர்பு: **077 605 6572**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 077 4919**

## வேலையாட்கள் தேவை

**அச்சுக் கூடமொன்றுக்கு**
அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்.

தொடர்பு : **076 768 7664**
**021 222 4484**


## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மான நிறுவனம் ஒன்றிற்கு திருநெல்வேலியில் வேலைசெய் வதற்கு மேசன் கூலி தொழிலாளர், உபஒப்பந்தகாரர்கள் தேவை.

தொடர்பு : **077 873 9169**

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 05 . 1947



மறைவு
20 . 01 . 2024

### தர்மலிங்கம் இராமலிங்கம் (சின்ராசா)

(ஓய்வுபெற்ற மாநகரசபை ஊழியர்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெரு. நல்லூர், கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் இராமலிங்கம் நேற்று (20.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் சுந்தரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அச்சேந்திரம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், இளந்திரையன் (பிரான்ஸ்), இளவதனி, சத்தியவாணி, காலஞ்சென்ற யாழினி மற்றும் இளஞ்செழியன், பிரதீபன், தயாளினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதர்சினி (பிரான்ஸ்), அஜீவன், சுதேஸ்வரன், பானுஜா, விஜயரூபன் (அமெரிகா) ஆகியோரின் அன்பு மாமனும், சர்வேஸ்வரி, தளையசிங்கம், கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், எதிர்மன்னசிங்கம், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் அமிர்தமணி, ரவிச்சந்திரன், ரவீந்திரன், காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் இந்திரகாந்தன் ஆகியோரின் மைத்துனரும், கபினி, கஷ்வினி, கஷ்வியா, அனனியா, விதுசன், யதுசன், பகித்ரா, கிரிஷ்ணி, கேஷியா, தரணீஷ் அகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை கைதடி இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி வடக்கு,**
**கைதடி.**

தொடர்பு:
**மகன் - 076 969 3142**
**077 707 9296**


**தகவல்:**
**குடும்பத்தினர்**

(C53599) N-1)

## மரண அறிவித்தல்

### நாகராசா கோகுலராஜன்

**(முன்னாள் விவசாயப்போதனாசிரியர்)**



**தோற்றம்** 19.11.1967 **மறைவு** 18.01.2024

யாழ்பாணம் கச்சேரியடியை பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிட மாகவும், தற்பொழுது அமெரிக்காவில் வசித்து வந்தவருமாகிய நாகராசா கோகுலராஜன் 18.01.2024 அன்று அமெரிக்காவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா நீலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், கனகலிங்கம் கருணாதேவி (புங்குடுதீவு) தம்பதிகளின் அன்பு மருமகனும், நளாயினியின் அன்புக் கணவரும், தர்சிகா, அருணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், செந்தில்ராஜன் (அவுஸ்திரேலியா, சிங்கப்பூர்) யோகநந்தினி (பிரான்ஸ்), யோகராஜன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச்சகோதரனும், வித்யா (அவுஸ்திரேலியா) மகேஸ்வரன் (பிரான்ஸ்) லதாமதி (இங்கிலாந்து) மற்றும் கமலினி (அமேரிக்கா) சிவதர்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr குருபரானந்தா, Dr ராஜகுமார் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செந்தில்ராஜன் 006596461936**
**யோகநந்தினி 0033669663093**
**யோகராஜன் 00447888678844**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 53609)V-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

விழி போல எண்ணி
நம் மொழி காக்கவேண்டும்
தவறான பேர்க்கு
நேர் வழி காட்டவேண்டும்
ஜனநாயகத்தில் நாம்
எல்லோரும் மன்னர்
தென்னாட்டு காந்தி
அந்நாளில் சொன்னார்
-வாலி

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 தை 07 ஞாயிற்றுக்கிழமை (21.01.2024) சிகரம் : 182

# உலக நீதி : காஸாவும் முள்ளிவாய்க்காலும்

நிலாந்தன்



"அனைத்துலக நீதியின் மாண்பு தராசில் தொங்கிக்கொண்டிருக்கிறது" இவ்வாறு அனைத்துலக நீதிமன்றத்தில் வைத்துக் கூறியிருப்பவர் தென்னாபிரிக்காவின் பிரதிநிதி.காஸாவில் இஸ்ரேல் புரியும் இனப்படுகொலைக்கு எதிராகத் தென்னாபிரிக்கா உலக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறது. அந்த வழக்கின் தொடக்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது. உலக நீதி மட்டுமல்ல மேற்கு நாடுகளின் அரசியல் அறமும் கூட தராசில் வைக்கப்பட்டிருக்கிறது. முழு உலகத்துக்கும் ஜனநாயகம் மனித உரிமைகள் போன்றவற்றின் மாண்பைக் குறித்து வகுப்பெடுக்கும் மேற்கு நாடுகளின் அரசியல் அறத்தை மிக இளைய ஜனநாயகங்களில் ஒன்றாகிய தென்னாபிரிக்கா கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது.காஸாவில் இனப்படுகொலை நடந்துகொண்டிருக்கும் பொழுதே.ரத்தம் காய முன்பே, தென்னாபிரிக்கா வழக்குத் தொடுத்திருக்கின்றது. அதுபோல ஏற்கனவே மற்றொரு ஆபிரிக்க நாடாகிய காம்பியா மியான்மரில் ரோஹிங்கா முஸ்லிம்களுக்காக நீதிகேட்டு 2019 ஆம் ஆண்டு அனைத்துலக நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது.

அனைத்துலக நீதிமன்றம் எனப்படுவது ஐ.நா.வின் ஆறு பிரதான உறுப்புகளில் ஒன்று. ஐ.நா.வின் நீதி பரிபாலனக் கட்டமைப்பு அது. ஐ.நா.வின் ஏனைய உறுப்புகள் நியூயோர்க்கில் உள்ளன.ஆனால் அனைத்துலக நீதிமன்றம் நெதர்லாந்தின் தலைநகரமான ஹேக்கில் அமைந்துள்ளது.ஐ.நா.வின் சுயாதீனமான உறுப்பாக அது கருதப்பட்டாலும் அதன் தீர்ப்புகளின் அடுத்தடுத்த கட்டங்களைத் தீர்மானிப்பது ஐ.நா. பொதுச்சபையும் பாதுகாப்புச்சபையுந்தான்.பாதுகாப்புச்சபையில் சக்திமிக்க நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் உண்டு.எனவே அங்கு விவாதிக்கப்படும் தீர்ப்புகளின் மீது சக்தி மிக்க நாடுகள் வீட்டோ வாக்கைப் பிரயோகிக்கமுடியும்.ரோஹியங்கா முஸ்லிம்களின் விடயத்தில் மியான்மருக்குச் சார்பாக சீனா அவ்வாறு வீட்டோ வாக்கைப் பிரயோகித்திருக்கிறது. அதுபோலவே இஸ்ரேலுக்கு எதிரான ஐ.நா. தீர்மானங்களின் போதும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாக தன்னுடைய வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறது. ஐ.நா.வின் வரலாற்றிலேயே அமெரிக்கா அதிகம் எண்ணிக்கையிலான வீட்டோ வாக்குகளைப் பிரயோகித்தது இஸ்ரேலுக்கு ஆதரவாகத்தான் என்றும் ஒரு கணக்கு உண்டு.

எனவே ஐ.நா.வின் உறுப்புகளில் ஒன்று என்ற அடிப்படையில் அனைத்துலக நீதிமன்றம் ஐ.நா.வுக்குள்ள எல்லா வரையறைகளையும் பலவீனங்களையும் இயலாமைகளையும் கொண்டிருக்கும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே. குறிப்பாக மியான்மருக்கு எதிராக கம்பியா தொடுத்த வழக்கின் கடந்த நான்கு ஆண்டுகால அனுபவத்தின் பின்னணியில் வைத்தே தென்னாபிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக தொடுத்திருக்கும் வழக்கையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

ரோஹியங்கா முஸ்லிம்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளாக பொருத்தமான நீதி வழங்கப்படவில்லை. ஐ.நா. உருவாக்கப்பட்டதிலிருந்து அது பெருமளவுக்கு இனப்படுகொலைகளின் பார்வையாளராகத்தான் இருந்து வந்துள்ளது. ஐ.நா.வின் இயலாமையை,கையாலாகத்தனத்தை நிரூபிக்கும் ஆகப்பிந்திய இனப்படுகொலைக்களந்தான் காஸா.தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கின்மூலம் பலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்குமா? அல்லது அந்த வழக்கு ஐ.நா.வின் கையாலாகாத்தனத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபிக்குமா ?

ஏனெனில்.உலகில் தூய நீதி என்று எதுவும் கிடையாது இருப்பதெல்லாம் அரசியல் நீதிதான். நீதிபதிகள் தனிப்பட்ட முறையில் நீதியாக நடக்கலாம். ஆனால் அந்த நீதியை நடைமுறைப்படுத்தப்போவது அரசுகள்தான். அரசுகள்,நலன்களின் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்கும்.அரசியலில் அறம்-நீதி என்பவையெல்லாம் கிடையாது. நிலையான ராணுவப் பொருளாதார நலன்கள்தான் உண்டு.அது சார்ந்த முடிவுகள்தான் உண்டு.அதனால்தான் அமெரிக்க அறிஞராகிய நோஆம் சொம்ஸ்கி பின்வருமாறு சொன்னார். 'அரசியல் அறத்தைக் கடைப்பிடிக்கும் காலம் வரும்வரை இனப்படுகொலை என்ற சொல்லை அகராதியில் இருந்து எடுத்துவிடுவதே நல்லது' .

தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கு இஸ்ரேலுக்கு மட்டும் எதிரானது அல்ல. இஸ்ரேலை ஆதரிக்கும் எல்லா மேற்கு நாடுகளுக்கும் எதிரானதுதான். அனைத்துலக நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும்பொழுது அதில் முக்கியமான பங்களிப்பை நல்கியது அமெரிக்காவும் பிரித்தானியாவுந்தான். அதே நாடுகள் இப்பொழுது தென்னாபிரிக்காவின் நகர்வை ஆதரிக்கவில்லை.எந்த ஒரு மேற்கத்திய நாடும் இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் அனைத்துலக நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கை ஆதரிக்கவில்லை. ஆனால் அதே மேற்கு நாடுகள்தான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன. இதை எப்படி விளங்கிக் கொள்வது?

இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் தென்னாபிரிக்காவும் மியான்மருக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் காம்பியாவும் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளன.இந்த நாடுகள் எவையும் உக்ரைனில், ரஷ்யா முன்னெடுக்கும் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து வழக்குத் தொடுக்கவில்லை. அது மேற்கு நாடுகளுக்கு எதிரான ஆபிரிக்க நிலைப்பாடு.ரஷ்யா, ஆபிரிக்க கண்டத்தை அதிகம் அரவணைத்து வைத்திருக்கின்றது.அங்குள்ள முன்னால் பிரெஞ்சுக் கொலனிகளில் நடக்கும் இராணுவச் சதிப் புரட்சிகளின் பின்னணியில் ரஷ்யாவின் மறைகரங்கள் இருப்பதாக ஊகங்கள் உண்டு.

அதேசமயம் காஸாவில் நடப்பது இனப்படுகொலை என்று சொல்லாத மேற்கு நாடுகள்,அதற்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் தென்னாபிரிக்காவை ஆதரிக்காத மேற்கு நாடுகள்,ரஷ்ய-உக்ரைன் போரில் ரஷ்யா இனப்படுகொலை செய்வதாகக் குற்றம் சாட்டின. போர் தொடங்கிய குறுகிய காலத்துக்குள்ளேயே அமெரிக்கா அதை இனப்படுகொலை என்று சொன்னது.அது ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்காவின் நிலைப்பாடு.

பேரரசுகள் மட்டுமல்ல சிறிய அரசுகளும்கூட அறம் சார்ந்து அரசியல் முடிவுகளை எடுப்பதில்லை. உதாரணமாக தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகிய பொழுது,பலஸ்தீனம் தமிழ் மக்களுடன் நிற்கவில்லை. பலஸ்தீன அதிகாரசபையானது மஹிந்த ராஜபக்சவின் நண்பனாகத்தான் காணப்படுகின்றது.2009 க்கு பின்னர் 2014ஆம் ஆண்டு பலஸ்தீனம் மஹிந்தவுக்கு அந்த நாட்டின் உயர் விருதாகிய "பலஸ்தீன நட்சத்திரம்" என்ற விருதை வழங்கியது.அங்குள்ள வீதி ஒன்றுக்கும் அவருடைய பெயரைச் சூட்டியது. அதாவது ஈழத்தமிழர்களால் 'இனப்படுகொலையாளி' என்று குற்றஞ்சாட்டப்படும் ஒருவருக்கு பலஸ்தீனம் அந்தநாட்டின் உயர்விருதை வழங்கியிருக்கிறது.இதை எப்படி விளங்கிக் கொள்வது?


அப்படித்தான் கியூபாவும்.ஒரு காலத்தில் போராடும் இயக்கங்களுக்கு அது முன்மாதிரியாக இருந்தது. ஈழப்போராட்ட இயக்கங்கள் சில தமது பொறுப்பாளர்களுக்கு கஸ்ட்ரோ என்று பெயர் வைத்தன.ஆனால் 2009க்கு முன்னரும் பின்னரும் குறிப்பாக ஐ.நா.வில் கியூபா யாருடைய பக்கம் நிற்கின்றது? ஐ.நா. தீர்மானங்களின் போது கியூபா, இலங்கைக்கு ஆதரவாகத் தான் வாக்களித்து வருகின்றது.இதை எப்படி விளங்கிக் கொள்வது?

அதாவது மேற்கண்டவைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிவது என்னவென்றால், சக்தி மிக்க நாடுகளோ அல்லது சிறிய நாடுகளோ எவையானாலும் அறத்தின் பாற்பட்டோ நீதியின் பாற்பட்டோ முடிவுகளை எடுப்பது குறைவு.பெருமளவுக்கு நிலையான அரசியல் நலன்களின் அடிப்படையில்தான் அவை முடிவுகளை எடுக்கின்றன.இப்படிப்பட்டதொரு குரூர உலகில் பலஸ்தீனர்களுக்கு அனைத்துலக நீதிமன்றம் எப்படிப்பட்ட ஒரு நீதியை வழங்கும்? தென்னாபிரிக்காவின் நகர்வை, ஆபிரிக்கக் கண்டத்தில் தற்பொழுது மேலோங்கிக் காணப்படும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் விளங்கிக் கொள்ளலாம்.எனினும் எல்லாவிதமான வாதப்பிரதிவாதங்களுக்கும் அப்பால் அது இனப்படுகொலைக்கு உள்ளாக்கி கொண்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவது.

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்துச் சுதந்திரமா?

# அது கிரிமினல் குற்றம்

அ.நிக்ஸன்

அரசாங்கத்தால் அவசரமாக முன்மொழியப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்ட வரைவின் ஆபத்துகளை ஊடக அமைப்புகளும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் சுட்டிக்காட்டியபோதும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அதனைச் செவிமடுக்கும் நிலையில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பின் 12 (1) ஆவது சரத்தை வெவ்வேறு வழிகளில் மீறுவதற்கு இந்தச் சட்டம் இடமளிக்கக்கூடும் என்று ஊடக அமைப்புகள் எச்சரித்துள்ளன. இணையப் பாதுகாப்பு எனப்படும் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை மீறும் ஒருவர் கிரிமினல் குற்றவாளியாகக் கருதப்படும் ஆபத்து உண்டு.

கருத்துச் சுதந்திர மீறல் என்பது கிரிமினல் குற்றச்சாட்டாக நிரூபிக்கப்பட்டால், ஒருவருக்கு ஆகக் குறைந்தது இருபது வருடங்கள் வரை சிறைத் தண்டனை வழங்கமுடியும்.

செய்தி அல்லது ஒரு தகவல் தவறான முறையில் வெளியிடப்பட்டிருந்தால் அதனைத் திருத்துவதற்கு அல்லது தண்டிப்பதற்கு வேறு வழிகள் உண்டு. ஆனால் இந்தச் சட்ட வரைவு எந்த ஒரு சாதாரண பொதுமகனும் சிந்திப்பதைத் தடுக்கிறது. நிகழ்நிலை காப்பு நகல் சட்டவரைவு (Online Safety Bill) அரச வர்த்தமானியில் சென்ற வருடம் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டிருந்தது. இந்த நகல் சட்டவரைவுக்கு எதிராகச் சுமார் 45 மனுக்கள் இலங்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அவற்றைப் பரிசீலனைக்கு உட்படுத்தியிருந்த நீதியரசர்கள் சில திருத்தங்களோடு நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்று சபாநாயகருக்கு அறிவித்திருந்தனர். இதனை நிறைவேற்ற சாதாரண பெரும்பான்மை போதுமானது என்று அரசாங்கம் கூறுகின்றது. இந்த நிலையில் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த நகல் சட்டவரைவு தொடர்பாக ஊடகவியலாளர்கள், சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்கள் மாத்திரமல்ல வர்த்தகர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அச்சமடைந்துள்ளன. மூன்று வருடங்கள் பதவிக்காலம் கொண்ட ஐந்து பேர் கொண்ட Online Safety Commission எனப்படும் நிகழ்நிலை காப்பு ஆணைக்குழு ஒன்றை அமைத்துச் சில தொடர்பாடல்களை தடை செய்வது இதன் பிரதான நோக்கமாகும்.

ஐந்து உறுப்பினர்களின் எண்ணிக்கை தேவைகளைப் பொறுத்து மேலும் அதிகரிக்கப்படலாம். ஆணைக்குழு உறுப்பினர்களை ஜனாதிபதியே நியமிப்பார். (சிலவேளை நாடாளுமன்றம் தெரிவு செய்யும் முறையை விவாதத்தின் பின்னர் திருத்தமாகச் சேர்க்கக் கூடும்)

தடை செய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலைக் கணக்குகள் (Online Account) மற்றும் போலி நிகழ்நிலைக் கணக்குகளை பயன்படுத்துவதை தடுப்பது உள்ளிட்ட சில விடயங்கள் இந்த நகல் சட்டவரைவில் குறிப்பிடப்பட்டுள்ளன. போலி நிகழ்நிலைக் கணக்குகள் குறிப்பாக முகநூல், ருவிற்றர் போன்ற சமூகவலைத்தளங்களை ஒருவர் போலியாக வைத்திருப்பதாக இந்த ஆணைக்குழு கருதினால் அல்லது முறைப்பாடு கிடைத்தால் அந்தக் கணக்குகள் தடை செய்யப்படும்.

ஆனால் உண்மையான முகநூல் கணக்கு ஒன்றையும் அரசியல் நோக்கில் இந்த ஆணைக்குழு போலியானது எனக் கூறித் தடை செய்யலாம் என்று ஊடக அமைப்புகள் அச்சம் வெளியிட்டுள்ளன. ஏனெனில் பிரதான ஊடகங்களில் வெளியிடமுடியாத பல விடயங்களை குறிப்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் சார்ந்த உயரதிகாரிகள், அமைச்சர்கள், மற்றும் அரசாங்கத்துக்கு விசுவாசமானவர்கள் மேற்கொள்ளும் ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்களை சமூகவலைத்தளங்கள் வெளிப்படுத்துகின்றன.

இதனால் குறித்த சமூகவலைத்தளக் கணக்குகளை இந்த ஆணைக்குழு அரசியல் நோக்கில் திட்டமிட்டுத் தடுக்கக்கூடிய ஏற்பாடுகள் இந்தச் சட்ட வரைவில் உண்டு என்பது பகிரங்கமாகும். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தகவல் தொழில்நுட்பவியல், சட்டம், ஆட்சி, சமூக சேவைகள், ஊடகவியல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அல்லது முகாமைத்துவத் துறைகளின் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டவர்களாக இருப்பர்.

இவ்வாறு நிபுணர்களைக் கொண்ட குறித்த ஆணைக்குழு பிரதான செய்தி ஊடகம் ஒன்றில் வெளியான செய்தி ஒன்றினால் பாதிக்கப்பட்ட அல்லது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட அறிக்கையை வெளியிட்ட நபருக்கு (ஊடகவியலாளருக்கு) அல்லது அவற்றுடன் தொடர்புடைய நபர்களுக்கு எச்சரிக்கை உத்தரவுகளை இந்த ஆணைக்குழு வழங்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

இந்த எச்சரிக்கைக்கு எதிராக குறித்த செய்தியாளர் அல்லது குறித்த சமூகவலைத்தளச்செயற்பாட்டாளர் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்க இயலாது. அத்துடன் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள், அத்தகைய தடை செய்யப்பட்ட அறிக்கையிடலுக்கு பதிலளிப்பதற்கான வாய்ப்பை வழங்குமாறு பணிப்புரை வழங்கவும் முடியும்.

சமூக வலைத்தளங்களில் பொய்யான கூற்றுகளை அறிவிக்கின்ற நபர்களுக்கு அத்தகைய கூற்றுகள் அறிவிக்கப்படுவதை நிறுத்துமாறு அறிவுறுத்தவும், பணிப்புரை வழங்கவும் தடை செய்யப்பட்ட கூற்றொன்றைக் கொண்டுள்ள நிகழ்நிலை அமைவிடமொன்றுக்குள் (online location) இந்த ஆணைக்குழு உறுப்பினர்கள் பிரவேசித்து விசாரணை நடத்தும் சந்தர்ப்பத்தையும் பெற்றிருக்கின்றனர்.

அல்லது அத்தகைய நிகழ்நிலை அமைவிடத்தில் இருந்து தடை செய்யப்பட்ட கூற்றை அகற்றுவதற்கு எவரேனும் இணைய சேவை வழங்குநர்களுக்கு அல்லது இணைய இடையீட்டாளர்களுக்கு அறிவித்தல்களை வழங்கவும் நீதிமன்றத்தை அவமதிக்கும் அல்லது நீதித்துறையின் அதிகாரம் மற்றும் பக்கச்சார்பின்மையின் பேணுகைக்கு பாதகமாகவுள்ள எவையேனும் தொடர்பாடல்களை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லவும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

இந்த ஐந்து பேர் கொண்ட ஆணைக்குழுவுக்கு எதிராக எந்தவிதமான சிவில் அல்லது குற்றவியல் வழக்கொன்றையும் தொடுக்க முடியாது. இணையத்தளத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு செயற்பாடுகள் இந்த நகல் சட்ட வரைவில் குற்றங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கைக்குள் இடம்பெறுகின்ற சம்பவங்கள் தொடர்பாக பொய்யான கூற்றுகளை பகிர்தல், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலான பொய்யான அறிவிப்புகளைச் செய்தல், கலகத்தை ஏற்படுத்துவதற்காக பொய்யான கூற்றுகள் மூலம் அநாவசியமான முறையில் ஆத்திரமூட்டுதல், பொய்யான கூற்றொன்றின் மூலம் மதக்கூட்டம் ஒன்றைக் குழப்புதல், மத உணர்வுகளை புண்படுத்த வேண்டும் என்ற திடமான உள்நோக்கத்துடன் போலியான கூற்றுகளை பகிர்தல், மோசடி செய்தல், ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல், அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் உள்நோக்கத்துடன் பொய்க் கூற்றுகளின் மூலம் வேண்டுமென்றே நிந்தை செய்தல், கலகத்தை அல்லது அரசாங்கத்துக்கு எதிரான குற்றமொன்றை ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் பொய்யான அறிவிப்புகளைப் பரப்புதல், துன்புறுத்தல்களை மேற்கொள்வதற்கான சம்பவங்கள் தொடர்பான கூற்றுகளை தொடர்பாடல் செய்தல் குற்றங்களாகும்.

அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகம், தவறொன்றைச் செய்வதற்காக தன்னியக்கச் செய் நிரல்களை உருவாக்குதல் அல்லது மாற்றுதல், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையுடன் இணங்கி செயற்படத் தவறுதல் என்பன இந்தச் சட்டத்தின் கீழ் பாரதூரமான குற்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

> போர்க்காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்களும் தமிழ் மக்களும் எதிர்நோக்கிய அச்சுறுத்தல்களைத் தற்போது சிங்கள மக்களுக்கு உணர்த்தியிருக்கும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம்.



இந்தச் சட்டத்தின் கீழ் தவறிழைக்கும் ஒருவருக்கு விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பிக்க, அபராதம் விதிக்க அல்லது குறித்த இரண்டு தண்டனைகளையும் ஒரே தடவையில் விதிக்க முடியும் எனவும் இந்தச் சட்ட வரைவு தெளிவாகக் கூறுகின்றது. இதேபோன்றதொரு சட்ட அமைப்பு பிரித்தானியாவில் கடந்த ஜுலை மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த நான்கு வருடங்களாக பொதுமக்கள், ஊடகத்துறையினர், சமூக வலைத்தளச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரோடும் கலந்துரையாடியே இந்தச்சட்டம் பிரித்தானியாவில் நிறைவேற்றப்பட்டது.

எவருக்கும் பாதிப்பில்லாத வகையில் அதேநேரம் இணையப் பாதுகாப்புக்கு ஏற்ற முறையிலும் சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்களின் உரிமைகளையும் கருத்துச் சுதந்திரத்தையும் பாதிக்காத முறையில் இந்தச்சட்டம் இயற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் இலங்கைத்தீவில் இந்தச் சட்டவரைவு உருவாக்கப்பட்டபோது எவருடனும் கலந்துரையாடப்படவில்லை. குறிப்பிட்ட சில சட்டத்தரணிகளும் சட்டமா அதிபர் திணைக்களமும் இந்தச் சட்ட வரைவைத் தயாரித்திருக்கின்றன.

அத்தோடு உயர்நீதிமன்றம் கூட இதனை அங்கீகரித்திருக்கிறது. குறிப்பிட்ட சில சரத்துக்களில் மாத்திரம் நாடாளுமன்றத்தில் திருத்தம் செய்யவேண்டுமென உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவுறுத்தியிருக்கிறது. நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை இந்தச் சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டாலும் ஐந்துபேர் கொண்ட ஆணைக்குழுவை நியமிக்க நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்படுமா அல்லது ஜனாதிபதி தன்னிச்சையாக நியமிக்கும் அதிகாரம் வழங்கப்படுமா என்பது குறித்து இதுவரை எவருக்குமே தெரியாது.

உயர்நீதிமன்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் திருத்தங்களைச் செய்வதற்குக் கூட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்படவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன. போர் நடைபெற்ற 2009 மே மாதம் வரையும் சமூகவலைத்தளங்கள் இலங்கைத்தீவில் பெரியளவில் இயங்கவில்லை. ஆனால் ஊடகங்களைக் கட்டுப்படுத்த குறிப்பாக தமிழ் ஊடகங்களையும் தமிழ் ஊடகவியலாளர்களையும் கட்டுப்படுத்த மிகக் கடுமையான முறையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் வடக்கு-கிழக்கில் நடைமுறைப்படுத்தியிருந்தது.

தமிழ் ஊடகத்துறை விவகாரத்தைக் கையாள இராணுவமும் புலனாய்வுத் துறையும் தன்னிச்சையாகவும் செயற்பட்டிருந்தன. இதுவரை தமிழ் ஊடகத்துறையைச் சேர்ந்த 39 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஊடக நிறுவனங்கள் பல தடவைகள் குண்டு வீசித் தாக்கப்பட்டிருக்கின்றன.

1981 ஆம் ஆண்டு யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட நாளில் இருந்து இன்று வரையும் தமிழர்களின் கருத்துச் சுதந்திரத்தை இலங்கை அரசாங்கம் கிரிமினல் குற்றமாகவே ஓரக் கண்ணால் பார்க்கிறது. ஆனால் தற்போதுதான் சிங்கள ஊடகத்துறையும், சிங்கள சிவில் சமூக அமைப்புகளும், சிங்கள சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்களும் கருத்துச் சுதந்திரத்தைக் கிரிமினல் குற்றமாகக் கருதக்கூடிய அளவுக்குச் சட்டங்களை இயற்ற முடியுமா? என்று கேள்வி எழுப்பி அச்சமடைகின்றனர்.

அதேநேரம் மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை கூழாவடி குளத்துவெட்டைப் பகுதிகளில் அத்துமீறிப் பயிர்ச்செய்கையிலீடுபடும் சிங்கள விவசாயிகள், இரராணுவத்தின் ஒத்துழைப்புடன் போடப்பட்ட மின்வேலிகளில் சிக்கி உயிரிழக்கும் பசுமாடுகள் பற்றிய செய்திகளை வெளியிட சிங்கள ,ஆங்கில ஊடகங்கள் மறுக்கின்றன. அவ்வாறு வெளியிட்டாலும் சிங்கள விவசாயிகளைத் தடுக்கும் தமிழ்ப் பயங்கரவாதிகள் என்றே குறிப்பிடுகின்றன.

ஆகவே இந்தச் சட்டவரைவை கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான கிரிமினல் குற்றம் என்றால், தமிழர்கள் விடயத்தில் சிங்கள ஊடகத்துறையினர் கையாளும் செய்தியிடல் முறையும் கிரிமினல் குற்றமல்லவா?

போர்க்காலத்தில் சில சிங்கள ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அவ்வாறு முற்போக்காகச் சிந்திக்கக் கூடிய சிங்கள ஊடகவியலாளர்கள் தற்போது மிகவும் அரிதாகவே உள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாயும் தனயனும்



## இங்கிலாந்தில் பிரிவு இலங்கையில் இணைவு

○ கே.வி.தவராசா

வட அயர்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ஜோன். இவர் இங்கிலாந்தில் வசித்த இலங்கையரான டேவிட் ரட்ணம் என்பவரை 1991ஆம் ஆண்டு லண்டனில் திருமணம் முடித்தார். 1992ஆம் ஆண்டு இவர்களுக்கு ஆண் குழந்தையொன்று கிடைக்கப்பெற்றது. இந்தக் குழந்தைக்கு யோசுவா (*Joshua*) எனப் பெயரிட்டனர். 1993 ஆம் ஆண்டு குடும்பப் பிரச்சினை காரணமாக லண்டன் நீதிமன்றத்தில் விவாகரத்துப் பெற்றனர். குழந்தையை யாரிடம் ஒப்படைப்பது என்பது பற்றி இருவரிடையேயும் இணக்கப்பாடு வரவில்லை. அதனால் குழந்தை 6 மாதங்கள் தந்தையான டேவிட் ரட்ணத்துடனும் மிகுதி 6 மாதம் தாயாரான ஜோனிடமும் இருக்கலாமெனத் தீர்ப்புச் சொல்லப்பட்டது.

1993 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு முற்பகுதி வரை குழந்தை யோசுவா நீதிமன்றத் தீர்ப்பின்படி இருவருடனும் மாறி மாறி வசித்து வந்தான். இந்த வேளையில் 1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் டேவிட் ரட்ணம் குழந்தை யோசுவாவோடு இலங்கைக்கு வந்தார். பின்னர் குருநாகலையில் சொந்தமாக தென்னந்தோட்டம் ஒன்றை வாங்கியதுடன் வேறு ஒரு பெண்ணைத் திருமணமும் முடித்துக்கொண்டு அங்கேயே மகனுடன் தங்கிவிட்டார்.

மகன் ஜோசுவாவை 6 மாதம் முடிந்த பின்னரும் தன்னிடம் டேவிட் ஒப்படைக்காத காரணத்தினால், ஜோன் மகனைத் தேடி டேவிட்டின் வீட்டுக்குச் சென்றார். அப்போதுதான் அவருக்குச் சில அதிர்ச்சிகரமான உண்மைகள் தெரியவந்தன.

ஜோன்-டேவிட் இருவருக்கும் சொந்தமான வீட்டினை 82ஆயிரம் பிரித்தானிய பவுண்ஸ்சுக்கு டேவிட் விற்றிருந்தான். இதைப் பற்றி ஜோனிடம் அவன் எவ்வித அனுமதியும் பெறவில்லை. சட்டவிரோதமாக வீட்டை விற்றதோடு அந்தப் பணத்துடன் மகனையும் அழைத்துக் கொண்டு டேவிட் இலங்கை போன செய்தியை அறிந்த ஜோனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மகனைத் தேடி உடனடியாக இலங்கை வந்து சேர்ந்தார் ஜோன்.

லண்டனில் உள்ள அவரது வழக்கறிஞர் மூலம் எம்மைத் தொடர்புகொண்ட ஜோன், இலங்கை வந்த பின்னர் தனக்குள்ள ஒரே சொத்து தனது மகன் மட்டுமே எனவும், தனது மகன் இருக்கும் இடத்தை அறியத்தந்தால் தன்னாலான சன்மானத்தைத் தருவதாகவும் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தார்.

பின்னர் தனது மகனும் முன்னாள் கணவருமான டேவிட் ரட்ணம் குருநாகலையில் இருப்பது தெரியவரவே, குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தில் ஜோனின் சார்பாக ரட்ணத்தை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு தாபரிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்ட டேவிட் ரட்ணம் நீதிமன்றில் ஆஜராகத் தவறியதையடுத்து மாவட்ட நீதிபதி தெகிதெனியினால் (தற்போது உயர்நீதிமன்ற நீதியரசராக கடமை புரிகின்றார்.) பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் ஆட்கொணர்வு மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த விசாரணைகளில் தனது நாட்டுப் பிரஜையான ஜோனின் நலனைக் கருத்திற்கொண்டு இலங்கையிலுள்ள பிரித்தானியத் தூதரக அதிகாரிகள், நீதிமன்றம் வந்து விசாரணைகளைப் பார்வையிட்டனர். கல்கிசை நீதிமன்றத்தில் ஜோன் சார்பாகப் பராமரிப்பு வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டு மாதம் 50,000 ரூபா பராமரிப்பாகத் தரும்படி மனுவில் கோரப்பட்டிருந்தது

இந்நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது வழக்கில் ஆஜராகியிருந்த பிரதிவாதியான டேவிட் ரட்ணத்தின் சட்டத்தரணி குழந்தை யோசுவாவைத் தாயாரிடம் ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. இதனை அடுத்து யோசுவா அவரது தாயாரிடம் நீதிமன்றத்தில் வைத்து கையளிக்கப்பட்டார்.

### புலிகளின் சட்டத்தரணி

இந்த வழக்குகளில் முக்கியத்துவம் யாதெனில், தனது மகன் தனக்குக் கிடைத்ததை தொடர்ந்து கல்கிசை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பராமரிப்பு வழக்கை வாபஸ் வாங்குவதற்காக நீதிமன்றுக்கு ஜோன் வந்திருந்த வேளையில், ஜோனையும் அவருக்காக வாதாடிய என்னையும் பி.பி.ஸி. தொலைக்காட்சி நேர்கண்டது.




அந்த நேர்காணல் நடந்துகொண்டிருக்கும் பொழுது கல்கிசை நீதிமன்றத்தில் பணிபுரியும் சில சட்டத்தரணிகள் நீதிமன்ற வளாகத்தில் நேர்காணல் எடுக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்ததுடன், ஜோன் ஒரு வட அயர்லாந்துப் (ஐரிஸ்) பெண்ணென்றும் அவரது முன்னாள் கணவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்றும், எனவே விடுதலைப் புலிகளுக்கும் ஐரிஸ் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருக்கலாமெனவும் கூறினர். இந்த வழக்கில் நான் நீதிமன்றில் ஆஜராகியதனால் நான் புலிகளின் சட்டத்தரணியென முத்திரை குத்தி கல்கிசை மாவட்ட நீதிபதிக்கும் பிரதான நீதவானுக்கும் வாய்மூலமாகவும் எழுத்துமூலமாகவும் முறைப்பாடு செய்தனர்.

மறுநாள் நான் வேறு வழக்கொன்றுக்காக நீதிமன்றம் சென்று எனது வழக்கு கூப்பிடப்படும்வரை நீதிமன்றில் அமர்ந்திருந்த வேளையில் கல்கிசை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் பரிசோதகரான ஜெயகுமார் எனது அருகில் வந்து 'ஒரு வாக்குமூலம் எடுக்கவேண்டும்' என்று கூறினார். நான் வாக்குமூலம் கொடுக்க மறுத்ததுடன் 'யாருடைய முறைப்பாட்டில் நீர் என்னிடம் வாக்குமூலம் பெற வந்துள்ளீர்?' என்று கேட்டேன். பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிபதிதான் வாக்குமூலம் எடுக்கச் சொன்னதாக அவர் கூறினார்.

நான் உதவிப் பொலிஸ் பரிசோதகரிடம் 'எனது கண்ணியத் தொழிலுக்கும் சட்டரீதியான எனது கடமைக்கும் இடையூறு விளைவிக்கிறீர். எனவே உமக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலையை உருவாக்கிவிடாதீர்' எனக் கடுமையான தொனியில் எச்சரிக்கை விடும் சூழ்நிலை உருவாகியது. நீதிமன்றத்தில் பகல் 12 மணியளவில் வழக்குகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் குறித்த பொலிஸ் பரிசோதகர் என்னிடம் வந்து, நீதிபதி அவரது உத்தியோகபூர்வ அறைக்கு வரும்படி அழைப்பதாகக் கூறினார். நீதிபதியின் அழைப்பை நிராகரித்த நான் பொலிஸ் பரிசோதகரிடம் 'நான் திறந்த நீதிமன்றத்தில்தான் எனது கடமையைச் செய்ய வந்திருக்கிறேனே தவிர நீதிபதியின் உத்தியோக பூர்வ அறைக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. இதனை நீதிபதியிடம் சொல்லுங்கள்' எனக் கூறிவிட்டு நீதிமன்றத்தைவிட்டு வெளியேறினேன்.

அவ்வாறு நான் நீதிமன்றத்தை விட்டுச் செல்லாமல் குறிப்பிட்ட நீதிபதியான சரத் டி ஆப்ருவின் அறைக்குச் சென்றிருந்தால் அந்த நீதிபதி என்னைப் பெரும் பிரச்சினைக்குட்படுத்தி எப்படியோ அவசரகாலச் சட்டத்தின்கீழ் அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிக்கவைத்திருப்பார். என்னை சிக்கவைக்க அந்த நீதிபதி பல வழிகளைக் கையாண்டிருந்தார். இந்த விடயத்தை எனது நண்பரான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் எனக்கு ஏற்கனவே கூறியிருந்தபடியால் நீதிபதி எனக்கு விரித்த் வலையிலிருந்து நான் தப்பக்கூடியதாகயிருந்தது.

அதன் பின்னர் இது விடயமாக உடனடியாக நான் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ததையடுத்து, நீதிச்சேவைகள் ஆணைக்குழு குறிப்பிட்ட மஜிஸ்ரேட் நீதிபதியான சரத் டி ஆப்ருவின் முன் நான் ஆஜராகிக் கொண்டிருந்த 16 வழக்குகளையும் மாவட்ட நீதிமன்றுக்கு விசாரணைக்காக அனுப்ப உத்தரவிட்டது. பின்னர் இந்த வழக்குகள் அனைத்தும் மாவட்ட நீதிபதி எரிக் பஸநாயக முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமையால் குறிப்பிட்ட நீதிவானுக்கு என்மீது மேலும் கடும் கோபம் உண்டானது.

தனது மகனை நீதிமன்றத் தீர்ப்பின்படி பெற்றுக்கொண்ட ஜோன் தனது மகனுடன் சிறிது நாள்கள் எங்கள் மனையில் தங்கிவிட்டு, 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது மகனுடன் பிரிட்டிஸ் எயார்வேஸ் மூலம் அயர்லாந்து சென்றடைந்தார். நானும் எனது மனைவியும் இலண்டன் செல்கின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஜோனும், யோசுவாவும் இலண்டன் வந்து எங்களைச் சந்தித்துச் செல்வதுண்டு. யோசுவா தற்பொழுது 31 வயது வாலிபன்.

இந்த வழக்கில் பல அனுபவங்கள் இருந்தாலும், இந்த வழக்குக்கும் பயங்கரவாத, அவசரகாலச் சட்டங்களுக்கும் எந்தச் சம்பந்தமில்லாத போதிலும் வழக்கில் ஆஜராகிய என்னை இந்த இரண்டு சட்டங்களில் ஒன்றுக்குள் சிக்கவைக்க அந்த நீதிபதி எடுத்த கடும் முயற்சி என் வாழ்நாளில் மறக்கமுடியாத அழியாத ஞாபகங்களாகும்.

நீதிபதி சரத் டி ஆப்ரு நாட்டிலுள்ள பல நீதிமன்றங்களில் கடமையாற்றிய வேளையில் பல பிரச்சினைகளை உருவாக்கியவர் என்பது சட்டத்துறையினர் நன்கு அறிந்த விடயம். நீதிபதி சரத் டி ஆப்ரு சட்டக் கல்லூரியிலிருந்து சட்டத்தரணியாக வெளியேறிய பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டத்தரணியாகச் சேவையாற்றி பின்னர் நீதித்துறையில் இணைந்து பல பதவி உயர்வுகளைப் பெற்று இறுதியில் உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வும் பெற்றார்.

நீதிபதி சரத் டி ஆப்ரு 2014 ம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு பெற்று கடமையிலிருந்தபோது 2015 ஆம் ஆண்டு அவரது வீட்டில் கடமையாற்றிய பணிப்பெண்ணை பாலியல் பலாத்காரம் புரிந்ததாக 2016 ஆம் ஆண்டு சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் நீதிபதி சரத் டி ஆப்ரு வீட்டின் மேல்மாடியிலிருந்து கீழே விழுந்து மரணமடைந்திருந்தார். இதுவே இலங்கை நீதித்துறை வரலாற்றில் உயர் நீதிமன்ற நீதியரசருக்கு எதிராக பாலியல் பலாத்காரம் புரிந்ததாக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதல் குற்றவியல் வழக்காகும்.

*(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் சரியான கழிவுமுகாமைத்துவம் இன்மையே டெங்குப் பரவலுக்கு காரணம்

**உலக சுகாதார நிறுவனத்தின் முன்னாள் நிபுணரும் ச**
**கேசவன் , தற்போது நிலவும் சமுதாய மருத்துவத்து**
**எதிரான தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் உதயன் - சஞ்சீ**

நேர்கண்டவர்: தர்ஷன் இராசரத்தினம்

**கே: சமுதாய மருத்துவத்துறையின் பிரதான நோக்கம் என்ன? எந்தெந்த நோய்களை சமுதாய மருத்துவ வகைக்குள் உள்ளடக்கலாம்?**

ப: சமுதாய மருத்துவத்தின் பிரதானமான நோக்கு நோய்த் தடுப்பு ஆகும். அது இரு வகையாக மேற்கொள்ளப்படுகின்றது ஒன்று தொற்று நோய்த் தடுப்பு மற்றும் ஒன்று தொற்றாநோய்த் தடுப்பு எனக் காணப்படுகிறது. டெங்கு, கொரோனா வைரஸ், டயரியா, சாதாரணமாக ஏற்படக்கூடிய தடிமன் காய்ச்சல், சின்னமுத்து இவ்வாறான தொற்றுநோய்களுக்கான தடுப்பு பல்வேறு முறைமைகளில் கையாளப்படுகின்றது. அதேபோன்று நீரிழிவு, உயர்குருதி அழுத்தம் போன்ற தொற்றாநோய்கள் தொடர்பில் குறித்த நோயினைத் தடுத்தல், ஆரம்பநிலையினைக் கண்டுபிடித்தல், தகுந்த சிகிச்சையளித்தல், நோயாளியைத் தொடர்தல், அவரது வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்தல் என தொற்றாநோய் முகாமைத்துவம் இங்கே சமுதாய மருத்துவத்தில் பல கூறுகளைக் கொண்டிருக்கின்றது. தொற்றாநோய்களில் ஒன்றான நீரிழிவு நோய் வீரியமாகின்றபொழுது கண், நரம்பு, சிறுநீரகம் போன்றன முழுமையாகச் செயலிழக்கக் கூடிய ஏதுவான நிலை உருவாகும்..

இந்த இரண்டையும் விட சமுதாய மருத்துவத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த இன்னொரு தொற்றாநோயாக மனநோயும் காணப்படுகிறது. மன நோய் ஏற்படப் பல காரணங்கள் உண்டு. சாதாரணமான ஒரு மனிதர் ஏன் மன நோய்க்கு தள்ளப்பட்டார் ? சமுதாயக் காரணிகள் குடும்பக் காரணிகள் எனப் பல அதற்குக் காணப்படுகின்றன. இதற்கு வெவ்வேறான சிகிச்சை முறைமைகள் காணப்படுகின்றன. என்னைப் பொறுத்தவரை நீரிழிவு நோயினையும் மனநோயினையும் நான் ஒன்றாகவே பார்க்கின்றேன். நீரிழிவு ஏற்படுகின்ற பொழுது அதற்குச் சிகிச்சை அளித்து எவ்வாறு ஒருவர் தன்னுடைய வாழ்வியலைக் கொண்டு நடத்துகின்றாரோ அவ்வாறே மனநோய் ஏற்பட்டவருக்கும் வழங்கப்படுகின்ற சிகிச்சை மூலம் அவரை அதிலிருந்து மீட்க முடியும். ஆனால்,மன நோய்க்கு உள்ளானவரை சாதாரணமான ஒருவராகப் பார்க்காமல் அவரைச் சமூகத்தில் இருந்து தனித்துப் பார்க்கின்றபொழுது அவரை மீட்டெடுப்பது கடினமான ஒரு செயலாகக் காணப்படுகின்றது. அவரையும் ஒரு சாதாரண மனிதராகப் பார்க்கின்ற பொழுது விரைவில் அவருக்கு வழங்கப்படுகின்ற சிகிச்சைகள் மூலம் மீள வழமையான வாழ்வியலுக்குத் திரும்புவார்.

இங்கு நீரிழிவு வெளியே தெரியவில்லை, மனநோய் வெளியே தெரிகின்றது .இதுதான் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் .ஆகவே இவ்வாறானவர்களை சிகிச்சை அளிப்பதன் மூலமாக மீளவும் சமூகத்துக்குள் இணைப்பதும் ஒரு சமுதாய மருத்துவப் பணியாகும். பெண்கள், குழந்தைகள் என்போர் வீட்டில்/ சமூகத்தில் பாதிக்கப்படுகின்ற பொழுது அவர்கள் அதனைச் சொல்வதற்கு ஒரு இடம் வேண்டும். ஆகவே இதற்கான சிகிச்சை நிலையங்கள் மருத்துவமனைகளில் காணப்படுகின்றன. அங்கே அவர்கள் முறையிட, பிரச்சினைகளை தீர்க்க இந்த நிலையங்கள் உதவுகின்றன. இன்று பாதிக்கப்படும் குழந்தைகள்,பெண்கள் தொடர்பில் பல தகவல்கள் வெளியே வருகின்றன. இதனை விட தொழிலாளர்கள் நலனும் சமுதாய மருத்துவத்தில் உள்ளடங்கும் ஒரு விடயமே. இந்தச் சமுதாய மருத்துவத் துறையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் எனப் பலரும் சேவையாற்றுகின்றனர். குறிப்பாக இந்தச் சமுதாய மருத்துவத்துதுறைக்குள் தாய் - சேய் நலன் பேணலும் பிரதானமானது.

**கே: உலக சுகாதார ஸ்தாபனத்தின் சமுதாய மருத்துவ நிபுணராக உங்கள் பார்வையில், இலங்கையின் வட மாகாணத்தில் நிலவும் தொற்றுநோய் மற்றும் தொற்றா நோய் முகாமைத்துவம் எப்படியிருக்கிறது?**

ப: தொற்று நோய் தொடர்பில் எடுத்து நோக்குகின்ற பொழுது அதன் நோய்த் தடுப்பு முறைமை மிகச் 'சிறப்பாகக் காணப்படுகின்றது. இலங்கையில் 95 வீதமான மக்கள் அம்மைநோய்த் தடுப்பூசியினைப் பெற்றுள்ளார்கள். இதற்குப் பிரதான காரணம் சுகாதார வலையமைப்பு இலங்கையில் திணைக்களரீதியாக சிறப்பாகச் செயற்படுகின்றது. அதனை விட பிள்ளைகளை பிரசவிக்கின்ற தாய்மாருடைய சுகாதார அறிவுமட்டமும் சிறப்பாக உள்ளது. காரணம் இடம்பெயர்வு, யுத்தம் மற்றும் அனர்த்த காலங்களில் கூட தடுப்பூசி அட்டையினை மிகப் பிரதானமான ஒரு ஆவணமாக அவர்கள் எடுத்துச் செல்வது வழமையாக இருந்தது. குறிப்பாக ஆசியாவில் இலங்கையினை தவிர தடுப்பூசியேற்றலில் மிகச் சிறந்த நாடு என்றால் அது தென்கிழக்கு ஆசியாவின் தாய்லாந்தையே குறிப்பிடலாம். இலங்கையில் கடும் போர்க்காலத்திலும், தடுப்பூசியேற்றலுக்கு போரில் ஈடுபட்ட இருதரப்புகளும் முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

ஆனால் தற்பொழுது சின்னம்மை நோயால் பாதிக்கப்பட்ட 700 குழந்தைகள் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். 2019 ஆம் ஆண்டு சின்னம்மை அற்ற நாடு என உலக சுகாதார ஸ்தாபனத்தால் இலங்கை அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் கொரோனா வைரஸ் தாக்கத்தினால், கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தினால் சின்னம்மை தடுப்பு மருந்து ஏற்றுதல் 10 சதவிகிதத்தால் உலகநாடுகளில் வீழ்ச்சி அடைந்தது. குறிப்பாக 95 சதவிகிதம் தடுப்பூசி ஏற்றியோர் காணப்படுவார்களாயின் அது பெரிதளவில் தாக்கத்தினை ஏற்படுத்தாது. இங்கே 10 விகிதம் பதிவு செய்தமையினால் இதன் தாக்கம் உலக நாடுகளில் பரவத் தொடங்கியது. இந்தத் தடுப்பு மருந்தைப் பொறுத்தவரை ஆயிரம் பேருக்கு அதனைச் செலுத்துகின்ற பொழுது மூன்று பேருக்கு மீள அந்த நோய் வருவதற்கான சாத்தியம் காணப்படுகிறது. உடல்ரீதியான காரணங்கள் இது மீள ஏற்பட ஏதுவாக அமைகிறது.

கடந்த ஜனவரி ஆறாம் திகதி தொற்று நோய்களில் சின்னம்மையைக் கட்டுப்படுத்த, இலங்கையில் தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டம் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணத்திலும் சரி யாழ். மாவட்டத்தில் இது திறம்பட முன்னெடுக்கப்படுவதற்காக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் முன்னின்று செயற்பட்டிருந்தார்கள். சின்னம்மை தடுப்பூசி, கொரோனா வைரஸ் தடுப்பூசி என்ற இரு தொற்று நோய்த்தடுப்பு நடவடிக்கைகளிலும் யாழ். மாவட்டம் முன்னிலையிலேயே உள்ளது.

கொரோனாத் தடுப்பு மருந்து முதன் முதலாக யாழ்.மாவட்டத்துக்கு வந்தபொழுது பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக முதலாவது தடுப்பு மருந்தினை மருத்துவ நிபுணர்களாகிய நாங்கள் பெற்றுக்கொண்டோம். மேலும் அரச அதிபர், அரச உயர் அதிகாரிகள் உட்பட்ட சுகாதாரப்பிரிவினரும், பணியாளர்களும் இந்த கொரோனா தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொண்டார்கள். இதனை நாம் ஒரு விழாவாகக் கொண்டாடினோம். 'கொரோனாவை ஒழிப்பதற்கு முன்னுதாரணமான முறையில் நாம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டால் பொதுமக்களும் அச்சமின்றி கொரோனா தடுப்பு மருந்தினைப் பெற்றுகொள்வார்கள்' என்பதே இதற்குக்காரணம்.

தொற்றா நோய்களில் புற்றுநோய்,நீரிழிவு,உயர் குருதி அழுத்தம்,இருதயநோய்,ஆஸ்மா, பாரிசவாதம் ஆகிய தொற்றாநோய்களை எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகக் கண்டுபிடிக்கின்றோமோ அந்தளவுக்கு அது நோயாளியின் ஆயுளைத் தக்கவைக்க உதவும்.நீரிழிவு இருக்கின்ற ஒருவர் அது தொடர்பில் எந்தவிதப் பரிசோதனைகளையும் மேற்கொள்ளாது தொடர்ச்சியாக இருக்கின்ற பொழுது அவரது சிறுநீரகம்,நரம்பு,கண் என்பன பாதிப்படையும். சிலர் சிறுநீரகம் செயலிழந்த பின்னரே சிகிச்சைக்கு வருவதும், அப்போது தான் அவர்களுக்கு நீரிழிவு கண்டறியப்படுவதுமான பல சம்பவங்களும் நடக்கவே செய்துள்ளன.

உயர் குருதியமுத்தம் காரணமாக இருதயம் பெரிதாகலாம். இருதயம் பெரிதான பின்பு சிகிச்சை சாவாலாக மாறுகின்றது. இருதயம் பெரிதாக வருவதற்கு காரணம் குருதி அழுத்தம் நீண்ட காலமாக இருப்பதுதான். இருதயம் தொடர்ச்சியாக ரத்தத்தினை வழங்கிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் ஏற்கனவே இருதயம் அழுத்தத்தில் இருக்கின்ற பொழுது குருதி அழுத்தம் மூலம் மேலும் இருதயம் அழுத்தத்துக்கு உள்ளாகின்றது. இறுதியில் இருதயம் தனது பணியினை நிறுத்த வேண்டிய சூழல் ஏற்படுகிறது. ஆகவே இந்த உயர் குருதி அழுத்தத்தினை அதன் ஆரம்ப நிலையிலேயே பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். இதற்காகவே பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**கே: இவ்வாறு குருதியமுத்தம் தனக்கு ஏற்பட்டிருப்பதை விரைவாகக் கண்டறிந்து. அதனைத் தடுப்பதற்கு இப்போதுள்ள வழிமுறை என்ன?**

ப: இவற்றைத் தடுப்பதற்கென நலன்புரி சிகிச்சை நிலையங்கள் காணப்படுகின்றன. பெண்களை விட ஆண்களே இங்கு அதிக அளவில் அவதானம் செலுத்தப்படுகின்றார்கள். பெண்கள் குறைந்தது மூன்று தடவையாவது தங்களுடைய வாழ்வில் மருத்துவப் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். கர்ப்பமாக இருக்கின்ற காலப்பகுதியிலும் குழந்தை பிரசவித்த பின்னரான காலப்பகுதியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சமுதாய மருத்துவ நிபுணருமான இரத்தினசபாபதிபிள்ளை**

**...றை சார்ந்த முக்கியமான விடயங்கள் குறித்தும், நோய்களுக்கு**
**...சீவி வாசகர்களுக்காக வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.**

அவர்களது வாழ்க்கையில் மருத்துவப் பரிசோதனைகளுக்கு இயல்பாகவே தள்ளப்படுகின்றார்கள். இங்கே ஆண்களுக்கான மருத்துவப் பரிசோதனை என்பது அவர்கள் தன்னார்வ ரீதியாக முன் வருகின்ற பொழுது மாத்திரமே இடம்பெறுகின்றது. குறைந்தது 40 வயதுக்குப் பின்னராவது இந்தப் பரிசோதனைகளை ஆண்கள் நிச்சயமாக முன்னெடுக்கவேண்டும். இங்கே ஆண்கள் தங்களுடைய நோய் நிலைமை அதிகரித்த பின்பு வருகை தருவதனை விடுத்து ஆரம்ப நிலையில் அதனைத் தடுப்பதற்கு முன் வரவேண்டும்.

**கே: இன்று தொற்றாநோய்களில் மக்களிடையே அதிக அச்சத்தை உண்டுபண்ணுவது புற்றுநோய்தான். அவற்றைக் குணப்படுத்த வழிகள் உண்டா?**

ப: சில வகைப் புற்று நோய்கள் குறிப்பாக கருப்பை, கழுத்து என்பவற்றில் உண்டாகும் புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்தால் அதனை முற்றாகக் குணப்படுத்தமுடியும். இந்தப் புற்றுநோய் வைரஸ் மூலம் ஏற்படுகின்றது. இதற்கான HPV தடுப்பூசி காணப்படுகின்றது.

குறித்த தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுகின்ற பொழுது முற்றுமுழுதாக இந்தவகைப் புற்றுநோய்களில் இருந்து முற்றாக விடுபடமுடியும். இதனைவிட பெண்களுக்கென விசேடமாக பரிசோதனை கிளினிக்குகளுக்குச் சென்று பரிசோதிப்பதன் மூலம் இந்தவகைப் புற்றுநோய்கள் ஏற்பட்டுள்ளதா, இல்லையா எனக் கண்டறியலாம். அதனடிப்படையில் சிகிச்சைகளைப் பெற்று குறித்த புற்றுநோயை வரவிடாமல் பாதுகாப்பாக இருக்க முடியும்.

**கே: பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் மார்பக புற்றுநோயின் தாக்கமும் தற்போது அதிகரித்துள்ளது. அதனையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிய முடியுமா?**

ப: ஆம். மார்பகப் புற்றுநோயைக் கண்டறிய சுய பரிசோதனை முறை இன்று காணப்படுகின்றது. மார்பகத்தில் கட்டி உள்ளதா என்பன போன்ற விடயங்கள் இந்தச் சுய பரிசோதனைக்காக குடும்ப நல உத்தியோகத்தரால் பெண்களுக்கு அறிவூட்டப்படுகின்றது. அவ்வாறு கட்டி போல ஏதாவது மார்பகத்தில் இருந்தால் மருத்துவ ரீதியாக அதனை அணுகமுடியும். பெரும்பாலான கட்டிகள் புற்றுநோய்க் கட்டிகளாக இருக்காது. அதனை விட மெமோகிராம் என்ற பரிசோதனை நடவடிக்கையின் மூலமும் இதனை ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்க முடியும். ஆரம்ப நிலையில் அதனை சாதாரணமாக குணப்படுத்தமுடியும். அதற்கு சிகிச்சை இருக்கின்றது. இவ்வாறு மார்பகப் புற்றுநோயை ஆரம்பநிலையிலேயே குணப்படுத்தியதால், நான் அறிந்தவரையில் பாதிக்கப்பட்டவர்கள் 25 முதல் 30 வருடம் வரை உயிர் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். முன்னைய காலங்களைப் போல மார்பகப் புற்றுநோய் என்றால், மார்பகத்தினை அகற்றவேண்டிய தேவை தற்காலத்தில் காணப்படுவதில்லை. அகற்றப்படுகின்ற தசைகளுக்குப் பதிலாக வேறு தசைகள் மூலம் மீள மார்பகத்தினை சிகிச்சை மூலம் பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியும். இன்று மருத்துவமனைகளில் இதற்கான வசதிகள் காணப்படுகின்றன. ஆகவே பெண்கள் பெரும்பாலும் தங்களுடைய உடல் அமைப்பு தொடர்பில் கவ்லைப்படத் தேவையில்லை.

ஆனால் அனைத்து புற்றுநோய்களையும் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கமுடியாது . உதாரணமாக புறொஸ்ரேற் புற்றுநோயைச் சொல்லலாம். இது பிரதானமாக ஆண்களுக்கு ஏற்படும். சிறுநீர் பைக்குக்கு கீழாக இருக்கக்கூடிய கிளாட் வீங்குகின்ற பொழுது சில வேளைகளில் புற்றுநோயை உருவாக்கும். வயது முதிர்ந்தவர்களுக்கு குறித்த பாதிப்பு பெரும்பாலும் பதிவு செய்யப்படுகிறது. PSA என்ற பரிசோதனையின் மூலம் குறிப்பிட்ட நோயின் நிலையினை அறிந்து கொள்ளமுடியும். துரதிர்ஷ்டவசமாக குறித்த பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகளவு பணத்தைச் செலவழிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. மேற்கத்திய நாடுகளில் கூட இலவ்சமாக குறித்த சிகிச்சை முறைமையினை பெற்றுக்கொள்ளமுடியாது. இவ்வாறான ஒரு பரிசோதனை முறைமை இருக்கின்றது என்பதற்காகவே இதனை குறிப்பிடுகின்றேன். ஆரம்ப நிலையில் இந்தவகைப் புற்றுநோயைக் கண்டறிந்தால் சாதாரணமாக சிகிச்சைமூலம் அவர்களைக் குணப்படுத்தமுடியும். ஆனால் புற்றுநோய் முதிர்ச்சியான நிலையில் அடையாளம் காணப்படுகின்ற பொழுது அதனைக் குணப்படுத்துவது மிகக் கடினம்.

**கே: தொற்றாநோய்கள் ஏற்படப் பொதுவான காரணங்கள் எவையாக இருக்கமுடியும்?**

ப: எமது தவறான உணவுப் பழக்கமே இதற்குப் பிரதான காரணம். ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி என்பவற்றினை அதிகளவில் உள்ளெடுப்பது நோய்கள் ஏற்பட வழிகோலும். ஏனைய இறைச்சி வகைகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது கோழி இறைச்சியால் பாதிப்புக் குறைவாக இருந்தாலும், அதனாலும் நோய் ஏற்படவே செய்யும். எனவே எந்தவொரு உணவினையும் அளவோடு உள்ளெடுக்க வேண்டும். நிறையுணவை பெற்றுக் கொள்வதற்கு நாம் பழகிக் கொள்ளவேண்டும். அதற்கு வறுமை ஒரு காரணமாக அமைய வேண்டியதில்லை. எங்களுடைய உணவில் இலை வகைகளை கட்டாயமாக உள்ளடக்க வேண்டும். நான் ஆபிரிக்காவில் பணிபுரிந்த பொழுது அங்கு உருளைக்கிழங்கு இலை வகை உணவில் பிரதானமாகக் காணப்பட்டது. எங்களுடைய வீட்டு எல்லைக்குள்ளேயே சத்து நிறைந்த உணவு வகைகள் ஏராளம் உண்டு. அதனைக் கண்டுபிடித்து நாம் உணவாக்கிக் கொள்ளவேண்டும். எவ்வளவு தூரம் இலை வகையினை உணவு வேளை ஒன்றில் உள்ளடக்குகின்றோமோ அவ்வளவு தூரம் கொலஸ்ட்ரால் உள்ளீர்ப்பு உடலில் குறைவடையும்.

உடல்நலத்துக்குக் கேடான இன்னொரு முக்கியமான காரணி மதுப்பாவனை. இது சமூகத்தில் தடுக்கப்படவேண்டியது. சுடுகாடு ஒன்றைத் தேடி நாமே செல்வதற்குச் சமனாக மதுபானமும் புகைத்தலும் உள்ளன. இலங்கையில் வாகன விபத்துக்கள் அதிகமாக பதிவாகின்றமையினால் நாம் அது தொடர்பிலும் மிக மிக விழிப்புடன் செயற்படவேண்டும்.

**கே: அப்படியானால் வடக்கில் அதிகரித்துவரும் உடனுணவுக் கலாசாரமும் நோய்களைக் கொண்டுவரக்கூடியதா?**

ப: தொற்றாநோயின் தாக்கத்துக்கு மூன்று பிரதான விடயங்கள் உண்டு. அவை உணவு, உடற்பயிற்சி, நற்பழக்க வழக்கங்கள் என்பனவாகும். முதல் குறிப்பிட்டதைப் போல உணவுப் பழக்க வழக்கமானது, கட்டுப்பாட்டுடனும், நிறைவு உணவைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். உடற்பயிற்சி என்பது கட்டாயமாக உடற்பயிற்சிக் கூடத்துக்குச் சென்று தான் செய்யவேண்டும் என்று கிடையாது. உடற்பயிற்சி என்பது சாதாரணமாக ஒரு நடையாகக் கூட இருக்கலாம். அல்லது வீட்டில் இருக்கக்கூடிய அன்றாட வேலைகளைச் செய்து கொள்ளலாம். நான் உலக சுகாதார ஸ்தாபனத்தின் சார்பில் பல்வேறு நாடுகளிலும் பணிபுரிந்த பொழுது குறித்த நாடுகளிலேயே நடைபயணத்தினை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் காலையில் எழுந்து நாங்கள் சிறிது தூரம் நடைப்பயிற்சி செல்வோமானால் நான்கு நாய்களாவது எம்மைத் துரத்தும். ஆகவே இது குறித்து உள்ளூராட்சிச் சபைகள் மக்களை உடற்பயிற்சிகேற்ற வகையிலான திடல்களை அமைத்து ஊக்குவிக்கவேண்டும். மக்களுக்கு விருப்பமான இவ்வாறான விடயங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இன்று அயலில் உள்ள கடைக்குச் செல்வதற்கு கூட மோட்டார் வாகனத்தில் தான் செல்லுகின்றோம். எவரும் சைக்கிளிலோ, நடந்தோ செல்வதில்லை. இவையெல்லாம் உடல்நலத்தைப் பாதிக்கும்.

நான் சமுதாய மருத்துவ நிபுணராக வடக்கில் பணியாற்றிய பொழுது உடன் உணவுகளுக்குப் பதிலாக பாரம்பரிய உணவுகளை பாடசாலைச் சிற்றுண்டிச் சாலையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டேன். மாணவர்களை சிறுவர்களை பாரம்பரிய உணவுகளுக்கு பழக்கப்படுத்துவது கடினமானது . ஆனால் அதனையும் தாண்டி அவர்கள் அதனை பழக்கப்படுத்திக் கொண்டால் அதிலிருந்து விடுபட மாட்டார்கள். அடிப்படையில் குறித்த பாரம்பரிய உணவுகள் தொடர்பான விழிப்புணர்வு வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்றால் போல் இந்த உணவு தயாரிக்கப்படவேண்டும். அமெரிக்காவில் நான் வசித்த பொழுது அங்கே பத்து டொலருக்கு நீராகாரம் பெறு உண்பேன். அங்கே நீராகாரம் என்பது பழஞ்சோறு தான். அதாவது இரவு வேளையில் சோற்றுக்குத் தண்ணீரை ஊற்றி வைத்து, சில கறிகள் மற்றும் தயிரினையும் விட்டு சாப்பிடுவதேஅங்கு நீராகாரம் என்று சொல்லப்படும். நம்மிடமிருந்து அற்றுப் போன இந்தப் பழஞ்சோற்று மரபு. இன்னமும் அமெரிக்காவில் நடைமுறையில் உள்ளது. எமது முன்னோர்களுடைய உணவை உண்டாலே எமக்கு நோய் ஏற்படாது.

**கே: அண்மைக்காலமாக வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் டெங்கின் தாக்கம் அதிகரித்து, உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. இந்த நிலைக்கு என்ன காரணம்? இதனைத் தடுப்பதற்கான உங்களின் ஆலோசனை என்ன?**

பதில் : டெங்குநோயால் யாழ்ப்பாணம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது உண்மைதான். ஆனாலும் எங்களுடைய மருத்துவமனையில் மிகவும் சிறந்த சேவையை அர்ப்பணிப்பு மிகுந்த மருத்துவர்கள் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். எமது மருத்துவமனைகளில் குறிப்பிட்ட அளவான நோயாளர்களுக்கே சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகள் உள்ளன. அந்த வரையறையை மீறி, நோயாளர் எண்ணிக்கை அதிகரித்தால் அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் பெரும் இடர்நிலை ஏற்படலாம். உலக சுகாதார ஸ்தாபனத்தில் கடமையாற்றுகின்றவன் என்ற அடிப்படையில் எமது மருத்துவமுறைமை டெங்கு தொடர்பில் சர்வதேசத் தரம் வாய்ந்ததாக இருப்பதை நான் அவதானிக்கின்றேன். ஏன் இவ்வளவு தூரம் டெங்கு நோய் பரவுகின்றது ?ஒவ்வொரு வருடமும் ஏன் பதிவு செய்யப்படுகின்றது? ஏன் நம்மால் தடுக்க முடியாது இருக்கின்றது? இவை அனைத்துக்கும் காரணம் ஒன்றே ஒன்றுதான். அது நுளம்பு மட்டுமே. இதனைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை. சரியான கழிவு முகாமைத்துவம் இல்லாததால் இதனைத் தடுக்கக் கடினமாகவுள்ளது.

1998 ஆம் ஆண்டு நான் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியாகக் கடமையாற்றிய பொழுது கழிவு முகாமைத்துவம் சீரின்மையால் டெங்குத் தாக்கம் அதிகமாக இருந்தது. டெங்குத் தொற்றினால் ஏற்படக்கூடிய மரண அவலம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய நிலையில் இயன்ற அளவு அந்த நேரம் டெங்குக் கட்டுப்பாட்டினை என்னால் உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆனால் இங்கேயுள்ளவர்கள் இப்போது தங்களுடைய கழிவுகளை வீதியிலும் வெற்றுக் காணிகளிலும் கொட்டுகின்றனர் . வீதிகளிலே கொட்டுகின்ற குப்பைகள் ஏதோ ஒரு விதத்தில் கொட்டுகின்றவரின் குடும்பத்துக்கு ஒரு பிரச்சினையாக மாறும். ஒருவர் இறப்பதற்கு குறித்த நபரும் காரணமாக இருக்கிறார். கழிவு முகாமைத்துவம் என்பது தனிநபர் மற்றும் சமுதாயம் சார்ந்த பொறுப்பு மிக்கது. இதற்குச் சுகாதாரத் திணைக்களம் மட்டும் பொறுப்பெடுக்கமுடியாது. சுகாதாரத் திணைக்களம் வேண்டுமென்றால் கழிவு முகாமைத்துவத்துக்கான இடங்களை அடையாளப் படுத்தி குறித்த இடத்தில் கழிவுகளை அகற்றுவதற்கு சிபாரிசு செய்ய முடியும். ஆனால் பொதுமக்களுக்கும், சமுதாய சமூக நிறுவனங்களுக்குமே இந்தக் கழிவு முகாமைத்துவதில் பெரும் பங்கு இருக்கிறது. ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் கைவண்ணம்




**சு.ஆருஷன்**
தரம் - 4B
யா/ செட்டித்தெரு
மெ.மி.த.க. பாடசாலை




**வை.அபிலாஷ்**
தரம் -7




**சு.நிருஷிகன்**
தரம் - 7
யா/கொக்குவில்
இந்துக்கல்லூரி




**தர்ஷாந்**
தரம் - 7
கிளி/ இராமநாதபுரம்
மகா வித்தியாலயம்



**கு.திசாரா**
தரம் - 2
யா/ ஆவரங்கால்
நடராஜா இராமலிங்க
வித்தியாலயம்



**பா.நயனிகா**
தரம் - 1
யா/ பெரியபுலம் மகா
வித்தியாலயம்



**ற.அஸ்மிகா**
தரம் - 2
யா/சாவகச்சேரி இந்து
ஆரம்பப் பாடசாலை .




**அ.யதிஷ்கா**
தரம் - 2C
யா/ கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை

**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# விண்வெளி




- விண்வெளியில் நடப்பது என்பது மிகவும் வித்தியாசமானது. விண்வெளி வீரர் ஆபத்துகளை எதிர்நோக்கித்தான் அங்கு இறங்குகிறார்.
- விண்கலத்திலிருந்து வெளியே வந்துதான் விண்வெளி வீரர் நடையை மேற்கொள்கிறார். இது Extravehicular Activity (EVA) செயற்பாடு என்று அழைக்கப்படுகிறது.
- விண்வெளி நிலையத்தில் ஏற்படும் கோளாறுகளைச் சரி செய்வதற்கோ, புதிய கருவிகளைப் பொருத்துவதற்கோ, பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்வதற்கோ விண்வெளிக்குச் செல்கிறார்கள் விண்வெளி வீரர்கள்.
- விண்வெளி உடை என்பது கிட்டத்தட்ட, சிறிய விண்கலம் போலிருக்கும். விண்வெளியில் நிலவும் கடினமான சூழலைச் சமாளிக்கும் விதத்தில் இந்த உடை வடிவமைக்கப்பட்டிருக்கும்.
- இந்த உடையில் 14 அடுக்குகள் இருக்கும். இதில் 3 விதமான பாதுகாப்பு அம்சங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.
- விண்வெளியில் நடக்கும்போது விண்வெளி வீரர்களின் உடல் கயிறு மூலம் விண்கலத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.
- விண்வெளியில் நடப்பது மிகவும் சவாலானது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தண்ணீருக்கு அடியில் இருப்பதுபோல் விண்வெளி உடை வடிவமைக்கப்பட்டிருக்கும்.
- விண்வெளிக்குச் செல்வதற்கு முன் விண்வெளி வீரர்கள் தண்ணீருக்கு அடியில் நடந்து பயிற்சி எடுப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போண்டாமணி;

## மின்னி மறைந்த சிரிப்பின் கீற்று






நகைச்சுவை நடிகர் போண்டா மணி என்கிற கேதீஸ்வரன் காலமாகிவிட்டார்.

போண்டா மணியைப் பற்றி ஏன் எழுத வேண்டும்?

நல்ல நகைச்சுவை நடிகர்.

இதைத்தாண்டி அவர் இலங்கை மன்னாரைச் சேர்ந்தவர் என்ற விடயமே காரணமாகின்றது. போண்டா மணி இலங்கையில் இருந்து யுத்த காலத்தில் அகதியாக தமிழ்நாட்டுக்குப் போய் சினிமாவில் நடித்தவர்.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்குப் போய் பிரபல்யம் அடைந்த ஒரே ஒரு நடிகராக போண்டா மணி மட்டுமே இருக்கிறார்.

ஏற்கனவே இலங்கையிலிருந்து பலர் கிளம்பி எம். ஜி.ஆர். சிவாஜி. கமல் மாதிரி ஆகிறேன் என்று போய் இருக்கிறார்கள்.

ஆனால் யாருமே அவ்விதம் பிரபலமாக வந்ததேயில்லை. இலங்கையின் பிரபல பொப்பாடகர் A.E.மனோகரன் இவ்விதம் கிளம்பிப் போனார்.

இங்கே "வாடைக்காற்று" திரைப்படத்தில் இரண்டாம் கதாநாயகனாக நடித்தவர்.

தமிழ்நாடு சினிமா அவரையும் இருகரம் கூப்பி வரவேற்கவில்லை.

ஆங்காங்கே சிறுவேடம் கிடைத்தது.

வில்லனின் கையாள், கூட்டத்தில் ஒருவன்.

"மனிதனில் இத்தனை நிறங்களா" படத்தில் ஒரு மாட்டு வண்டியில் படுத்திருக்கும் காட்சியில் மட்டுமே நடித்திருப்பார்.

வாய்ப்பு வரும் என்று காத்திருந்து காத்திருந்து காலமாகி விட்டார். இன்னும் பலர் நடிப்பதற்காக போய் எந்த வாய்ப்பும் சரிவர அமையாதவர்கள். சிலோன் விஜேந்திரன், சிலோன் சின்னையா இன்னுமொருவர் பொப்பிசை பாடகர் மகேஸ், இவர்கள் யாருமே தமிழ்ச் சினிமாவில் பிரபல்யமாகாதவர்கள்.

சிறு சிறு வாய்ப்புகள் அவர்களுக்குக் கிடைத்தன. அவர்களாக 'இந்தப்படத்தில் நடித்தேன் பார்த்தீர்களா?'

என்று கேட்டால்தான் மற்றவர்களுக்கே தெரியும் என்றளவிலான பாத்திரங்கள் அவை. சிலோன் விஜயேந்திரன் புலவர் கல்லடி வேலுப்பிள்ளையின் பேரன்.

சிறந்த கவிஞர். கவிஞர் கம்பதாசனை ஆய்வுசெய்து வெளிஉலகுக்குக் கொண்டு வந்த சிறந்த ஆய்வாளர். இவரை நான் திரைப்படங்களில் கண்டது "புன்னகை மன்னன்" திரைப்படத்தில் ஒரேயொரு காட்சியில் மட்டுமே. வேறு சில படங்களிலும் நடித்திருக்கிறார். இவருக்கும் தென்னிந்திய சினிமா கைகொடுக்கவில்லை. ரஜினியின்'பொல்லாதவன்' திரைப்படத்தில் இவரது கண்ணை மட்டும் காட்டி பயமுறுத்துவார்கள். இவர்களை எல்லாம் தாண்டி போண்டா மணி கொஞ்சம் பிரபல்யம் அடைந்தார். சினிமா வாய்ப்புத் தேடும் போது நாள் முழுவதும் பசியைப்போக்க போண்டா சாப்பிட்டுக் கொண்டு இருந்தபடியால், தன் பெயரை "போண்டா மணி" என்று வைத்துக்கொண்டார். பாக்கியராஜ் மூலம் "பவுண் பவுணுதான்" படத்தில் நடிக்கத் தொடங்கினார். விவேக், வடிவேலு ஆகியோரின் நகைச்சுவைக் கூட்டணியில் இணைந்ததன் மூலம் திரைப்பட உலகில் அவரால் நிலைக்க முடிந்தது. "சுந்தரா டிராவல்ஸ்" படத்தில் மாப்பிள்ளையாக நடித்த காட்சி மூலம் மேலும் பிரபல்யம் கிடைத்தது.

வடிவேலுவுடன் நடித்த "அண்ணை யாரு கேட்டாலும் சொல்லிடாதீங்க அடிச்சுக்கேட்டாலும் சொல்லிடாதீங்க" அவரின் மிக அற்புதமான நகைச்சுவை காட்சி ஆனால் தொடர்ச்சியாக துணை நடிகர் என்ற ஸ்தானத்தில் தான் அவராலும் நடிக்க முடிந்தது.

இதற்குப் பிரதான நகைச்சுவை நடிகர்தான் வாய்ப்பு தரவேண்டும். சம்பளமும் அவர்கள் தருவதையே வாங்க வேண்டும்.

"மருதமலை" படத்தில் பிச்சைக்காரனாகவரும் போது போண்டாமணியின் காசை வடிவேலு பிடுங்கி விடுவார்.

"ஏட்டையா காசை கொடுங்க " என்று போண்டாமணி கெஞ்சுவார். இயல்பிலும் இதுதான் நடந்திருக்கும்.

100 படங்களுக்கு மேல் நடித்த ஒரு சினிமா நடிகன் தன் மருத்துவச் செலவுக்குப் பணமில்லாமல் பல நடிகர்களை கேட்டு உதவி பெற்றுக்கொண்டதாக தகவல்கள் வந்தன. துணை நடிகர்களின் நிலை இதுதான் . குறைந்த சம்பளமே கிடைக்கும், பேரம் பேசினால் வாய்ப்பு போய்விடும். இதனால் பேசாமல் நடித்து விட்டுப் போய்விடுவார்கள். போண்டா மணி தன் வாழ்நாளில் இலட்சத்தைத் தொட்டே பார்த்திருக்கமாட்டார்.



சினிமா வாய்ப்புத் தேடும் போது நாள் முழுவதும் பசியைப் போக்க போண்டா சாப்பிட்டுக் கொண்டு இருந்த படியால் , தன் பெயரை மணி என்று வைத்துக்கொண்டார்.

வடிவேலு இவர் போன்ற பல நடிகர்களைப் பயன்படுத்தியவர். ஆனால் போண்டாமணியின் அந்திம காலத்தில் அவருக்கு உதவி செய்யவோ , அவரது மரணவீட்டில் கலந்து கொள்ளவோ இல்லை என்கிறார்கள்.

மறைந்த நடிகர் விஜயகாந்த் தான் நோய்வாய்ப்பட்டாலும் போண்டா மணிக்கு வழமைபோல உதவி செய்தவர். கடினப்பட்டு, அவமானப்பட்டு நடித்தாலும் காசை கண்ணாரக் காணாமல் போண்டாமணி காலமாகி விட்டார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவராகிலும் இலங்கையில் பிறந்து தென்னிந்திய சினிமாவில் நகைச்சுவை நடிகராக முப்பது வருடங்களுக்கு மேல் இருந்ததற்காக போண்டா மணிக்கு ஒரு இரசிகனின் அஞ்சலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்புதினம்



பாகம் 2

**○ இராகவன்**

23

முதலாமிடம் என்று சொல்லிவிட்டு ஒரு பொம்பிளைப்பிள்ளையின் பெயரை அறிவித்தார்கள். எனக்குக் கடைசிவந்தாலும் முதலாமிடம் கிடைக்காதென்று தெரியும். மற்றது முதலாமிடம் கிடைச்சதும் அந்தப் பள்ளிக்கூடபிள்ளைக்குத்தான். இரண்டாமிடம் என்றவுடனே நெஞ்சு பக்கென்றது. ' ச.இராகவன் யா விக்னேஸ்வரக்கல்லூரி 'என்றதைக் கேட்டதுமே, தேன்வந்து பாயுது காதினிலே எனப் பாரதியார் பாடியிருந்ததின் அர்த்தம் அப்போது தான் முழுமையாகப் புரிந்தது.

அதைக் கேட்டு முதலில் கைதட்டியது நாளினி ரீச்சர்தான். பிறகுதான் மற்றாக்கள் கை தட்டினவை. என்ர வாழ்க்கையில் போட்டியில பங்குபற்றி எனக்கு முதன்முதலாகக்கிடைச்ச 'சேர்ட்டிபிக்கேற்' அதுதான். இண்டைக்கும் அதைப் பத்திரமா வைச்சிருக்கிறன். அந்தச் சேர்ட்டிபிக்கேற்றை எங்கட பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி ஒரு வெள்ளிக்கிழமை பிறேயர் முடிஞ்சாப்போல சோமசுந்தரம் அரங்கு மேடையில வைச்சு அதிபர் வைரமுத்து செல்வராசா கைகுலுக்கி எனக்குத் தந்தார். நான் முதன் முதல்ல ஏறின மேடையும் அதுதான்.

சரி அதைவிடுவம். இப்ப நவம் மாஸ்ரரைப் பற்றி இன்னும் கொஞ்சம் பாப்பம். நான் முதலே நவம் மாஸ்ரர் "பியூசி" எண்டொரு ரியூசன் சென்ரறை நெல்லியடி மகாத்மா லேனுக்குள்ள நடத்தினவர் எண்டு சொல்லியிருக்கிறன். அந்த ரியூசன் 1988 தொடங்கி 1990 வரைக்கும் வெகுசிறப்பாக நடந்தது. அந்தப் காலப்பகுதியில தான் இந்தியன் ஆமியும் நெல்லியடிக்குள்ள சென்றிப் பொயின்றுகள் போட்டு இருந்தவன். லக்சுமி தியேட்டரில தான் அவங்கட மெயின்காம்ப் இருந்தது. (அந்த இடத்திலதான் இப்ப இலங்கை வங்கியிருக்குது.) அதுக்கங்கால ஈ.பி. ஆர். எல். எப். இன்ர மெயின் காம்பும் இருந்தது.

அப்ப நெல்லியடி ஒரே பரபரப்பாயிருக்கும். இதுக்குள்ள இயக்கப்பொடியளும் சுழியோடிக்கொண்டு திரிவாங்கள். அப்பிடித்திரியேக்குள்ள பாடுவாய்ச்சால் கிறுனேற் எறிஞ்சு போட்டு ஓடியிடுவாங்கள். பிறகென்ன இந்தியன் ஆமிக்காரர் வந்து வாறவை போறவை நிண்டவை கிண்டவைக்கெல்லாம் முதுகு முறிய வெளுவெளு வெண்டு வெளுத்துப் போட்டுப்போவாங்கள். அண்டைக்கும் அப்பிடித்தான் நடந்தது. மகாத்மாலேனுக்கை வைச்சுக் கிறுனேற் சார்ச் பண்ணிட்டாங்கள். அதுக்குப்பிறகு எது நடக்கோணுமோ அது வெகு சிறப்பாக நடந்தது. இதில அகப்பட்டவர் நவம் மாஸ்ரர்தான்.

அந்தாள் ரியூட்டறிக்குள்ள நிண்டு தன்ரபாட்டில் வகுப்பெடுத்துக்கொண்டிருந்தது. றோட்டில நடந்த விசயத்துக்கு ரியூட்டறிக்குள்ள வரமாட்டாங்கள் எண்ட நம்பிக்கையில தான் அந்தாள் வகுப்பெடுத்துக் கொண்டிருந்திருக்கு. இந்தியன் ஆமியே இதெல்லாம் பாக்கிறவன்?

(தொடரும்)

# காத்திருப்பு




பரமானந்தம் ஜெயக்குமார்

முடிவெடுத்துவிட்டேன் . தலைநகரத்தில் இருந்து என் நகரத்துக்குச் செல்ல. அது ஒன்றும் இலகுவானது இல்லை. நிதானமாகவும் ஒவ்வொன்றாகவும் திட்டமிட வேண்டும் "திட்டமிடத் தவறினால் நீ தோல்விக்கு தயாராவதற்கே திட்டமிடுகிறாய்" என்ற பொன்மொழி மனதில் தோன்றியது. எதில் தொடங்குவது? வேலை இடமாற்றத்தில்தான் முதலில் தொடங்கவேண்டும்.

பல சில்லுகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்த இயந்திரங்கள் போல இருக்கும் இடமாற்ற செயல்முறையில், ஸ்மார்ட்டான முறைகள் மூலம் தான் சில்லுகள் இயங்கும். சில்லுகள் இயங்க ஒரு நாள் சேவைகளும் உண்டு. பல நாள் சேவைகளும் உண்டு.பதவிப் பலமும் உதவும்.நல்ல குண பலமும் உதவும்.

என்றாலும் விழித்தவரே பிழைப்பர்! விழித்தவர்களுக்கு இடமாற்றம் கைகூடி வந்தது. மடித்தவர்களை தேடி நாடி ஓடி கையில் வந்தமர்ந்தது. சுழித்தவர்கள் கோல் (Call) மூலம் வந்த இரகசியச் செய்திகளை நசுக்கி வைத்து ரசித்தார்கள். ஆனால் நடித்தார்கள்.

மறுத்து வந்ததால் நான் முழித்துக்கொண்டேன். "அடுத்த முறை தான் சரி வரும் போல" என்றார் அதிகாரி. 'ஏன்'? என்பது போல ஏறெடுத்துப் பார்த்தேன். 'இது எல்லாம் கற்றுத் தரமுடியாது' என்று பார்வையாலே பதில் தந்தார். இடமாற்ற விண்ணப்பம் உள்ள கந்தோருக்கு நடந்தேன்.அங்கே லிஃப்ட் ஒன்று இயங்காமலும் மற்றொன்று வி.ஐ.பி.களுக்கு மட்டும் என்றிருக்கவும் படிப்படியாக படியேறினேன். மூச்சிரைக்க ஏறிய என்னை மூலையில் இருந்த முதுகுச் சட்டம் இல்லாத கதிரை வரவேற்க அதில் அமர்ந்தேன். முனகியது. பணிப்பாளரின் அறைக்கு முன்னால் அதிகாரி போல் நின்றவன் பின்னால், எல்லாரும் பவ்வியமாக நின்றார்கள். அறையில் இருந்து மணியடிக்க உள்ளே போனவனிடம் பார்வையாலும் சொல்லாலும் கட்டளைகள் இடப்பட்டன.

அப்பப்பா... நடிக்கத் தெரிந்தவர்கள் நடிக்கும் நேரம். பவ்வியமாக சென்று பாவமாக பகன்றவர்களுக்கே பெரும்பாலும் கையெழுத்திட்டு மணி அடிக்கப்பட்டு பத்திரங்கள் பாதுகாக்கப்பட்டு படியேறின. அலைபேசிகள் அழ தொலைபேசி மூலம் தொடர் எண்கள் குறிக்கப்பட்டன. குறைபாடுகள் குறிக்கப்பட்டு கிறுக்கப்பட்டன. அவர்களில் சிலர் மதிக்கப்படவேண்டியவர்கள் தான். இன்னும் சிலர் பக்குவம் இல்லாததால் பாதிக்கப்பட்டவர்கள். மற்றவர்களை மதிக்கவும் முடியாது. மிதிக்கவும் முடியாது. பாதுகாக்கப்பட்ட பத்திரங்களின் பட்டியல் பருத்தது. சிலரின் முகம் மூர்க்கமானது. நடிக்கத் தெரியாதவர்கள் அவர்கள். பணிப்பாளரின் பார்வையால் பகல் உணவுக்காக அவர் தயாரானதைப் புரிந்த பணியாளன் கதவை தாள் இட்டான். மறு கதவால் நகர்ந்தும் தன் கீழ் பணிபுரியும் பணியாளர்களில் சிலர் சில்லுகளாக ஓடி ஓடி வேலை செய்து தேய்ந்து இயங்கமுடியாத சக்கரங்களாக மாறியவர்களின் தேவைகளையும் பார்வையாலே புரிந்துகொண்டும், பெரும் பணிகளைச் சுமந்து கொண்டும் தன் தலையை நிமிர்த்தவும் குனியவும், முடியாமல் மெதுவாக வி.ஐ.பி. லிஃப்ட் மூலம் மறைந்து போனார்.

விஷயம் முடிந்தவர்கள் விரைந்து படிகளால் கீழிறங்க என்னைப் போன்றவர்கள் அடுத்த அறையில் உள்ள பிரதி அதிகாரியை நாட நானும் அவர்களுடன் வரிசையில் சேர்ந்துகொண்டேன்.

வயதான அதிகாரி, அனுபவத்தால் கையொப்பம் இடத் தொடங்கினார். நானும் விண்ணப்பத்தை நீட்ட பார்வையை என் மேல் படரவிட்டார். அருகில் இருந்த உதவியாளிடம் என் விண்ணப்பத்தை நீட்ட அவர் பைல் ஒன்றில் இருந்து விண்ணப்பத்தை உருவி எடுத்தார். அதில் சிவப்பு நிற மையால் அடிக் கோடிடப்பட்டிருந்து. என் அதிகாரி ஏன் அடுத்த முறைதான் கிடைக்கும் என்று கூறியது இப் போது தான் விளங்கியது. அவர் தன் ஸ்தாபனத்துக்குத் தேவையான அளவுக்கு குறைவான பணியாளர்களே தன்னிடம் உள்ளனர்கள் என்று குறிப்பிட்டிருந்தார். ஒரு அப்பீல் ஒன்று தருமாறு கேட்டுக்கொண்டு எழுந்தார்.



அவரும் மதிய உணவுக்கு தயாராகிறார் என்பதைப் புரிந்த கொண்டு வெளியேறினேன். உயர் அதிகாரியின் வயதுக்கான நாகரிகத்தில் ஒன்றை அவரிடம் இருந்து கற்றுக்கொண்டேன்.

'என்ன அப்பீலில் எழுதுவது?
என் நிலைமையை எழுதுவதா ? என் பெற்றோரின் நிலைமையை எழுதுவதா?
யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்பதா?
ஒன்றுமே தெரியவில்லை. இந்தக் காரணங்களுக்கு இடமாற்றம் கிடைக்குமா?
கிடைக்காதே?' கீழே இருந்து சிலர் மேலே ஏறிவரத் தொடங்கினர்.

சிவப்பு நிற உடை அணிந்த ஒருவரைச் சுற்றி வாசலில் கூட்டம் கூடியது. யூனியனைச் சேர்ந்தவர் என்று விளங்கியது. என் நிலைமையைப் புரிந்து கொண்டு மருத்துவக் காரணங்களாலும், வயதான பெற்றோரை கவனிக்க வேண்டியிருப்பதாலும் மனிதாபிமான அடிப்படையில் இடமாற்றம் தருமாறு மனு எழுத ஆலோசனை வழங்கினார். கோல் மூலம் வந்த இரகசியத் தகவல்கள் என்ன என்பதை இப்போது நன்றாகப் புரிந்துகொண்டேன்.

வெள்ளைத் தாளில் எழுதிச் சான்றுகளை இணைத்து கொண்டு வெள்ளிக்கிழமை மீண்டும் ஒபிசுக்கு விரைந்தேன். பணிப்பாளரின் அறை மட்டுமே திறந்திருந்தது. மெல்ல பின் வாங்கினேன். ஒபிசின் படிகளில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த பூனைக்குட்டி ஏதோ பெரிய சத்தம் கேட்க பயந்து மெல்லச் சிற்றுண்டிசாலைக்குள் புகுந்து தன்னைப் பாதுகாத்தது.

திங்கட்கிழமை ஒபிசில் கூட்டம் நடந்தது . தேநீர்கள் பரிமாறப்பட்டது. நானும் சிற்றுண்டிச்சாலைக்குள் புகுந்தேன். சில சில்லுகளும் சகலகலா சக்கரங்களும் சேர்ந்து தேநீருடன் எடுத்ததைக் கடித்தார்கள்.சக்கரங்களையும் சில்லுகளையும் இணைக்கும் சங்கிலிகளாக பணிப்பாளரின் அறைக்கு முன்னால் நிற்பவனும், மற்றொருவனும் நின்றார்கள். நான் மோட்டார் சைக்கிள் இருக்கும் இடத்துக்குத் திரும்ப, சிலர் அவர்களையும் "சேர்" என்று கூப்பிட்டது போல கேட்டது.

லஞ்சம் என்பதை உயர் அதிகாரிகள், சக பணியாளர்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லாதபோதிலும் பணிபுரிபவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியும் நெருங்கியும் பழகுகையில் நம்பிக்கையானவர்களாக அவர்கள் மாறுகையில் இரு பகுதியினரும் சேவைகளை முன்நகர்த்தும் எந்த ஒரு செயல்பாட்டையும் தூண்டக்கூடிய காரணங்கள் எதுவாகவும் இருப்பினும், அதாவது புரிந்துணர்வாலோ, இரக்கத்தாலோ, சிபாரிசுகளாலோ, செல்வாக்கோ, நட்போ, ஈர்ப்போ, நிறமோ, இனமோ, மொழியோ, பயமோ,
தரவுகளோ, செய்திகளோ, புகைப்படமோ, நேரடி அச்சுறுத்தலோ, மறைமுக அச்சுறுத்தலோ, வரலாறோ, வாழ்க்கைச் செலவோ மதமோ, பணமோ அல்லது வேறு எந்தக் காரணியோ எதுவாயினும் முறையற்றதாகி லஞ்சத்தின் ஆரம்பப் புள்ளிக்கு வித்திடும் . ஆனால் தனியார் துறையில் சேவைகளினதும் தேவைகளினதும் விலைகளை அதிகரிப்பதால் இவை எவைகளையும் தவிர்த்தாலும் சேவைகளை விரைவுபடுத்த எத்தனிக்கும் முறைகளில் முறையற்ற செயற்பாடுகளும் ஆரம்பப் புள்ளிக்கு வித்திடும் என எண்ணிக்கொண்டு நிமிர்ந்து பார்த்தேன்.

எப்போதும் தனித்தும், சேர்ந்தும் வந்த சில்லுகள் இவர்களுடன் சேர்ந்தும் சிரித்தும், சேராமலும் விரைந்தும் ஊர்ந்தும் வந்த இடத்துக்குத் திரும்ப, நல்ல பல சக்கரங்கள் சில்லுகள் சங்கிலிகள் சீராகவும் சிறப்பாகவும் சேர்ந்து இயங்க ஒபிசில் மீண்டும் வேலை வேகமெடுத்தது. புதன்கிழமை வெற்றிகரமாக என் மனுவை கொடுத்துவிட்டேன். சிப் (Chip) ஒன்றில் என் விவரங்கள் இருந்திருந்தால் மனிதாபிமான அடிப்படையிலே என்றோ கவனிக்கப்பட்டு, சான்றுகளை சமர்ப்பித்திருக்க வேண்டிய வேலை வந்திருக்காது.வேலையும் எப்போதோ முடிந்திருக்கும். எனக்கும், இடமாற்றமும் கிடைத்திருக்கும் என எண்ண முடிந்ததே ஒழிய இன்னும் காத்திருக்க வேண்டி இருந்தது. தலைநகரத்து வருகையில் சேறுகள் நிறைந்த இடங்களில் முதலைகளால் உயிராபத்து உண்டு என்றும், சனநெருக்கடி நிறைந்த இடங்களில் உங்கள் தருணம் வரும் வரை காத்திருங்கள் என்று எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது.

# உலக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் தனித்துவிடப்பட வில்லை என்ற உணர்வை அது அவர்களுக்கு கொடுக்கும். இந்த விடயத்தில் பலஸ்தீனர்கள் ஈழத்தமிழர்களை விடவும் பாக்கியசாலிகள் என்று கூறலாமா?

ஏனெனில், இறுதிக் கட்டப் போரில் வன்னி நிலத்தில் தமிழ்மக்கள் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார்கள். யாரும் உதவிக்கு வர வில்லை.எந்த ஒரு நாடும் உத்தியோகபூர்வமாக அவர்களை ஆதரிக்க வில்லை.தென்னாபிரிக்கா ஆதரிப்பதாகக் கூறப்பட்டாலும் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. தனது சேவைக்காலத்தில் தான் கண்ட மிக மோசமான நரகம் அதுவென்று அப்பொழுது ஐ.சி.ஆர்.சியின் தென்னாசியாவுக்குப் பொறுப்பான அதிகாரி கூறினார்.உதவிக்கு யாரும் வராத அந்த ஒடுங்கிய கடற்கரையில் தனித்து விடப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கு எதிராக உலகின் பெரும்பாலான நாடுகள் ஒன்றாக நின்றன.அல்லது ஈழத்தமிழர்களுக்கு எதிரான தரப்புகளோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட்டுச் சேர்ந்திருந்தன.ஐ.நா. போரில் நேரடியாகத் தலையிடாமல் விட்டதன்மூலம் இனப்படுகொலையை மறைமுகமாக அங்கீகரித்தது.

இந்தியாவும் சீனாவும் பிராந்தியத்தில் ஒன்றுக்கொன்று நட்பு நாடுகள் அல்ல. ஆனால் இரண்டு நாடுகளுமே ஈழத்தமிழர்களுக்கு எதிராக ஒரேகோட்டில் நின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் பிராந்தியத்தில் எதிரிகள். ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரே கோட்டில் நின்றன. சீனாவும் அமெரிக்காவும் உலக அளவில் நட்பு நாடுகள் அல்ல.ஆனால் ஈழத்தமிழர்களுக்கு எதிராக இரண்டும் ஒன்றாக நின்றன. உலகில் பிராந்திய மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் தங்களுக்கு இடையே பகைவர்களாகக் காணப்படும் நாடுகள் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒன்றாக நின்றன. அப்பொழுது எந்த ஒரு நாடும் அதை இனப்படுகொலை என்று கூறவில்லை.இப்பொழுதும் எத்தனை நாடுகள் கூறுகின்றன?அனைத்துலக நீதியின் மீது நம்பிக்கையிழந்த பின்னரும்கூட கடந்த 15 ஆண்டுகளாக விடாமல் போராடும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக வழக்குத் தொடுக்க இந்தக்கொடிய உலகில் யாருண்டு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org